[illegible]

[illegible]

16 July 1928

JL
211, N15AB
N28.141.
187489

கொக்கோகம்! கொக்கோகம்!!

என்று குதூகலத்துடன் கூவிக்கொண் டிருப்போர்க்கும்,
இன்பரச நூல் தேவை தேவையென்று
ஏக்கமுற் றெழுதிக்கொண் டிருப்போர்க்கும் ஆவலைத் தீர்த்து
ஆனந்தத்தை ஊட்டும் அதியற்புத நூல்.

வெளிவந்துவிட்டது! வெளிவந்துவிட்டது!!

அந்நூல் எது?

# இன்பவாழ்க்கையின் இரகசியங்கள்

## (இரண்டாம் பதிப்பு)

அழகிய சீமை கலிகோ பைண்டு செய்யப்பட்டது.

## இதன் விலை ரூபா 2.

கண்ணைக் கவரத்தக்க அநேக ஆப்டோன் படங்களுடன் 400-பக்கங்களுக்குமேல் அழகிய பெதர்வெயிட் பேபரில் சுத்தமான எழுத்தில் அச்சிடப்பட்டுள்ளது.

இது, காதலர்க்கு இன்பந்தரும் நூதனநூல்; போகானந்தத்தை விரும்பும் பூமான்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த ஆனந்த இரகசிய சாஸ்திரம்.

உலகத்தில் ஆண்மக்களும், பெண்மக்களும் ஒரேவிதமான அன்புடையவர்களாய் ஒருவர்மீதொருவர் உண்மைக்காதல் கொண்டு, ஒருவரையொருவர் மணந்து கூடிக்களிப்புற்று, நற்சந்ததிகளைப் பெற்று, இல்லற நீதிகளை வழுவாமற் செய்து வாழ்ந்து வருவதே இன்ப வாழ்க்கையாம்; இத்தகைய வாழ்வை அடைதற்குரிய மார்க்கங்களை உணர்ந்து கொள்வதற் கேதுவாக நம் முன்னோர்கள் கொக்கோகம் முதலிய மதன நூல்களையும், வேறு பல அகப்பொருள் நூல்களையும், தமிழிலும், வடமொழியிலும் செய்துவைத்திருக்கின்றனர்; அன்னிய நாட்டார்களும், அராபி, ஹிந்துஸ்தானி, கன்னடம், தெலுங்கு, நாகரம், மராட்டி, இங்கிலீஷ், பிரெஞ்சு முதலிய பற்பல பாஷைகளில் இத்தகைய இன்பரச நூல்கள் பலவற்றை வெளியிட் டிருக்கின்றனர். எனினும் நம்தமிழ் நாட்டிலுள்ளவர்களிற் பெரும்பான்மையோர் அந்நூல்களைக் கிரமப்படி கற்றுக் கொள்ளாததால், இன்ப வாழ்க்கையின் இரகசியங்களைத் தெரிந்து கொள்ளாதவர்களாய்க் கலவி யின்பத்தை யிழந்து கவலைகொண்டு துன்புறுகின்றனர்; மணஞ்செய்தும் மகிழ்ச்சியின்றி வருந்துகின்றனர்; மனைவி யிருந்தும் மைந்தரைப் பெறாமல் வாடுகின்றனர்; புருஷனிருந்தும் புத்திரரைப் பெறாமல் புலம்புகின்றனர்; பணமிருந்தும் குணமில்லாமல் பரிதபிக்கின்றனர்.

ஆதலின், இப்பேர்ப்பட்டவர்கள் இக்குறைகளினின்றும் நீங்கி காதல் இன்பத்தை உள்ளவாறுணர்ந்து அனுபவித்து, இல்வாழ்க்கையை நல்வாழ்க்கையாக நடத்திப் போனந்தக் கடலில் மூழ்கி, நற்சந்ததிகளைப் பெற்று, மறுமைப் பயனையும் அடைதற் கேதுவாயிருக்கும்படி பற்பல இன்ப மார்க்

21 AUG 1928

கங்கள் நிறைந்த இந்நூல் இப்போது இனிய தமிழ்நடையில் வெளியிடப் பெற்றிருக்கிறது. இதில் நமது பூர்வீக கோக்கோக சாஸ்திரத்தின் சாராம்சங்களும், அகப்பொருள் நூல்களின் கருத்துக்களும், தேகதத்துவ சாஸ்திரங்கள், வைத்திய சாஸ்திரங்கள் முதலியவற்றிற் கூறப்பட்டிருக்கும் பல அரிய விஷயங்களும், நாகரம், தெலுங்கு, கன்னடம், மராட்டி, அராபி, இந்துஸ்தானி, பார்ஸி, இங்கிலீஷ், பிரெஞ்ச் முதலிய பாஷைகளிலுள்ள இன்பரச நூல்களின் கொள்கைகளும், இன்ப வாழ்க்கையின் இரகசிய முறைகளும், அவற்றிற்குப்பொருத்தமான--மனத்தையும் கண்ணையும் கவரும் ஆப்டோன் படங்களும், லயன் பிளாக்குகளும், இன்னும் இல்வாழ்க்கைக்கு இன்றியமையாதனவாகிய அநேகம் விஷயங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இந்நூல், சிலர் எதையெதையோ தப்பான தமிழில் எழுதி விநோதப் பெயருடன் வெளியிட்டிருக்கும் சில ஏமாற்றப் போலிப் புத்தகங்களைப் போன்றதன்று. இதில் அடங்கி யிருப்பனவாக இதனடியிற் காட்டப்பட்டிருக்கும் விஷயங்களைக் கொண்டே இப்புத்தகத்தின் உண்மை உயர்வை உணர்ந்து கொள்ளலாம். இது மிகவும் உயர்ந்த பெதர் வெயிட் பேப்பரில் சுத்தமாக அச்சிடப்பட்டு அழகிய சீமைக் காலிகோ பைண்டிங் செய்யப் பெற்றுள்ளது; மிக உயர்ந்த ஆப்டோன் படத்தோடு கூடிய மேல் கவரும் உள்ளது. இதனை வாங்கிப்படிப்போர் உண்மைக்காதல் என்பது இன்னதென்பதையும் இன்னவிதமானவர்களை மணம் புரிந்தால்தான் இன்பம் ஏற்படுமென்பதையும், இல்வாழ்க்கையில் இன்னவித மண கிரமங்களை அனுசரித்தால்தான் அளவற்ற ஆனந்தமுற்று, அழகிய சந்ததிகளைப் பெற்று ஜீவித்திருக்கலா மென்பதையும் உணர்ந்து இவ்வுலகத்தில் அடைய வேண்டிய இன்பத்தையும், மறுமையின்பத்தையும் அடைவார்கள். இதனை ஒவ்வொரு குடும்பத்தினரும் வாங்கி வாசிக்கலாம்.

---

## மேற்கண்ட நூலின் விஷய அட்டவணை.


1

1. கடவுளும், புருஷார்த்தங்களும்.
2. கடவுள் வடிவம்.
3. மக்கள் இயற்கை.
4. மக்களின் உயர்வுக்குக் காரணமென்ன.
5. புருஷார்த்தங்கள்.
6. ஆசிரமங்கள்.

2

7. தேகத்தின் அங்கங்களும், அவைகளின் வேலைகளும்.
8. தேகமும், நிராமியத்திரமும்.
9. தேகத்தின் மூன்று பெரும் பிரிவுகள்.
10. எலும்புக்கூடு.
11. எலும்புகளின் தொகை.
12. நரம்புகள்.
13. உணவுண்பதும் சுவாசிப்பதும் ஏன்?
14. இருதயம்.
15. இரத்தத்தின் வேறுபாடு பதார்த்தங்களும்.
16. ஆகாரம் இரத்தமாக மாறுவதெப்படி?
17. ஆகாரங்களின் வகைகள்.
18. அசுத்த நிவாரண அங்கங்கள்.
19. நரம்புகள்.
20. மூளையும் அதன் பிரிவுகளும்.
21. பஞ்சேந்திரியங்கள்.

3

22. ஆண் பெண் பகுப்புக்கள்.
23. ஆண் ஜாதிப் பிரிவுகள்.
24. முயல் ஜாதிப் புருஷனுடைய குணங்கள்.
25. மான் ஜாதிப் புருஷனுடைய குணங்கள்.
26. விருஷப ஜாதிப் புருஷனுடைய குணங்கள்.
27. அசுவ ஜாதிப் புருஷனுடைய இலக்ஷணங்கள்.
28. பெண்களின் ஜாதிப் பிரிவுகள்.
29. பத்மினி ஜாதிப் பெண்ணின் அங்க அடையாளங்களும், இலக்ஷணங்களும்.


187489




30. சித்தினிப் பெண்ணின் குணங்கள்.
31. சங்கினி ஜாதிப் பெண்ணின் குணாதிசயங்கள்.
32. ஹஸ்தினி ஜாதிப் பெண்ணின் குணங்கள்.
33. பெண்மான், பெட்டைக்குதிரை, பிடியானை ஜாதிப் பெண்கள்.
34. ஸ்திரீபுருஷ ஜாதி ஒற்றுமைகள்.
35. நற்பொருத்தமுள்ள ஸ்திரீ புருஷர்களும், அவர்கள் குழந்தைகளும்.

4

36. பெண்களின் ருது காலமும் அதன் விவரங்களும்.
37. பெண்களின் பருவங்களும், வயதும்.
38. ருதுவும், சிரோஸ்நான நிலையும், ஆகாராதிகளும்.
39. ருது வாவ தென்னை?
40. மாதவிடாயின் தாத்பரிய மென்னை.
41. மாதவிடாயின் இரத்த அளவு.
42. நாகரீக மடைந்த ஸ்திரீகளும், மாதவிடாயும்.
43. ருதுப் பருவத்தை அடைந்த பெண்களை அறிவதெப்படி?
44. மாதவிடாயும், அதன் பலனும்.
45. ருதுவாகும் திதிகளின் பலாபலன்கள்.
46. புஷ்பவதி யாகும் வார பலன்.
47. ருதுவாகும் நக்ஷத்திர பலன்.
48. ருதுவாகும் மாத பலன்.
49. ருதுவாகும் யோகங்களின் பலாபலன்.
50. ருதுவாகும் இராசிகளின் பலாபலன்கள்.
51. ருதுவாகும் பகல் இரவுகளின் பலன்கள்.
52. மாதர்கள் வீட்டுக்கு விலக்கமாயிருக்கும் நாட்களின் பலன்கள்.

5

53. விவாகத்தைப் பற்றிய விஷயங்கள்.
54. விவாக மென்ப தென்னை?
55. மண வாழ்க்கையின் உட்கருத்து.
56. மண வாழ்க்கையின் கவலைகள்.
57. மண வாழ்க்கையை வெறுக்கக் காரணங்கள் என்ன?
58. மணவாழ்க்கையின் பயனும் அதனை அடையும் மார்க்கமும்.
59. மணமும் குருட்டு நம்பிக்கைகளும்.
60. கலியாணமும் வயதும்.
61. தம்பதிகளின் வயதில் தாரதம்மியம்.
62. பாலிய விவாகங்களும், அவற்றின் கெடுதல்களும்.
63. பாலிய மனைவியும், வயது சென்ற புருஷனும்.
64. விவாக முறைகளும், பற்பலதேச வழக்கங்களும்.
65. நம் நாட்டின் எண்வகை மணங்கள்.
66. ஜார்ஜ் ஸ்டெர்ன்ஸ், கலியாணத்தைப்பற்றிக் கூறுவன.
67. மாப்பிள்ளைகள், கவனிக்கவேண்டிய விஷயங்கள்.
68. கலியாணப் பெண்கள் கவனிக்க வேண்டியவைகள்.
69. கலியாணமும், பெற்றோர்களின் கடமையும்.
70. குலப் பெண்களும் வேசித்தனமும்.
71. இந்து சாஸ்திரப்படி மணஞ்செய்து கொள்ளத்தக்க கன்னிகைகள்.
72. மணவாழ்க்கைக் குரிய நற்குண மாதர்களின் தன்மைகள்.
73. மணவாழ்க்கைக் குதவாத தீய மாதர் தன்மை.

6

74. ஜனனேந்திரியக் கருவிகளைப் பற்றிய விஷயங்கள்.
75. ஸ்திரீகளின் ஜனனேந்திரியங்கள்.
76. ஆண்மக்களின் ஜனனேந்திரியக் கருவிகளும், அவற்றின் உபாங்கங்களும்.
77. இந்திரியம்.

7

78. சுகபோகங்கள்.
79. சங்கமத்திற்குரிய காரணங்கள்.
80. சங்கம வகைகள்.
81. கிரம சங்கமம்.

184. மலடிகளை அறியும் விதம்.
185. மலடுநீங்க சூரிய பூஜை.
186. ,, சந்திர பூஜை.
187. கருப்பை நோய் கொண்டிருத்தலை அறியும் விதம்.
188. ஆண் மலடு.
189. ஆண் பெண் மலட்டிற்கு மருந்து.

10

190. ஆண் பெண்களுக் குண்டாம் வியாதிகள்.
191. ஸ்திரீ சம்பந்தமான வியாதிகள்.
192. மாதவிடாய் சம்பந்த வியாதிகள்.
193. பெண்களுக் கேற்படும் குலோரோஸிஸ் என்னும் நோய்.
194. சினைப்பை வீக்கம்.
195. கருப்பாசய வீக்கம்.
196. கருப்பாசயப் புண்.
197. கருப்பாசயக் கட்டி.
198. கருப்பாசயப் பிளவை.
199. அரி ரணங்கள்.
200. ஆண்மக்களுக்குண்டாம் வியாதிகள்.
201. இந்திரிய ஸ்கலிதம்.
202. பீஜ ரோகங்கள்.
203. மேக ரோகங்கள் அல்லது பெண்பிள்ளை வியாதிகள்.
204. மேகரோக காரணங்கள்.
205. மேகரோக பரிகாரங்கள்.
206. முதிர்ந்த பிரமேகம் அல்லது கிளீட்.
207. ஷாங்க்ராயிட் வியாதி.
208. அரையாப்பு.
209. கிரந்திப் புண்கள்.

11

210. முஷ்டிப் பிரயோகம் அல்லது தனக்குள்தானே இன்பமநுபவித்தல்.

12

211. மாதர்களின் ஒழுக்க முறைகள்.
212. வாழ்க்கைப் பிரிவுகள்.
213. பெண்கள் கல்வி கற்கும் பருவம்.
214. பெண்கள் கணவனுடன் கூடி வாழும்போது கைக்கொள்ள வேண்டிய முறைகள்.
215. பெண்கள் முதுமைப் பருவத்தில் நடக்கவேண்டிய கிரமங்கள்.

13

216. பெண் கல்வியும் அதைப்பற்றிய விஷயங்களும்.
217. கல்வியின் அவசியம்.
218. பண்டைக்காலப் பெண்களும், கல்வியும்.
219. கல்வியால் பெண்கள் துன்மார்க்க ராவாரா என்பதைப் பற்றிய விஷயங்கள்.
220. பெண்களுக்கு எத்தகைய கல்வி வேண்டும் என்பது.
221. பெண் கல்வியால் ஏற்படும் நன்மைகள்.

14

222. நகைகளும், நம் நாட்டுஸ்திரீகளும்.
223. நகைகளின் ஆரம்பம்.
224. நகையாசையால் உண்டாகும் கேடுகள்,
225. சிறு பிள்ளைகளின் கொலையும் நகையாசையும்

15

226. ஜனத்தொகையும் மக்கட் பேறும்.
227. ஜனத்தொகையைப்பற்றி மால்தஸ் என்பாரின் அபிப்பிராயம்.
228. ஜனத் தொகையைப் பற்றி டார்வின் பிளேடோ கொள்கை.
229. ஜனத் தொகை சம்பந்தமாக ஏற்பட்ட மால்தஸ், முதலியவர்களின் கொள்கைகளைப் பற்றிய அபிப்பிராயங்கள்.
230. உயிர் நூற்புலவர் கூறும் பிற விஷயங்களும்.
231. ஜனத் தொகை சம்பந்தமான மால்தஸ் கொள்கையும், இந்தியாவும், சீனாவும்.
232. மேனாடுகளும் ஜனத் தொகையும்.
233. ஜனத்தொகையும் காந்தியடிகளும்.

16

234. பிள்ளைப் பேறும் பெண்களின் உரிமைகளும்.



235. பிள்ளைப் பேறு விஷயத்தில் பெண்களுக்கு உரிமை அவசியமா என்பதைப்பற்றிய விஷயங்கள்.
236. சம்போகத்துக்கு அழைக்கும் உரிமை யாருடைய தென்பது.
237. மானிட இயற்கையும் பெண்களும்.

17

238. பெண்களும் சமத்துவ உரிமைகளும்.
239. ஆணும் பெண்ணும் சரி சமமானவர்கள் என்பது.
240. சுய உரிமையும், அநுபவ விஷயங்களும்.
241. பண்டைக்கால ஸ்திரீகளும் உரிமைகளும்.
242. கணவனுக்கும், மனைவிக்கும் உள்ள உரிமைகள்.
243. நம் நாட்டு ஸ்திரீகளின் உரிமை எந்நிலையி லிருக்கிறது என்பது.

18

244. தேகாப்பியாசமும், அதனால் ஏற்படும் நன்மைகளும்.
245. தேகாப்பியாசத்தின் அவசியம்.
246. தேகாப்பியாசத்தா லேற்படும் நலன்கள்.
247. அளவுக்கு மீறிய தேகாப்பியாசத்தால் ஏற்படும் கெடுதல்கள்.
248. தேகாப்பியாசங்களின் வகைகள்.
249. உலாவுதல்.
250. தேகாப்பியாசத்திற் கேற்ற காலம்.
251. தேகாப்பியாசம் செய்த பின் அநுசரிக்க வேண்டிய விதிகள்.

19

252. நால்வகைக் குணங்களும் மாதர்களும்.
253. பெண்களின் நால்வகைக் குணங்கள்
254. நாணமும் ஆடைகளும்.
255. நிர்வாணத்தின் கருத்து.
256. நிர்வாணமும் போலிச் சாமிகளும்.
257. ஆடைகளின் வகைகள்.
258. ஆடைகளும் மேனாட்டு ஸ்திரீகளும்.
259. ஆடையும், காம உணர்ச்சியும்.

20

260. வேறுபல விஷயங்கள்.
261. மஞ்சளின் மேன்மை.
262. காபி, தேயிலை, கோகோபானங்களினால் நேரும் கேடுகள்.
263. புகையிலையின் கெடுதி.
264. ஆடையில் தீப் பிடித்தலும், அதற்குரிய பரிகாரமும்.
265. நீர்நிலைகளில் தவறி விழுவோர் கவனிக்க வேண்டியவை.
266. பாம்பு, தேள்கடி முதலிய விஷஜந்துக்களால் நேரும் அபாயங்களைத் தடுக்கும் வழிகள்.

21

267. அமிர்த நிலை.
268. அமிர்த நிலையும் அதைக் கண்டுபிடிக்கும் வழியும்.

22

269. ஸ்திரீகள் முக்கியமாய்க் கவனிக்கவேண்டிய சில நெறிகள்.

23

270. விதவா விவாகம்.
271. விதவையும், தாரமிழந்தவனும் அநுசரிக்கவேண்டியவை.
272. கைம் பெண்களும் விதவா விவாகமும்.

24

273. மக்களும், ஆயுட்காலமும்.

25

274. பேரின்பமும் மக்களும்.
275. பக்திநிலை.
276. யோகநிலை.
277. ஞானநிலை.

அழகிய சீமை கலிகோ பைண்டுள்ள இதன் விலை ரூ. 2.

---

ஆனந்தபோதினி ஆபீஸ்,
தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

ஆசிரியரின்றி ஆங்கிலந் தெரிந்துகொள்ளும் ஆனந்த

# ஆங்கில பாஷா போதினி.

மூன்றாம் பதிப்பு.

எம்.ஏ., எல்.டி. பட்டம் பெற்ற ஆங்கில போதகாசிரியராகிய திருவாளர் எம். ஷண்முக சுந்தர முதலியா ரவர்களால் இயற்றப்பெற்ற உயர்ந்த திருத்தங்களோடும், சிறந்த அமைப்புக்களோடும், நிறைந்த போதனைகளோடும் இப்பதிப்பு வெளிவந்திருக்கிறது.

800-பக்கங்களுக்குமேல் நிக்குகாகிதத்தில் அச்சிடப்பட்டு சீமைகாலிகோ பைண்டு செய்யப்பட்டது.

பற்பல கதைகளும், பாரதக்கதைகளும், ஸ்ரீ கிருஷ்ணர் சரித்திர சுருக்கமும் அடங்கியது. அவற்றிற்குப் பொருத்தமான அழகிற் சிறந்த 16-ஆப்டோன் படங்களுடன் கூடியது.

ஆர்டருக்கு முந்துங்கள். விலை ரூபா 2-0-0

ஆனந்தபோதினிச் சந்தாதாரர்களுக்கு ரூ. 1-8-0

இக்காலத்தில் இங்கிலீஷ் இராஜ பாஷையாயிருப்பதால் அதை எல்லோரும் கற்றுக்கொள்ள வேண்டியது அவசியமா யிருக்கின்றது. அப்படிப் படிக்காத சிலர், பல சங்கடங்களை அடைகின்றனர். ஆதலின், அத்தகையினர் கற்றுக்கொள்வதற் குதவியாயிருக்கும்படி ஆங்கில பாஷையைத் தமிழ் மக்களுக்கு எளிதிற் போதிக்கும் அரிய போதனாமுறை நூலாகிய இது நம் ஆனந்தபோதினிச் சந்தாதாரர்களும், மற்றையருமாகிய நண்பர் பலர், பல மாதங்களாக வேண்டிக் கொண்டபடி எம்மால் வெளிப்படுத்தப் பெற்றிருக்கின்றது.





இதனைச் சிரத்தையுடன் படிப்பவர் பணச் செலவில்லாமலும், வேறெவ்விதக் கஷ்டமில்லாமலும் மிக எளிதில் இங்கிலீஷ் பேசவும் படிக்கவும் எழுதவும் கற்றுக்கொள்ளலாம். ஆயிரக் கணக்கான பணச்செலவு செய்து 10 வருஷம் படிப்பதனால் எவ்வளவு ஆங்கிலத்தேர்ச்சி யுண்டாகுமோ அவ்வளவு தேர்ச்சியை ஒரு மாதம் அல்லது 40-நாளில் இப்புத்தகத்தின் உதவியைக்கொண்டு அடைந்து, ஆங்கிலத்தை அதிவிரைவில் படித்துக்கொள்ளலாம். மனிதர் தாமே சுலபமாக இங்கிலீஷ் கற்றுக்கொள்ளத் தக்க மார்க்கங்களெல்லாம் இதில் விளக்கமாக அமைக்கப்பெற்றிருக்கின்றன.

இதில் இதுவரை வெளிவராத நூதன பாடமுறைகளெல்லாம் வெளியிடப்பட்டிருக்கின்றன. இன்னும் ஒரு ரூபா முதல் 10 ஆயிரம் ரூபாவரை சம்பளப்பட்டிக் கணக்கு, வட்டிக் கணக்கு, ஒவ்வொரு தேசத்திலும் ஏற்படும் மணிவித்தியாசம், அன்னியதேச நாணயமதிப்பு முதலியனவெல்லாம் தெளிவாக விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது.



சுவாமி விவேகானந்தர்



ரவீந்திர நாத டாகூர்
இந்திய கவிச் சக்ரவர்த்தி
(19-ம் பக்கம் பார்க்க)

இனாம்! இனாம்!! இனாம்!!!

சந்தா நேயர்களே! நீங்கள் புதிய சந்தாதாரர்களைச்
சேர்ப்பீர்களானால் உங்களுக்குக் கீழ்க்கண்ட
விவரப்படி வெகுமதி அளிக்கப்படும்.

1. ஒரு சந்தாதாரரைச் சேர்ப்பவர்களுக்கு நமது ஆனந்தபோதினி விபவ வருஷத்திய பஞ்சாங்கம் ஒன்று இனாமாகக் கொடுக்கப்படும்; அல்லது 3 அணா விலையுள்ள எமது சொந்தப் பிரசுர புத்தகங்களில் ஒன்று அனுப்பப்படும்.

2. ஒரே தடவையில் இரண்டு சந்தாதாரர்களைச் சேர்ப்பவர்களுக்குப் புதிதாக நமது ஆபீஸில் வெளி வந்திருக்கும் 6 அணா விலையுள்ள "ஓயாச் சிரிப்பு" என்னும் புஸ்தகம் கொடுக்கப்படும்.

3. ஒரே தடவையில் மூன்று சந்தா நேயர்களைச் சேர்ப்பவர்களுக்கு எமது சொந்தப் பிரசுரங்களில் 10 அணா விலையுள்ள புஸ்தகங்களில் ஏதாகிலும் ஒன்று அனுப்பப்படும்.

4. ஒரே தடவையில் 8 சந்தாதாரர்களைச் சேர்ப்பவர்களுக்கு எமது இரண்டு ரூபாய் விலையுள்ள ஆனந்த ஆங்கில பாஷா போதினி என்னும் புஸ்தகமாவது, இன்பவாழ்க்கையின் இரகசிய மென்னும் புஸ்தகமாவது பரிசளிக்கப்படும்.

குறிப்பு:—சந்தாதாரர்களைச் சேர்த்துப் பணத்தை மணியார்டர் செய்பவர்களுக்கு மாத்திரமே மேற்கண்ட இனாம் கொடுக்கப்படும். வி.பி.யில் பத்திரிகை அனுப்பும்படி எழுதுகிறவர்களுக்கு டை இனாம் கிடையாது.

இனாம் புஸ்தகங்கள் எமது சொந்தச் செலவிலேயே அனுப்பப்படும்.

ஓம்
பரப்பிரஹ்மணேநமஃ

# ஆனந்தபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்.

(ALL RIGHTS RESERVED.)


| தொகுதி | விபவஹு ஆடிமீ ௧உ | பகுதி |
|---|---|---|
| 14 | 1928ஹு ஜூலைமீ 16உ | 1 |


## கடவுள் வணக்கம்.

"வானாதி பூதமா யகிலாண்ட கோடியாய்
மலையாகி வளைகடலு மாய்
மதியாகி யிரவியாய் மற்றுள வெலாமாகி
வான்கருணை வெள்ள மாகி
நானாகி நின்றவனு நீயாகி நின்றிடவு
நானென்ப தற்றிடாதே
நானா னெனக்குளறி நானாவி காரியாய்
நானறிந் தறியாமை யாய்ப்
போனா லதிட்டவலி வெல்லவெளி தோபகற்
பொழுதுபுகு முன்கண் மூடிப்
பொய்த்துயில்கொள் வான்றனை யெழுப்பவச மோவினிப்
போதிப்ப தெந்த நெறியை
ஆனாலு மென்கொடுமை யனியாய மனியாய
மார்பா லெடுத்து மொழிவேன்
அண்டபகி ரண்டமு மடங்கவொரு நிறைவாகி
யானந்த மான பரமே." (1)

"பாயப் புலிமுன மான்கன்றைக் காட்டும் படியகில
மாயைப் பெரும்படைக் கேயலக் காவெனை வைத்தனையோ
நீ யெப் படிவகுத் தாலுநன் றேநின் பெருங் கருணை
தாயொத் தடியர்க் கருள்சச்சி தானந்த தற்பரமே." (2)

"அறியாயோ வென்னையுநீ யாண்டநீ சுத்த
வெறியாய் மயங்கவுமேன் விட்டாய்—நெறிமயங்கிக்
குன்றுஞ் செடியுங் குறுகுமோ வையாவே
கன்றுகெட்டாற் றாயருகே காண்." (3)

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
21 AUG 1928
MADRAS

## அரும்பொருள் விளக்கம்.

1. “இவ்வண்டங்களும், இவற்றின் புறத்தேயுள்ள அண்டங்களும் உள்ளடங்கும்படி ஒப்பற்ற பரிபூரணமாகி நிறைந்து ஆனந்தமான பெரிய பொருளே! ஆகாய முதலிய பஞ்ச பூதங்களாகி, சமஸ்தகோடி அண்டங்களாகி, மலை, கடல், சந்திரன், சூரியன் ஆகி, மற்றுமுள்ள எல்லாமாகி, கருணைப் பிரவாகமாகி, நானுகி நின்றவனும் நீயே; அப்படியாகி நின்னிடவும் அடியேன் நான் என்னும் அகங்கார மொழியாது, நான் நான் என உளறிப் பல விகாரமுடையவனாய், அறிந்தும் அறியாமை யுடையவனாய், (மனம் போன போக்கிலேபோகத் துணிகின்றேன்; அவ்வாறு) போனால், (அது) என்னுடைய கெட்ட அதிட்டவல்லமையே ஆகும்; அதனை வெல்லுதல் எளிதில் முடியாது; பொய்த்தூக்கங் கொள்பவனை எழுப்ப முடியுமோ? (முடியாது); ஆதலின், இனி எனக்குப் போதிப்பது எந்த மார்க்கத்தை? ஆனாலும் என் கொடுமை அனியாயம்! அனியாயம்!! இதனை எவரிடம் எடுத்துக் கூறுவேன்” என்பது இதன் கருத்து.

இறைவனே நீ எல்லாமாய் நான் என்பவனுமாகி நின்றும், நான் எனக்கொரு சுதந்தரமின்றி யிருந்தும், நான் என்னும் தன்மை நீங்காது என்னைச் சுதந்தரனாகக் கருதிப் பல விகாரங்களுக்குட்பட்டு உண்மை யுணர்ந்தும் உணராதவனாய்ப் போனேன்; இது எனது துரதிஷ்டமே; பொய்த் தூக்கம் தூங்குவோனை எழுப்புதல் முடியுமோ? முடியாது; இதுபோல் உண்மை யுணர்ந்தும் அறியாமையில் மூழ்கியிருக்கும் எனக்கு எந்த நன்னெறியையும் போதித்து என்னை உண்மை மார்க்கத்தில் திருப்புதல் இயலாது; இதை எவரிடம் கூறுவேன் என்று ஆசிரியர், உண்மை யுணராதிருக்கும் தமது நிலைமையை இதில் கூறுகின்றார்.

இங்ஙனம் கூறியதனால், தமக்கு உண்மை நெறிகாட்ட இயலாவிடினும் காட்ட வேண்டுமென்று வேண்டுகின்றார். ஈசன் எல்லாமாய் நிற்பன் என்பதை, “தானே கடன் மலையாதியுமாய் நிற்குந், தானே திசையொடு தேவருமாய் நிற்குந், தானே யுடலுயிர் தத்துவமாய் நிற்குந், தானே யுலகிற் றலைவனுமாமே” என்னும் திருமந்திரப் பாடல் விளக்கும்.

அகிலம்=எல்லாம். இரவி=சூரியன். நானு=பல. அதிட்டம்=பார்வைக்கெட்டாதது.

2. “மான், தன் கன்றைப் புலிமுன் காட்டி மறைந்ததுபோல, நீ என்னை உலக மாயையிற் சிக்க வைத்தனை; நீ எப்படிச் செய்தாலும் நன்றே” என்று மாயையிற் சிக்கி இடருறுந் தன்மையை இதிற் கூறினார்.

படை=ஆயுதம்; மாயையாகிய ஆயுதம்.

3. பசுவின் கன்று வழி தவறிவிட்டால் அது காட்டிலும் செடியிலும் மயங்கித் திரிதலையமாட்டாது; தாய் தானே தேடிவந்து அதனருகிற் சேர்ந்து அதனை ஆதரித்துக்கொள்ளும்; அதைப்போல் என்னை எப்பொழுதும் ஆண்ட நீ (இப்போதும் ஆளக் கடமைப்பட் டிருக்கிறாய்); அப்படி ஆண்ட நீ, நான் சித்தங்கலங்கி மயங்கும்படி ஏன் செய்தாய்? என்னை நீ அறியாயோ” என்று ஆசிரியர் இதில் பகவானை வினவுகின்றார். இதனால் தமது மாயையை நீக்கியருள வேண்டுகின்றார்.

குறுகல்=அணுகுதல், கெட்டால்=தவறினால்.

*

# ஆனந்தபோதினி

விபவஹு

ஆடிமீ கஉ

## ஆனந்தபோதினியின் 14-வது ஆண்டு.

நம் போதினியின்மீது ஆர்வமிக்க அன்பர்களே!

கலியுகாதிஹு 5017, இராக்ஷஸஹு ஆடிமீ 1வ இங்கிலீஷ் 1915ஹு ஜூலைமீ 16வ வெள்ளிக்கிழமை கிருஷ்ணபக்ஷம், சதுர்த்தி திதி, மக நக்ஷத்திரத்தில், செந்தமிழ் நாட்டில் சிறப்புற்று விளங்கிவரும் இம்மாத சஞ்சிகையானது, சென்னையைச் சார்ந்த வியாசர்பாடியில் உள்ள சாது நிலையத்தில் எழுந்தருளியிருந்த ஸ்ரீலஸ்ரீ கரபாத்திர சிவப்பிரகாச சுவாமிகள் திருக்கருணையால் சூட்டப்பெற்ற “ஆனந்தபோதினி” என்னும் அழகிய பேருடன், தமிழ்மக்கள் மனத்தில் ஆனந்தம் பொங்கியெழ உதயஞ்செய்தது. மிகப்பெரியாராகிய சுவாமிகளின் அனுக்கிரகத்தால் இது வெளிப்போந்ததாகலின், தோன்றிய நாள் தொடங்கி, ஆண்டாண்டு தோறும் அளவற்ற சிறப்புடன் வளர்ந்தோங்கித் தமிழறிஞர் பலருடைய ஆதரணையை அதிகமாகப் பெற்று, இப்போது இருபதினாயிரம் பேர்களுக்கு மேற்பட்ட சந்தாதாரர்களை யுடையதாய்த் திகழ்ந்து வருகின்றது. முன்வருடங்களைக் காட்டினும் சென்ற 13-வது வருடத்தில் நேயர்கள் இப்போதினியின்மீது மிக்க அபிமானம் செலுத்தி வந்திருக்கிறார்கள்; புதிய சந்தாதாரர்களாகவும், ஜீவிய சந்தாதாரர்களாகவும் பலர் சேர்ந்திருக்கின்றனர்; சந்தாதாரர்களிற் பெரும்பான்மையோரும் இவ்வாண்டின் சந்தாத் தொகையைச் சென்ற ஆனிமாதத்திலேயே அனுப்பி நமக்குச் சிரமமில்லா திருக்கும்படி பேருதவி செய்தனர். முன்பண மனுப்பாதிருந்த சிலரும் வி. பி. யில் சஞ்சிகை பெற்றுக்கொண்டார்கள். சிறந்த கல்விமான்கள் பலர் கட்டுரைகளெழுதிப் பேருதவி புரிந்து வந்தார்கள்; பல சந்தாதாரர்கள் புதிய சந்தாதாரர்களையும் சேர்த்துப் போதினியை ஆதரித்து வந்தனர். இவர்கள் இங்ஙனம் செய்துவந்த பேருதவி என்றென்றும் மறக்கற் பால தன்று, கொண்டாடற் பாலதே.

இவர்களுடைய அபிமானம் அதிகரித்திருப்பதைக்கொண்டே நம்போதினியை இம்மாத முதல் 56-பக்கங்களுள்ளதாகவும், ஆப்

டோன் படங்களுடனும் வெளிப்படுத்திவரத் தீர்மானித்து அவ்விதமே இச்சஞ்சிகை இப்போது வெளிவந்திருக்கிறது. இன்னும் சந்தாதாரர்களின் ஆதரவானால் 64 பக்கங்களுடன் வெளிப்படுத்த உத்தேசித்திருக்கிறோம்.

ஆதலின் நண்பர்கள் இதற்குமுன் போதினியை ஆதரித்து வந்ததுபோலவே இனியும் ஆதரித்துவரக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

நம் பத்திரிகை இவ்வாறே என்றென்றும் வளர்ந்தோங்கவும், சந்தா நேயர்களும், பத்திரிகாபிமானிகளும், விஷயதானம் புரிவோரும், சிறந்த செல்வமும், நிறைந்த ஆயுளும் பெற்று ஆனந்த வாழ்வுடன் இன்புறவும் லோகரக்ஷகனாகிய பகவான் திருவருள் புரிவானாக. ஓம் தத் ஸத். பத்திராதிபர்.

---

# மாதர் செவியமுது.

ஒரு நாட்டின் உயர்வுக்கும், மக்களின் மகிழ்ச்சிக்கும் காரணமா யிருப்பவர்கள், மாதர்மணிகளே. அவர்கள் நல்ல நிலையில் இருந்தால் மாத்திரமே ஒவ்வொரு குடும்பமும் செவ்விதில் நடைபெறும்; ஆண் மக்களும் மனமகிழ்ச்சியும், பெருஞ் சிறப்பும், இன்பவாழ்க்கையு மெய்துவார்கள்; அறமுந் தலையெடுத்தோங்கும்; கடவுள் பணி, பெரியோர் வழிபாடு முதலியனவும் முட்டின்றி நடைபெறும். கீர்த்தியும் தலை சிறந்து விளங்கும். இவற்றால் நாடு சிறக்கும்; பெண்கள் தங்களுக்குரிய உயர்ந்த ஒழுக்கங்களைக் கொள்ளாத நாடு எவ்வகைச் செல்வம் பெற்றிருப்பினும் இழிவுடையதேயாகும். ஆதலின் நம் நாடு நலம்பெறுதற்கு-பண்டைய சிறப்பினின்றும் பிறழாதிருப்பதற்கு-நம் நாட்டுப் பெண்மணிகள் மேற் கொள்ளவேண்டிய சீரிய ஒழுக்கங்களை அவர்களுடைய செவிக்கமுதமாக விளக்குவாம். இம்மாதம், நம் போதினிக்கு 14-வது ஆண்டின் தொடக்கமாதலால், புதுவருட விருந்தாக நம் சகோதரிகளின் பொருட்டு இந்நல்லுரை யமுதை வெளியிடல் மிகப் பொருத்தமுடையதாம்.

பண்டைக்காலத்தில் நம் நாட்டு மாதர்கள் ஒழுக்கத்தில் சிறந்தவர்களாயும், கற்பரசிகளாயும், கல்வியில் தேர்ந்தவராயும், வீரமிக்காராயும், அறம்வளர்த்த அன்னையராயுமிருந்து வந்தனரென்பதற்குச் சரித்திர நூல்களிற் பல ஆதாரங்கள் காணப்படுகின்றன. அவற்றையெல்லாம் நூல்களின் மூலமாகத் தெரிந்துகொள்ளலாம்.

இத்தகைய மேன்மைகள் பொருந்திய நம் இந்திய சகோதரிகள், பிற்பட்ட காலத்தில், கால விகற்பத்தாலும், பெருநோக்கில்லாத சில ஆண்மக்களாலும் தாழ்த்தப்பட்டார்கள்; அடுப்பூதும்



வேலைக்கே உரியவர்களென்று பலராலும் கருதப்பட்டார்கள்; வீட்டிற்குள் ஓர் அஃறிணைப்பொருளைப்போல் அடக்கிவைக்கப்பட்டார்கள். கல்வியானது அப் பெண்மக்களுடைய அறிவைக் கெடுத்துவிடுமென்று சிலரால் கருதப்பட்டது; பெண்கள் கல்வி கற்கும் வழக்கம் பெரும்பான்மையும் இல்லாமல் நிறுத்தப்பட்டது. இக்காரணங்களால் வீரம்பொருந்திய நம் மாதர்கள் வீட்டிற்குள் ஒடுங்கினார்கள்; கல்வியிற் சிறந்த நம் பெண்மணிகள் புலனற்ற பொறிகளையுடைய பொம்மைகளைப் போன்று வதிந்தார்கள்; அறிவிற்சிறந்த நம் அரிவையர் பலரும் பேதையர் என்னும் பட்டமேற்றார்கள்; உலக இயற்கை முழுவதும் உணர்ந்திருந்த நம் உத்தமிக ளெல்லோரும் ஒன்றுமறியாத பிராணிகளெனக் கருதப்பட்டார்கள். ஆண்மக்களால் அடிமைகளைப் போலவும், விலங்கினங்களைப்போலவும் நடத்தப்பட்டார்கள்; பெண்களுக் கென்ன தெரியும் என்று இகழ்ந்துரைக்கப்பட்டார்கள். அறிவற்ற செய்கையைச் செய்யும் ஒருவனைப் பார்த்துச் சிலர், 'நீ என்ன பெண்பிள்ளையா' என் றிகழ்ந்துரைப்பதற்கும் உதாரணப் பொருளாயினர்.

பெண்மக்கள் இந்நிலையிலேயே சில ஆண்டுகட்கு முன்வரையிருந்துவந்தனர். பண்டைய நாகரிகந் தலைக்காட்டவும், நூதனக் கல்விமுறை யோங்கவும் சில ஆண்டுகட்கு முன்னிருந்து சீர்திருத்தக் காரர்களாகிய பல அறிஞர் வெளிப்போந்து, மாதர்க்குக் கல்வியறிவை அவசியம் ஊட்டவேண்டு மென்பதையும், சுயேச்சை கொடுக்கவேண்டுமென்பதையும், ஆண்மக்களோடு சகல காரியங்களிலும் சமத்துவ உரிமை கொடுக்கவேண்டுமென்பதையும் ஆங்காங்கே வற்புறுத்திக் கூறி இவற்றில் பெரிதும் முயன்று வந்தனர்.

அதன் பயனாக இந்தியா முழுவதிலும் பெண்கல்வி விருத்தியடைந்து பரவி வருகிறது; பெண்மக்களும் கல்வியில் தேர்ச்சியடைந்து உயர்தரப் பட்டங்கள் பெற்றுவருகின்றனர்; உபாத்திமைத் தொழிலும், மருத்துவத் தொழிலும், வேறு பல உத்தியோகத் தொழிலும் புரிகின்றனர்; சட்டசபை மெம்பர்களாகவும், நகரசங்க அங்கத்தினராகவும் இருந்துவருகின்றனர்; கவியரசிகளாகவும், நூலாசிரியைகளாகவும், பத்திரிகாசிரியைகளாகவும் இருக்கின்றனர்; மேடைகளிலேறிப் பெரிய விஷயங்களைப்பற்றிச் சொற்பொழிவுகள் நிகழ்த்திவருகின்றனர். இவையெல்லாம் ஒருவிதத்தில் அறிஞர் கொண்டாடத்தக்கவையே. எனினும் இவற்றோடு

நம் பெரியார் கூறியிருக்கும் உலகியல் நூல்களிலுள்ள கற்புடைப் பெண்டிர்க்குரிய உயரிய—உயிரினும் சிறந்த ஒழுக்கங்களும் கலந்திருந்தால் மாத்திரமே இவை சிறப்புள்ளனவும், கொண்டாடத் தக்கவைகளுமாகும். ஒழுக்கத்தைக் கைவிட்டுச் செய்யப்படும் காரியங்கள் எவ்வளவு உயர்ந்தவைகளாயினும் சிறப்பற்றனவேயாம். ஒழுக்கத்திற் சிறந்தோரே உயர்ந்தோராவர்; ஒழுக்கங்குன்றியவர் தாழ்ந்தவரே. பண்டைக்காலத்தில் நம் நாட்டில் கீர்த்தி பெற்ற பெண்மணிகளெல்லோரும் ஒழுக்கத்தை உயிர்போலப் பாதுகாத்தே அதன்மூலம் பிற உயர்ந்த காரியங்களிலும் இசை பெற்றார்கள். ஒழுக்கங்கெட்டோரெல்லோரும் நூல்களால் இகழப்பட்டே வந்திருக்கின்றனர்.

இங்ஙனம் சீலமே பிற உயர்வுகளுக்கெல்லாம் அடிப்படையாயிருந்தும், இப்போது கல்வித் துறையிலும், பிறவற்றிலும் முன்னேற்றமடைந்திருக்கும் பெண்மணிகளிற் சிலரே அந்த உயிரினும் சிறந்த ஒழுக்கத்தின் உயர்வைத் தெரிந்துகொண்டு அதன்வழி நின்றொழுகி வருகின்றார்கள். பெரும்பான்மையோர் குளிக்கப் போய்ச் சேற்றைப் பூசிக்கொள்வார்போன்று, நாகரிகத்தில் தலைசிறந்து நிற்க முயன்று நம் நாட்டு உயர்ந்த நூற்கொள்கைகளாகிய இந்தியமாதர் சீலத்தைக் கைவிட்டவராயிருந்து தங்கள் போக்கே மேலான போக்கென்று இறுமாப்படைந்து வருகின்றனர்.

கல்வி கற்கவேண்டுமென்று சில மேதாவிகள் போதித்ததைக் கொண்டு சில மாதர்கள், சுயமொழிக் கல்வியையும், நம் உயர்ந்த நெறிகளமைந்த நூற்கல்வியையும் புறக்கணித்து மிகுதியும் ஆங்கிலக் கல்வியையே அவாவிக் கற்று வாயினாற் சுலபமாகச் சொல்லிவிடும் ஒரு பெரும் பட்டத்தைப் பெற்றுத் திகழ்கின்றனர்; ஆங்கிலத்திலேயே கவிகளும், நூல்களும் அளவற இயற்றி அகமகிழ்கின்றனர்; ஆங்கிலமொழியிலேயே எந்த மேடைகளிலும் ஏறிப் பிரசங்கமாரி பொழிகின்றனர். எவரோடும் எதையும் ஆங்கிலத்திலேயே பேசுகின்றனர். ஆங்கில நூல்களால், நம் இந்திய நூல்களைப் போன்ற அரியபெரிய நீதிகள் போதிக்கப்படாமையால் அவர்கள் கடவுள் வழிபாடு, பெரியோர் வழிபாடு, பதிபக்தி முதலிய ஒழுக்கங்களைக் கைநழுவவிட்டு விடுகின்றனர். எதிலும் பெண்மக்கள், ஆண்மீக்களோடு சம உரிமையும், சுயேச்சையும் பெறவேண்டுமென்று சில சீர்திருத்தக்காரர்கள் போதித்ததைக்கொண்டு சில



மாதர்மணிகள் பெண்களின் சுயேச்சையும், சமத்துவ உரிமையும் இன்னவையென்றுணராமல் நம் இந்திய மாதர் ஒழுக்கத்திற்கு நேர் விரோதமாக, ஆடவர் கூட்டமே நிறைந்திருக்கும் ஓரிடத்தில் தனித்தவர்களாய்ப் போய் வேலையில் அமர்கின்றனர். பருவமடைந்த மங்கையர், குமரப்பருவமுள்ள வாலிபர்கள் கூடியிருக்குமிடத்திற் புகுந்து அவர்களோடு கலந்து கல்விகற்கின்றனர்; பல ஆடவர் கூட்டத்தினிடையே தனி நின்று பேசுகின்றனர்; ஆண்மக்களின் உடம்பில் உராய்ந்துகொண்டு கூட்டங்களில் உட்காருகின்றனர். சமுத்திரக்கரை மணலில் தனியே உட்கார்ந்து தம்முடன் கல்விகற்கும் மாணவர் சிலரையோ, தமக்குப் பாடங் கற்பிக்கும் ஆசிரியர் ஐந்தாறு பேர்களையோ தம்மைச் சுற்றிலும் உட்காரவைத்துக்கொண்டு அவர்களோடு விநோத வார்த்தைகளைப் பேசியும், அங்கசேஷ்டைகளைச் செய்தும் விளையாடுகின்றனர்; தனியாய் மோட்டாரிலோ, பைசிகிலிலோ ஏறிச்சென்று ஒரு தோட்டத்திலோ, சிங்கார வனத்திலோ, ஏரிக்கரையிலோ, தடாகத்தின் மருங்கிலோ, சமுத்திரக் கரையிலோ இறங்கி அங்குவந்து தங்கள் வரவுக்கெதிர்பார்த்திருக்கும் நண்பர்களாகிய வாலிபர்களுடன் கைகோத்துச் சென்று உல்லாசமாக ஓரிடத்தமர்ந்து விநோத சம்பாஷணைகள் செய்து மகிழ்கின்றனர்; அன்னிய ஆடவரின் கையைப் பிடித்துக் குலுக்குகின்றனர்; தட்டுத் தடையின்றி எந்த ஆடவருடனும் தனித்துச் சந்தித்துப் பேசுகின்றனர். தங்களை வீட்டிற்குத் தேடிவரும் ஆடவருடன் தனியறையில் உட்கார்ந்து பேசுகின்றனர்; அப்போது தம் சொந்த நாயகரும் அங்கு வரக்கூடாதென்று சட்டதிட்டங்கள் ஏற்படுத்திவிடுகின்றனர்; எவர் துணையுமின்றித் தனியே கப்பலேறி அன்னிய நாடுகளுக்குப் பிரயாணஞ்செய்து ஆங்காங்குள்ள புறநாட்டு ஆடவரோடு பழகி வருடக் கணக்காகச் சஞ்சரித்துத் திரும்பி வருகின்றனர். அன்னிய ஆடவர்களாகிய அரசர்க்கோ, பிரபுக்களுக்கோ, பெண்கள் கற்பொழுக்கத்துக்கு நேர் மாற்றமாகத் தங்கள் கையினாலே மாலை சூட்டுகின்றனர்.

சில நவீன நாகரீக சீர்திருத்தக்காரர்கள், “நம் பெண்மணிகள், ‘பழயன கழிதலும் புதியன புகுதலும், வழுவல கால வகையினானே’ என்ற முறைப்படி பழய சில வழக்கங்களை யொழித்துவிட்டுப் புதிய நாகரிக வழக்கங்களைக் கொள்ளவேண்டும்; மேல்நாட்டுப் பெண்மணிகளிடமிருக்கும் உயர்ந்த பழக்க வழக்கங்களை அநு

சரிக்கவேண்டும்" என்று போதித்ததின் பயனாகச் சிலவனிதாரத்தினங்கள், நம் நாட்டுப் பண்டைய கொள்கைகளில் கழிக்கவேண்டியவைகளாகிய சில பயனற்ற பழக்கவழக்கங்களைக் கழிக்காமல் உயர்ந்த ஒழுக்கங்களை நழுவவிட்டுக் கண்டோர் அருவருக்கத்தக்க மேல்நாட்டுப் பெண்மணிகளின் இழிந்த ஒழுக்கங்களை மேற்கொண்டொழுகி வருகின்றனர்; தங்களைப் பார்ப்போர் இந்தியநாட்டுப் பெண்களென்றுணர்ந்துகொள்ளாதபடி மேல்நாட்டு மாதர்களைப் போலவே உடையணிகின்றனர்; பூட்ஸ் முதலியவற்றைப் பாதங்களில் அணிந்து குப்புற்று வீழ்பவர்களைப்போல கெந்திக் கெந்தி நடக்கின்றனர்; மங்களகரமான கழுத்தை அமங்கலமான வெறுங் கழுத்தாக்கிக் கண்ணுக்குத் தெரியாத பொற்சங்கிலிகளை அணிந்து ஒய்யாரமாக உலவுகின்றனர்; சில மாதர் முக்கியமான காரணங் கருதி மூக்குக்கண்ணாடி யணிந்திருக்கின்றனர்; பலர் எவ்வித காரணமுமின்றியே மூக்குக்கண்ணாடி யணிந்து மேல்நோக்கி நடக்கின்றனர்; சிலர் மேல்நாட்டு மாதர்கள் தலைமயிரைக் கத்தரித்துவிடுவதைப் பார்த்துவிட்டுத் தாங்களும் கழுத்துவரை விட்டுக் கத்தரித்துவிடுகின்றனர்; மஞ்சளணிவதை மறந்தனர்; குங்குமமணிவதை ஒழித்தனர்: சோப்பிட்டு முகத்தைக் கழுவி அதில் வெள்ளைப் பொடி யொற்றி வேஷம்போட ஆரம்பித்துவிட்டனர்; கைவிரல் நகத்தை அனுசாரமாக எப்பொழுதும் வாயில் வைத்துக் கடிக்கும் வழக்கத்தை மிகவும் பிரீதியாகக் கொண்டனர்; ஒரு வாசனையுமில்லாத பலநிறக் காட்டு மலர்களைத் தலையிற் சூடிக் கொண்டைகுலுக்கித் திரிகின்றனர். பொது மகளிர்போல வேடந்தரித்துப் படம் பிடித்துக்கொள்கின்றனர்; நாடக மேடைகளில் வேடந் தரித்து நாடகமாடுகின்றனர்; பல ஆடவர்களுக்கு நடுவிலிருந்து பாட்டுப் பாடிக் கச்சேரி நடத்துகின்றனர்; உடம்பு கெடுமென்று கருவைக் கலைக்கத் தொடங்குகின்றனர்; மாமன் மாமிமார்களைப் படாதபாடுபடுத்தி வேலைக்காரர்களைப்போல் நடத்துகிறார்கள்; கணவர்களிடத்தில் மரியாதையின்றி அவர்களை அடிமைகளைப்போல நடத்துகிறார்கள். இன்னொரு மானக்கேடான செய்கை யிருக்கிறது; சொல்லவும் வாய் கூசுகின்றது; மேல்நாட்டுக்காரர்களுக்கு எப்பொழுதும் ஒழுக்கத்தில் திருஷ்டி கிடையாது; அவர்கள் வேறு சில உயர்ந்த குணங்களிற் சிறந்தவர்களாயிருப்பினும், மனிதராற் செய்ய முடியாத அரும்பெருங் காரியங்களைச் செய்து முடிப்பினும் சீலத்தைமாத்திரம் கைவிட்டவர்கள்; மனம் விரும்பியதை-நல்ல



தோ கெட்டதோ-செய்து முடித்தின்புறும் கொள்கையுடையவர்; அவ்விஷயத்தில் பிறர் எள்ளிநகையாடுவதையும் கவனிக்கமாட்டார்கள்; ஆண் பெண்கள் கலந்து பேசுவதிலும், உறவாடுவதிலும், ஒருவர்க்கொருவர் விருப்பத்தை விளைவித்துக்கொள்வதிலும் வெட்கத்தை அறவே விடுத்தவராவர்; அதனால், அவர்களில் ஆண்மக்கள் பெண்களைக் கட்டி யணைத்தபடியே பலரறியத் தெருக்களில் உலாவுகின்றனர்; ஆண் பெண்கள் பக்கத்தில் மனிதர் இருப்பதையும் கவனிக்காமல் சரச வார்த்தைகளாடி மகிழ்கின்றனர்; ஆண்மக்களும், பெண்மக்களும் ஒருவரையொருவர் கட்டியணைத்துக்கொண்டு கெந்திக் குதித்துக் களியாட்டாடுகின்றனர்; ஒருவனுடைய மனைவியாயிருப்பவள் மற்றொருவனோடு தனித்து வண்டியிலேறிச் சோலையிலோ, வேறிடத்திலோ இறங்கித் தனித்துலாவுகிறாள்; முற்காலத்தில் உடையைமாத்திரம் உடல் தெரியாமல் அணிந்துகொண்டிருந்த அந்த மேல்நாட்டு மாதர்கள் இக்காலத்தில் நாகரிகத்தில் முதிர்ச்சியடைந்துவிட்டதால் கைமூலந்தெரியும்படியாகவும், நெஞ்சின் பாகத்திற் பாதி வெளியிற் றெரியும்படியாகவும் மேலுடையணிகிறார்கள்; காலுக்குத் தங்கள் உடல் நிறம்போலவே பனியன் போட்டு அதைப் பார்ப்பவர் இயற்கை உடம்பென்றே மயங்கும்படி செய்து முழங்கால்வரை பாவாடைபோன்ற ஒருவகை வட்டுடையணிந்து அதனோடு பைசைகிலில் ஏறிச் செல்கின்றனர்; அவருடைய 'கோலத்தை அறிவுடையார்காண அருவருப்புக் கொள்வார்கள்.

இவர்கள் இவ்வாறு அசட்டுத்தனங்களைச் செய்வதைப் பார்த்துவிட்டு மேற்கூறிவந்த நம் புது நாகரீகப் பூவை மாரும் இவர்களைப்போலவே உடல்தெரியும் ஆடைகளை அணிய ஆரம்பித்திருக்கின்ற்னர்; மற்ற ஆபாசச் செயல்களையும் சிறிது சிறிது செய்யத் தொடங்கியிருக்கின்றனர். இன்னும் எவ்வளவோ பல ஒழுக்க ஹீனமான செயல்களிற் புகுந்து வருகின்றனர்.

இங்ஙனம் இவர்கள் ஒழுக்க ஹீனமான காரியங்களைச் செய்து வந்தும் எவரும் இத்தீயொழுக்கங்களைக் கண்டித்து இத்தகைய மாதர்களைச் சீர்திருத்த முன்வருவதில்லை. பத்திரிகைகளில் வியாசங்கள் எழுதுவோரும், பிரசங்க மேடைகளிற் பேசுவோரும், மாதர்கள், மேற்கூறிய வழிகளிற் றிரும்பியதுதான் தேசமுன்னேற்றத்துக்கு இன்றியமையாததென்று இம் மாதர்களையும் இவர்

களுடைய கொள்கைகளையும் புகழ்ந்தெழுதியும், பேசியும் வருகின்றனர்; ஒழுக்கத்திற்குக் கட்டுப்பட்டிருக்கும் இதர மாதர்களையும் இவ்வழியிற் புகும்படி கிளர்ச்சி செய்துவருகின்றனர். இதனால் இந்த ஒழுக்கமற்ற வழக்கங்கள் மேலும் மேலும் பரவி வருகின்றன.

இந்த ஒழுக்க ஹீனங்களால் நேரும் அவமானங்கள் பல. பிறநாட்டார் இந்தியாவை இகழ்ந்துரைக்கவும் இடமுண்டாகின்றது. மாதர்கள் தனித்து வெளியேறுவதாலும், ஆடவரோடு பழகுவதாலும், அவருடன் நெருங்கி யிருத்தலாலும், மனம் ஒரு நிலைப்பட்டதன்றாகலின் கற்பொழுக்கத்துக்குப் பங்கமுண்டாகும். இழிதொழில்கள் நடைபெறற்கேதுவுண்டாகும். மாதர் பிற ஆடவரைத் தீண்டுவதாலும் ஸ்திரீதர்மங் கெட்டுப் பிறர் தீண்டற் கருவருத்தலாகிய பயிர்ப்பு என்னும் குணமும் பாழ்பட்டொழிகின்றது; மாதர்கள் தனியே தூரதேசப் பிரயாணஞ் செய்வதால் அன்னிய ஆடவருடன் கூச்சமற்றுப் பழகவும் பேசவும் அதனால் கற்பொழுக்கத்துக்குப் பங்கந் தேடிக்கொள்ளவும் இடமுண்டாகிவிடுகிறது. இப்படியே பெண்கள் தனித்து ஆடவர்க்கிடையில் பழகிச் செய்யும் தொழில்களினாலெல்லாம் அபாயத்திற் கிடமுண்டு. பெண்கள் தங்கள் கையினால் சொந்த நாயகருக்கே மாலையிடுவது இந்திய சாஸ்திரத்தின் முக்கிய விதி; அன்னியனுக்கு மாலையிடும் பெண்கள் கற்பொழுக்க முடையவர்களென்று கருதப்படமாட்டார்கள். ஆபாச நடக்கைகளைக் கொண்ட மேல்நாட்டு மாதர்களுங்கூட இவ்வாறு பிறன் கழுத்தில் பூமாலை சூட இசைவதில்லை. அப்படியிருக்க நம்மிந்திய மாதர்கள் அன்னியனுக்கு மாலை சூட்டுவது நம்மிந்தியரின் உயர்ந்த ஸ்திரீ தர்மத்தை அடியோடு நாசப்படுத்தியதாகும். மாதர்கள் சுயமொழியை விடுத்துப் பிறமொழிகளைக் கற்பதாலும், பட்டங்கள் வாங்குவதாலும், சொன்மாரி பொழிவதாலும், கவிகள் இயற்றுவதாலும், நூற்கள் இயற்றுவதாலும், பத்திரிகைகள் நடத்துவதாலும் சொந்த நாட்டிற்குக் கீர்த்தியை உண்டாக்குகிறவர்களாகமாட்டார்கள். இவற்றையெல்லாம் மேன்மையாகக் கொண்டாடும் மேதாவிகள் ஒவ்வொன்றுக்கும் பற்பல சமாதானங்கள் கூறுகின்றார்கள். "ஆடவர்கள் மாத்திரம் தனியே சஞ்சரிக்கும்போது ஸ்திரீகள் ஏன் அவ்வாறு வெளியேறிச் சஞ்சரித்தல் கூடாது?" என்கின்றனர். இது சரியான கேள்வியாகாது; ஆடவர்கள் வெளியே தனியாகச் சஞ்சரிப்பதில் அபாயமில்லை;



ஸ்திரீகள் தனித்து வெளியேறுவதில் அபாயமுண்டு; தனித்துச் செல்லும் பெண்களைக் கண்டால் அவர்கள்மீது கெட்ட சிந்தனை வைப்பது சில தூர்த்த ஆடவர்களின் இயற்கையாயிருக்கிறது; அதனால் உத்தமகுணமுடைய மாதரும் அபாயத்திற்குள்ளாக வேண்டி யிருக்கிறது; இக்காரணத்தினாலேயே பெண்மணிகள் தனித்து வெளிச் செல்வது கெட்டதென அறிஞரால் கருதப்படுகின்றது. சில நூதன விவேகிகள், "அது ஆடவர்கள் தப்பு; அதற்காகப் பெண் தனியே சஞ்சரிக்காமலிருக்கவேண்டுமென்று சொல்வது நியாயமாகாது" என்று கூறுகின்றனர். இதுவும் பேதைமையான கூற்று; உலகத்தில் மனிதபேதங்களில் கெட்ட சுபாவமுடையவர்கள் மலிந்திருப்பது இயற்கை. அவர்களிடம் சிக்கித் துன்பமடையாமலிருப்பது அறிவுடைமையே தவிர, அவர்களிடம் போய்ச் சிக்கித் துன்பத்தையும் அவமானத்தையும் அடைந்துகொண்டு, 'அது அவர்களுடைய குற்றம்; அவர்களுக்குப் புத்தியில்லாவிட்டால் நாங்களென்ன செய்வோம்' என்று சொல்வது புத்திசாலித்தனமாகாது. இன்னும் சிலர், "மாதர்கள் ஆடவர்கள் கூட்டங்களினிடையே புகுந்தாலென்ன? அவர்களைத் தீண்டினாலென்ன? அவர்கள்மேல் உராய்ந்துகொண்டிருந்தாலென்ன? மனத்தில் தீய எண்ணமுண்டானால் தானே கெடுதி; மனம் சுத்தமாயிருந்தால் ஒரு கெடுதியுமில்லை" என்று சொல்கின்றனர். அவ்வாறு எல்லோருக்கும் மனம் பரிசுத்தநிலையிலிருப்பதுதான் முடியாதகாரியம்; பெரும்பான்மையும் ஆடவர் ஸ்திரீகளைப் பார்த்தாலும் தீண்டினாலும் அவர்கள் மனத்தில் கெட்டசிந்தனையுண்டாவது இயற்கை; மனோதத்துவத்தையுணர்ந்தவர்களுக்குத்தான் இந்த உண்மை புலப்படும்; சிலர் மனத்தைப் பரிசுத்த நிலையில் வைத்துக்கொண்டிருப்பதாகவே கூறுவார்கள்; ஆனால் அவர்கள் மனம் அப்படி யிருப்பதில்லை; அவர்கள் தெய்வத்திற்கஞ்சித் தங்கள் மனத்தைத் தொட்டுப்பார்த்தால் தாங்கள் செய்வது நடிப்பென்பது அவர்களுக்கே விளங்கும்; எங்கோ அருமையாகச் சிலர்தாம் பரிசுத்தர்களா யிருப்பார்கள்; இக்காரணத்தைக்கொண்டுதான், ஸ்திரீகள் அன்னிய ஆடவரைத் தீண்டாமலும், பெரும்பான்மையும் முக்கியமான சந்தர்ப்பந் தவிர மற்ற சந்தர்ப்பங்களில் அவர்களின் பார்வைக் குட்படாமலுமிருப்பது நலமென்று விவேகிகள் கருதுகிறார்கள். சிலர்; மாதர்கள் ஆடவர் கூட்டத்தின் மத்தியில் நின்று பேசுவதாலும், பாடுவதாலும், நாடகம் நடிப்பதாலும் கெடுதியொன்றுமில்லை; தேசத்திற்கு நன்

மையே" என்கிறார்கள். இவற்றுள் மேடையில் பிரசங்கம் செய்தல் ஒருவாறு ஒப்புக்கொள்ளக்கூடியதாகும்; மற்ற இரண்டும் பொருந்தாச் செயல்களாம்; பிரசங்கம் செய்வதிலும் முதிர்ந்த வயதுள்ள பெண்கள் பேசுவதே பொருத்தமுடையதாகும்; இளம் பெண்கள் ஆடவர் கூட்டத்தினிடையே பேசுவதும், பாடுவதும், ஆடுவதும் சில தூர்த்த ஆடவர்க்குக் கெட்ட இச்சையை உற்பத்தி செய்துவிடத்தக்கவைகளேயாம். இத்தகைய ஆடல்பாடல் முதலியவற்றிற்குக் குல மாதர்கள் உரியவர்களாகார்கள். இக்காரணங்களைக்கொண்டே இவைகளும் பெண்களுக்குக் கூடாவென்று உண்மையறிவாளர் மறுக்கின்றனர். சிலர், "ஆங்கிலம் கற்று அதில் உயர்தரப் பட்டங்கள் பெற்றுப் பெண்கள் தேறுவதுதான் நல்லது; அதைக்கொண்டு பல தேசத்தவர்க்கும் விஷயங்கள் எடுத்துச் சொல்வதற்கும் எழுதுவதற்கும் அனுகூலமாயிருக்கும்" என்று சொல்லுகிறார்கள். ஆங்கிலம் எல்லா இடங்களிலும் பரவியிருப்பதால் அதைக் கற்றுக்கொண்டால் அதன்மூலம் எல்லோருக்கும் விஷயங்களை எடுத்துச்சொல்ல அனுகூலமாயிருக்குமென்பது உண்மைதான். ஆனால் சுயபாஷையில் ஞானமில்லாமல் அதைக் கற்றுக்கொள்வதால் பயனில்லை. நம் நாட்டுச் சாஸ்திரங்களை நன்குக் கற்று அவற்றின் கருத்துக்களை எடுத்துச் சொல்லுதற்கு மாத்திரம் போதுமானவரையில் இங்கிலீஷ் கற்றுக்கொண்டு புறநாட்டுப் பெண்களுக்கு நம் சாஸ்திரக் கொள்கைகளை வெளியிடுவதுதான் சிறந்ததாகும்.

சிலர், மேல்நாட்டுப் பெண்மணிகளைப் போன்ற நடையுடை பாவனைகளைக் கொள்வதும், பழையன கழிதலாக நம் பண்டைய இந்திய மாதர் ஒழுக்கங்களைத் தள்ளிவிடுவதும் தான் தேச முன்னேற்றத்திற்கு முக்கிய சாதனங்களாகுமென்று சொல்லுகிறார்கள். இது மிகவும் பைத்தியக்காரத்தனமான அபிப்பிராயம். இத்தகைய நடக்கைகளால் ஒரு தேசம் எப்பொழுதும் முன்னேற்றமடைந்துவிடாது; ஒரு நாட்டின் இயற்கைக்கும், சாஸ்திரக் கொள்கைக்கும் விரோதமான நடக்கைகளால் இழிவேயுண்டாகும். ஒரு தேசத்தை முன்னுக்குக் கொண்டுவருபவை கல்வியறிவு, நல்லொழுக்கம், வியாபார தந்திரம், கைத்தொழிற் பயிற்சி, விபசாயவிருத்தி, விடாமுயற்சி, மனவுறுதி, ஒற்றுமை முதலியவைகளே. இவற்றைக் கைக்கொண்ட எத்தேயமும் முன்னேற்றமடையும்.



இவற்றைக் கைவிட்டு மேற்கூறிவந்த தீயொழுக்கங்களை மாதர்கள் கைக்கொண்டு வருவதால் தேசம் முன்னேற்றமடையுமென்பதும், தேசத்திற்குக் கீர்த்தியுண்டாகுமென்பதும் அறிஞர் வெறுக்கத்தக்கவைகளாம். சில கேவலமான காரியங்களை இரகசியத்தில் செய்துகொண்டு மேலுக்கு மகா மேதாவிகளைப்போல் நடித்துத் தங்களுடைய தீய எண்ணங்கள் எளிதில் தட்டுத் தடையின்றி நிறைவேறுதற்பொருட்டுப் பெண்மக்கள் இத்தகைய ஒழுக்கங்கெட்ட காரியங்களையும், இவைபோன்ற இன்னும் எண்ணத்தொலையாத இழி செயல்களையும் செய்யுமாறு பெருங் கிளர்ச்சிசெய்து நம் புண்ணிய பூமியின் சிறப்பினை யொழிக்க வழிதேடி வருகின்றனர். இவர்கள் போக்கின்படியே நம் நாடு போய்க்கொண்டிருக்குமானால் இன்னும் சிறிது காலத்திற்குள், மேல் நாடுகளில் வாயினால் சொல்லத்தகாதபடி நடக்கும் சில ஆபாசச் செயல்களும் இந்தியாவில் வந்து புகுந்துகொள்ளுமென்பதில் ஐயமில்லை.

ஆதலின் இவற்றைத் தீவிரமாகக் கண்டித்து ஒதுக்கவேண்டும். இத்தகைய கிளர்ச்சிக்காரர்கள் வாயாடிகளா யிருப்பதாலும், கண்டனப் பிரசுரங்கள் தாறுமாறாக எழுதிப் பிரசுரிக்கக்கூடியவர்களா யிருப்பதாலும் இவர்களுடைய கொள்கைகளைக் கண்டிக்க எவரும் அஞ்சுகின்றனர். இக்காலத்தில் உலகத்தில் நற்போதனை செய்தற்கென்றமைந்தவர்களும், தீயொழுக்க முடையவர்களைக் கண்டித்தல் கூடாதென்னும் கருத்துடையவர்களாய்ப் புகழ்ந்தெழுதும் வழக்கத்தையே மேற்கொண்டிருக்கிறார்கள். அதனாலேயே தீய கிளர்ச்சிகள் ஒடுங்குவதில்லை.

நாம் இவற்றை இவ்வளவு தூரம் எழுதியதைக்கொண்டு பெண்களுக்குக் கல்வி கூடாதென்றாவது, மற்ற உரிமைகள் கூடாவென்றாவது சொன்னதாக நினைக்கக்கூடாது. அவர்களுக்கு அவை அவசியமே. ஆனால், இந்த மாதரின் உயரிய ஒழுக்கத்தைக் கைவிடாமல் அவற்றைக் கொள்ளவேண்டுமென்றே நாம் கூறுகிறோம். ஒழுக்கமென்னும் வேலிக்குள் நின்றே மற்ற காரியங்களைச் செய்யவேண்டுமென்று சொல்லுகிறோம். ஸ்திரீகள் சுதந்திரம் பெறுவதில் சில விதிகளை அனுசரித்து நீக்கத்தக்கவைகளை நீக்கிக் கொள்ளத்தக்கவைகளை மாத்திரம் கொள்ளவேண்டும். எப்படியெனில், கல்விகற்பதில் சுயபாஷையிலுள்ள நற்போத நூல்களையே மிகுதியும் கற்கவேண்டும்; தாம் கற்றவற்றை வேற்று நாட்டார்க்குணர்த்த அவசியமான அன்னிய மொழியைச் சிறிதளவு கற்றுக்கொள்ளவேண்டும்; சுயமொழியிலேயே நூல்கள் இயற்றவேண்டும்; பத்திரிகை நடத்தவேண்டும். பிரசங்கம் செய்வதில் பெரும்பான்மையும் பெண்கள் மாதர் கூட்டத்தினிடையே பேசவேண்டும்; ஆடவர் கூட்டத்தில் பேச நேர்ந்தால் முதிர்ந்த வயதுடையவர்களே பேசவேண்டும்; உத்தியோகம் செய்வதில் பெண்கள் சம்பந்தமான

இடங்களிலேயே வேலை செய்யவேண்டும்; தேச நன்மைக்கான கூட்டங்கள் சேர்வதில் பெண்களே தனித்துக் கூடவேண்டும்; அதன்மூலம் பல தீர்மானங்களைச் செய்து ஆட்சியாளர்க்குத் தெரிவிக்கவேண்டும்; பெண்களுக்கென்றே தனியாகக் கல்விச்சாலைகளை அமைக்கவேண்டும்; அவற்றில் பெண்களே ஆசிரியைகளாக ஏற்படவேண்டும். அவ்வாறே சங்கீதப் பள்ளிக்கூடமும் அமையவேண்டும். சங்கீதம் கற்றுப் பாடுவதும் பெண்கள் கூட்டத்தினிடையே பாடவேண்டும்; குடும்ப காரியங்களில் புருஷரைப் போலவே தாங்களும் பொறுப்பேற்றுச் செய்யத்தக்கவற்றைச் செய்யவேண்டும்; பெரும்பான்மையும் அன்னிய ஆடவருடன் கலந்து காரியங்கள் நடத்துவதையும், அவர்களைத் தீண்டுவதையும், தனித்து வெளியேறிச் சஞ்சரித்தலையும், தூர தேசத்திற்குத் தனியே செல்வதையும், நாடகத்தில் வேடந் தரித்தாடுவதையும் அறவே ஒழிக்கவேண்டும்; புருஷனையும், மாமி, மாமன் முதலியவர்களையும் அவமதித்தல்கூடாது; தெய்வ வழிபாட்டை மறத்தல் கூடாது; இடம்பத்தை விரும்பி வீண் செலவு செய்யக்கூடாது; அன்னிய நாட்டு ஆபாசக் கொள்கைகளை அறவே ஒழிக்கவேண்டும்; நம் நாட்டிற்குத் தக்க நடையுடை பாவனைகளையே கொள்ளவேண்டும்; உலகத்தில் ஆண், பெண் ஆகிய இரு வகுப்பாருக்கும் தனித்தனியே உரிய செயல்கள் இன்னவையென்று கடவுளால் இயற்கையிலேயே அமைக்கப்பட்டிருக்கின்றன; அந்த அமைப்பை மீறி ஆண், பெண் என்னும் பேதமின்றி மிருகசுபாவத்தை மேற்கொண்டொழுகுதல் கூடாது; தீய கிளர்ச்சிகளைச் செய்வோரின் போதனைகளைக் கேட்பது கூடாது.

ஆதலின், அருமைச் சகோதரிகளே! அன்னையரே! மேற்கூறிய ஒவ்வொன்றையும் நன்குக் கவனித்துத் தள்ளத் தக்கவற்றைத் தள்ளிக் கொள்வன கொண்டு ஒழுக்கத்தை என்றும் கைவிடாது ஒழுகுவீர்களாக. அங்ஙனம் செய்து வருவீர்களாயின் நம்நாடு நலம் பெற்று விளங்குவதோடு நீங்களும் இருமையினும் இன்புறுவீர்கள். உங்கள் நலங்கருதியும், புண்ணிய பூமியாகிய நம் இந்தியாவின் கௌரவம் குறையாதிருக்க விரும்பியும் இவற்றை விளக்கி வரைந்தோம். இதனால் எவரையும் குறைகூறினதாக நினைத்தல் கூடாது, பொது நலங் கருதி இந்நல்லுரை வெளிவந்ததாகக் கருதி இதனைப் பொன்போல் போற்றுவீர்களாக. எல்லாம் வல்ல இறைவன் நம்மெல்லோருக்கும் நன்மதி நல்கிக் கருணை புரிவானாக.

ஓம் தத் ஸத்.

# ஈசுரனும் இயற்கையும்.

**இயற்கையின் ரம்யம்.** அகிலம் சர்வேஸ்வரனுடைய உத்தியான வனம்! இவ்வுத்தியான வனத்தின் அமைப்பே இறைவனுடைய ஒப்பற்ற தன்மையைப் புலனாக்கும் இயற்கை. உயர்ந்த மலைகளும், அடர்ந்த வனங்களும், தொடர்ந்தோடும் அருவிகளும் இவ்வியற்கையின் அம்சங்கள். சகல ஜீவராசிகளையும் படைத்து, காத்து, சங்கரிக்கும் செயலும் இவ்வியற்கையின் மற்றோர் உயர்ந்த செய்கை. இயற்கையின் வடிவானவனே இறைவன். உயிருள்ள பிராணிகளைத் தோன்றச் செய்வது அக்கடவுளின் சிருஷ்டிநிலை. அவற்றிற்கு உணவளித்து இயற்கையின் உதவியாலேயே அவற்றின் வாழ்வை நடைபெறச் செய்தல் அன்னவனுடைய ஸ்திதிநிலை. அவற்றை மாயாரூபமான சடலத்தினின்று வேறுபடுத்துதல் அவனுடைய சங்காரநிலை. இம்மூன்று தொழில்களையும் புரிகின்றவன் அனைத்தையும் கடந்துநிற்கும் கடவுள். அவனுடைய செய்கையாவும் அவன் திருவிளையாடல்கள்! இத்திருவிளையாடல்களைப் புரியும் அவனும் இயற்கைவடிவானவன். இதனாலேயே உலக பந்தங்களினின்றும் விடுபட்ட பிரம்மரிஷிகள் அவனைத் துதித்தேத்த இயற்கை இன்பம் நிறைந்த ஆரண்யங்களில் வசித்து, காய் கிழங்கு கனிவர்க்கங்களை ருசியைக் கருதியுண்ணாது, இச்சையற்றுப் பசிவந்தபோது புசித்து, சூரியன் உதயமாகும் பொழுதும் அவன் அஸ்தமிக்கும் பொழுதும் இயற்கை இன்பத்தால் பரவசமாகி, அவனுக்கு அர்க்கியங்களைக் கொடுத்து இடைவிடாது அவனுடைய நாமஸ்மரணை செய்து கொண்டு காலங் கழித்தனர். காலையில் சூரியன் கிழக்கில் உதயமாகும்பொழுது ஓர் மலையடிவாரத்தினின்று விரைந்து வெளிக்கிளம்பும் ஜெகஜ்ஜோதியான அவனது சொரூபமும், அவனது கிரணங்கள் அருவிகளிலோடும் புனலிற்படுங்கால் அப்புனல் பளீர் பளீரென்ற பிரகாசத்தை வீசி, 'பொன்னி' எனப் பெயர் புனையும் வனப்பும் இயற்கையின் உன்னத நிலையை விளக்கும் இயல்புடையனவன்றோ! வனங்களில் கண்ணைக் கவரத்தக்கவிதமாய் மலர்ந்த மலர்களும், ஓடியலையும் மிருகங்களும், பசுமையான புற்களும், அதன் பரப்பில் பந்தமற்ற யோகியைப் போன்று துள்ளியோடும் மான்களும், மற்றவையும் இயற்கையின் அமைப்பினாலன்றோ காணப்படுகின்றன! இயற்கைக்கும் செயற்கைக்கும் நெருங்கிய சம்பந்தத்தை ஏற்படுத்தி இப்புவனத்தில் நடைபெறுவனவெல்லாம் இயற்கையின் ஆதரவிலேயே இயங்குமாறு செய்த அவ்வியற்கைக் கடவுளின் பெருமையை நாம் என்னென்று கூறுவோம்! இயற்கையான கடல் பொங்குவது போன்று அப்பெருமிதம் பொங்கி வழியுமன்றோ?

* * *

**இயற்கையின் இனிய வேலை.** இப்புவனத்தைச் சிருஷ்டித்ததும் இயற்கை! அதனிடத்து எண்ணரிய அறிவுகளைக் கொண்டு 'இது செய்யத்தகுந்தது, இது செய்யத்தகாதது, இவை பாபச்செயல்கள், இவை புண்ணியச் செய்கைகள், இது சற்சங்கம், இது துஷ்ட சகவாசம்' என்ற பேதத்தையறியும் மனித சமூகம் தோன்றியதும் அவ்வியற்கையின் செயலாலேயே! அம்

மனித சமூகத்தில் ஆண், பெண்ணென்ற பேத சரீரங்களைத் தோன்றச் செய்ததும் அவ்வியற்கையே! அவற்றிற்குக் காதல், கவர்ச்சி, பாஷை முதலியவற்றையும் இயற்கையே தந்தது. இம் மனுஷப்பிறவிக்குப் பசி, நித்திரை, தியானமென்ற ஜாக்கிர, சுவப்பன, சுழுத்தி அவஸ்தைகளையும், மண் பெண் பொன் என்ற மூவாசைகளையும், உயர்வுதாழ்வான பேதங்களையும் இவ்வியற்கையே கற்பித்தது. இயற்கையாகவே இம்மனித வாழ்வில் தர்ம, அர்த்த, காம, மோக்ஷ மென்னும் நான்குவித புருஷார்த்தங்களும் நிகழ்வனவாயின! மனித சமூகத்தில் ஏழை, செல்வன், அரசன், ஆண்டி ஆகிய அனைவரையும் அன்னவர் நிலைகளையும் உண்டாக்கியது இயற்கையே. அரசாங்கம் நடைபெறுவதும், மனிதன் ஓடியாடித் திரிந்து பொருள் தேடியுய்வதும், ஆடவர் பெண்கள்மீது காதல் கொள்வதும், காதிற் கினிமையைத்தரும் இன்ப கானங்களைக் கேட்டு இன்புறுவதும் ஆகிய அனைத்தும் இறைவனின் இயற்கைக் குணத்தின் பிரிவுகளே! இவைகள் கேளாதேவந்து கூறாதேபோகும் இயற்கைக்குண முடையன.

* * *

**இயற்கையின் செயல்கள்.** இயற்கை வடிவான இறைவனின் மற்றோர் அம்சமே அறம்! அதற்குத்தான் அறிவைப்புகட்டும் அபாரசக்தி உண்டு! இவ்வறிவினைப் புகட்டும் நூல்களே வேதம், உபநிடதம், சாஸ்திரம், கொரான் பைபிள், பௌத்த தர்மம், வேதாந்தம் முதலியன! இவற்றின் ஆசிரியன் கடவுளே! இந்நூல்கள் யாவும் ஆனந்த ஸ்வரூபியான அவன் அருள் வெள்ளத்தின் துளிகளே! அவையாவும் சர்வேஸ்வரனுடைய தன்மையையே ஆரம்பித்து அவனது நிலையையே கூறி முடிக்கின்றன. இறைவனே இயற்கை வடிவினனாதலின் அவைகளும் இயற்கை ஸ்வரூபங்களாம். இயற்கையின் இன்பத்தைப் படித்துணர்ந்த பாமரன் செயற்கை இன்பங்களை வெறுத்து இயற்கையின் பேரின்பத்தைப்பெற்று இன்புற நாடுகின்றான். இவனே மஹானாகின்றான். இயற்கையின் இன்ப அமுதத்தைப்பருகுகின்ற மஹான்களைக் கண்டு செயற்கையிற்சார்ந்த மனிதர்கள் போற்றுகின்றனர்; வணங்கித் துதிக்கின்றனர். இவையாவும் இயற்கையின் அம்சமான அறத்தின் செயல்களேயாம்.

* * *

**சமயங்களின் பெருமிதம்.** இயற்கையின் இயல்பாக மாநிலத்தில் பாஷைகளும், பல மதங்களும் தோன்றின. கிரிஸ்து நாதர் கிரிஸ்தவ சமயத்தையும், முகம்மதுநபி இஸ்லாமிய மார்க்கத்தையும் உலகிற் களித்தனர்; தியாகத்தையும், சத்தியத்தையும் தர்மத்தையும் நிலை நாட்டினர்; அன்பும் பரம்பொருளான இயற்கையும் ஒன்றென உணர்த்தினர்; அவ்வழிதாம் நின்று போதித்தனர். தற்கால ராஜஸ எதிர்ப்பு இம்மதங்கள் தோன்றிய காலத்து அந்நாடுகளிலில்லை; அம்மதாசாரியர்கள் சாத்வீக எதிர்ப்பின் சத்தியத்தைக் கடைப்பிடித்து நின்றனர்; பிறர் குற்றங்களுக்காகத்தாம் பல இன்னல்களுக்காளாயினர்; அறவழி நின்றனர். அவர்கள் வாயிலாக வந்த கிரிஸ்தவ வேதமும், குர்ஆனும் மேல் நாடுகளில் ஞானவிளக் கேற்றின. அம் மதங்களும் சமயஸ்தாபகர்களாக நின்ற தீர்க்கதரிசிகளின் நாமங்களும் இன்றளவும் மேல் நாட்டாரிடத்தில் மறையவில்லை. அந்தோ! கொள்கைகளே மங்கின. இயேசு நாதரின் ஆத்மபலம் வேறிடங்களில் குடியேறி விட்டது; மிருகபலம் தலைவிரித்தாடி, இயற்கை இன்ப நுகர்ச்சியை அழித்துப் பேராசையால் இரத்த வெறி பிடித்தலைகின்றது.



* * *

**பாரத பூமியின் தொல் சீர்.** நிற்க, இயற்கை இன்பம் நிறைந்த இந்திய நாடோ எம்பெருமானின் திருநந்தவனம். இதில் பல்வேறு சமயங்களாகும் புஷ்பச்செடிகள் அன்பு என்னும் புனலால் வளர்ந்தன. அச்சமயங்களின் உன்னத அறக்கடவுள், மலர்களாக அச்செடிகளின் உச்சியிலமர்ந்து, தன் மணத்தை வீசி ஆனந்தத்தையுண்டுபண்ணுகின்றார். அம்மலர்களாகிய கடவுளிடத்திருந்து அவற்றின் இதழ்களான வேதங்களும், உபநிடதங்களும், புத்த தர்மங்களும் விரிந்தன. 'புவனமிதிற் கலைமகளே ஆணுருவங்கொள நினைந்து போந்தா' வென்னும் சங்கரரும், மத்வர், இராமாநுஜர், தேசிகர், புத்தர் முதலான தீர்க்க தரிசிகளும் இயற்கையாக உலகிற்றோன்றி, அறக்கடவுளின் மணத்தாலாட்கொள்ளப்பட்டு, ஆனந்த பரவசர்களாகிச் சமயப்பிரசாரம் செய்ய வாரம்பித்தனர்; அறமென்ற இயற்கைத் தெய்வத்தை ஆராதித்தனர்; 'அன்பு' என்னும் ஆத்மாராமனின் அறப்பெருமை மனித சமூகத்திற் குன்றிய காலங்களில், அடியார்களும், ஆழ்வார்களும், ஆனந்தர்களும், பரமஹம்சர்களும் தோன்றினர்; தோன்றுகின்றனர். சமயாசாரக் கொள்கைகளை எடுத்தோதுவதே அவர்களின் அறம்! இப்பாரத பூமியாகிய நந்தவனத்திலுள்ள மனித சமூகத்தில் மிருகபலம் ஓங்கி, ஆத்மபலம் குன்றி, துஷ்டர்கள் நிறைந்து சிஷ்டர்கள் குறைந்து, ராஜசம் பெருகி, சாத்வீகம் குறுகி நின்ற காலங்களில் மிருகபலத்தை ஒடுக்கவும், துஷ்டர்களை முடிக்கவும், ராஜசத்தை அடக்கவும் அவ்வறக்கடவுளே மாயாசம்பந்தனாகி உலகிற்றோன்றித் தமது அறநிலையின் சத்தியத்தைப் பரப்பினர். இனியும் வந்துறுவேனென்று கீதா ரஹஸ்யத்திலும் பகவான் கூறிப் போந்தனர்.

* * *

**அறத்தின் முறையீடு.** இயற்கைத் தெய்வத்தின் வல்லமையால் மனிதன் உய்யும் வழிதேடலுக்குச் சாதகமான தர்மநூல்கள் பல அவளருளாற் றோன்றின. அவை இயல்பாகவே மனித உள்ளத்தில் கருணைவெள்ளத்தைப் பாய்ச்சுவன; மனிதன் மனத்தில் 'கற்பூரமலை படுதீப்பட்டாற் போன்ற' ஞானச்சுடர் ஏற்றுவன; அவ்விளக்கிற்கு 'அஹிம்சை' என்பதே அகலாகின்றது. அதனையுணர்த்தினான் பிரகலாதாழ்வான். அவ்வஹிம்சா தர்மத்தின் ஓர் சுடரான 'பற்றற்றான் பற்றினைப் பற்றுவிடுவதற்காகப்' பற்றுமாறு கீதை உணர்த்தியது; அதன் தாமரை மலரிற்பட்ட நீர்போன்ற நிலையைப் புத்தர் காட்டினார்; 'பொறுமை கடலினும் பெரி' தென்பதைத் தருமர் காட்டினார். இத்தருமத்தின் முடிவற்ற சப்தம் உலகில் என்றும் ஒலித்து நிற்கின்றது. அது

"மானிடனே! நீ உலகிற்றோன்றிய காரணத்தை இப்போதாகிலும் உணர்! நீ உலகத்தில் தொண்டு புரியவே தோன்றியவன்! நீ அத்தொண்டை யியற்று மாறு உன்னை ஆட்டுவிக்க ஆத்மா என்னுங் கடவுள் உன்னுள்ளேயே ஒளிர்கின்றான்! நீ ஜனித்த உலகம் அந்த இறைவனது ஆலயம். உன்னைச் சூழ்ந்திருக்கும் ஜீவன்களெல்லாம் உன்னைப்போன்றே சர்வேஸ்வரன் சந்நிதிக்கு வந்தவர்கள். நீ உனக்காகப் பிறக்கவில்லை! வாழ்வதில்லை! 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்ற வாக்கை மெய்ப்பிக்கவே நீ பிறந்தாய்! ஆகையால் உன்னைச்சுற்றி யுள்ளவர்களிடம் நீ அன்புகாட்டு; உன் அன்புபெருகி அருட் பணியாகட்டும்! நீ உன் சமூகத்திற்காகவே தோன்றியவனென்பதை அறி! உன் வாழ்வினின்று ஓர் உண்மையைத் தோன்றச்செய்! உனது சமூகம் அதனால் ஓர் உணர்ச்சியைப் பெறட்டும்! உனது சேவையால் உலகத்திலுள்ள அஞ்ஞானம் சற்று விலகட்டும்! துன்பங்கள் சற்று தணியட்டும்" என்று முறையிட்டுக்கொண்டிருக்கின்றது; நம்மை அவ்வறவழியை ஒழுங்குபடுத்தவே அழைக்கின்றது. உலகில் மனிதர்படும் கஷ்டநிவாரணக் கருத்தைக் கொண்டே அந்த சப்தம் நம்மைச் சிருஷ்டித்திருக்கின்றது. இயற்கையின் அறப்பணி யிதுவேயன்றோ!

* * *

மானிடர் நிலை. அந்தோ! அவ்வியற்கை அன்பாலெழுந்த ஒலியை மனித சமூகத்தின் செவிகள் ஏற்பன வல்லவாயின; மனித சமூகம் தனது சக்தியை மறந்தது; அதனிடத்து 'பரமாத்மா தன்னுள்ளே ஒளிர்கின்றார்' என்பதை அறியும் ஆற்றல் குன்றியது; அது தன்னையே யறியாது வீண்மதங் கொண்டது. தனக்கு உபதேசஞ் செய்யவந்த பெரியார்களின் பெருமையை மறந்தது. தனது மனச்சாட்சியையே மனிதன் நம்புவதில்லை. அதன் உத்தரவுப்படி நடப்பதை விட்டான்! உண்பதும், உறங்குவதும், பொருளீட்டுவதும், பிறரைத் துன்பப்படுத்துவதுமே தன்னுடைய இயற்கைப் பிறவியின் நோக்கமென்று எண்ணினான். சத்தியமும், அன்பும், பொறுமையும், நேசமும் இவனைவிட்டகன்றன. சுயாலப்பேய் இவனைப்பிடித்தாட்ட, பொறாமையும் பேராசையும் இவனிடம் குடி புகுந்தன. அவை காரணமாக நெறியினின்றும் வழுவி அதிகப் பொருளீட்டவும், மெலியாரை வாட்டவும், பிறர் பொருளை யபகரிக்கவும் இவன் முற்பட்டான். உலகில் அன்புவெள்ளம் வற்றிப்போய் இரத்தவெள்ளம் ஓடுவதாயிற்று.

* * *

நவீனக்காற்று. சங்கரர் போதித்த அறவழி யெங்கே! ஹிந்துமதத்தின் ஸ்தம்பங்களாக நின்ற வசிஷ்டர், விசுவாமித்திரர், பராசரர், வியாசர், வான்மீகி ஆகிய முனிவர்கள் நிகழ்ந்தநாட்டின் வனப்பம் எங்கே! இயேசுநாதர் குன்றின் மீதேறிப் போதித்த தர்மமெங்கே! கொந்தளிக்கும் கடலும் எற்றுக்கொண்ட சாந்தத்தை யுபதேசித்த அவருடைய உயர்ந்த கருத்துகளெங்கே சென்றன! அனைத்தையும் இயற்கைப் பெருமையற்ற செயற்கை வெள்ளம் அடித்துக்கொண்டு போயிற்று. ஒவ்வொரு சமூகமும் மற்ற சமூ





கங்களை ஒடுக்கவும், ஒவ்வொரு மதமும் மற்றைய மதங்களைக் கெடுக்கவும் முற்படுகின்றன. உலகத்தை, பொருள் சேர்க்குமிடமென்றும், போர்தொடுக்கும் களமென்றும், காமக்கடலென்றும் கூறுகின்றது நவீன உலகம்! மாயையான இருளில் மனித சமூகம் அகப்பட்டுக்கொண்டு தத்தளிக்கின்றது. இது இயற்கை வடிவான அறக்கடவுளின் சொரூப மறியும் உணர்ச்சி மனிதசமூகத்தில் குறைந்ததாலன்றோ ஏற்பட்டது!

* * *

தர்மதேவதையின் அழைப்பு. இந்நிலையினின்று நாம் மீள, "ஹே! புண்ணிய பாரதபூமியே! உனது இயற்கையி னழகு எங்கே! உன்னிடத்துச் செறிந்த வீரம் எங்கே! உயர்ந்த வேதங்களின் தாத்பரியங்கள் எங்குச் சென்றன! கண்ணன் பிறந்த புனிதநாடே! இராமன் தோன்றிய புனித வீடே! பாரதமக்களே! இப்புனிதநாட்டை அதர்மத்தின் ஆதிக்கத்திலிருந்து விடுவிக்க விரைந்து வாருங்கள்! அதுதான் உங்களது கடமை!" என்று இயற்கை வடிவான தர்மதேவதை யாவரையும் அழைக்கின்றாள். இந்த ஒலி மஹான்களின் மனக்காதுகளில் இடைவிடாது ஒலித்துக்கொண்டிருக்கின்றது. இந்த ஒலியிலீடுபட்டுப் பல மஹான்கள் நம் பாரத நாட்டில் அறத்தின் பணியை இயற்ற அவதரித்தனர். அவர்கள் இயற்கையான அறத்தின் மணத்தை—பக்திவாசனையைப் பரப்பினர்—பரப்புகின்றனர். இனியும் அவதரித்துய்யும் வழியைப் புகட்டவும் வருவார்.

* * *

அவதார புருடர்கள். ஈசுவரத்தன்மையான இயற்கையின் பெருமையை, தனிப்பட்ட செயற்கை பாழ்படுத்தி இவ்வுலகை அடிமையாக்கிய பரிதாபம் என்னே! அறக்கடவுளீந்த இயற்கையின் இன்பம்—விநோதம்—ஆனந்தம்—ஆனந்தபோதம்—இயம்பவும் எளிதாமோ? இறைவனே இயற்கைச்சொரூபி என்பதும், அவனாலாக்கப்பெற்ற உலகமும் இயற்கையும் அவனுடைய கடாக்ஷத்தின் வடிவமே யென்பதும், அவ்வுணர்ச்சி குன்றும்பொழுது ஆனந்தர்கள் பலர் தோன்றி, மனிதருள்ளத்தில், அறிவு வெள்ளத்தைப் பாய்ச்சுகின்றனரென்பதும் 'இவ்வியாசத்தால்' விளக்கமாம். வி. ச.

## கவி ரவீந்திர நாத தக்கோர்.

### முன்னுரை.

'உயர் கம்பன் பிறந்த தமிழ் நாடு' என்றார் பாரதியார். கவிகளாற் சிறந்தது நமது பாரத பூமி. தென்னாட்டில் பண்டை நாட்களில் கம்பர், புகழேந்தி, இளங்கோவடிகள் போன்ற புலவர் பெருமக்கள் திகழ்ந்தனர். வடநாட்டிலும் பவ பூதி, காளிதாஸன், பாணன் முதலான கவிகள் புகழ்தாங்கிப் புண்ணிய காவியங்கள் பலவியற்றிப் போந்தனர். வாழையடி வாழையென வருமடியார் குழாம்போலக் கவிகளும் தோன்றுகின்ற இப்பாரத நாட்டில் 'தக்கோர்' எனுங் கவி மரபொன்றுண்டு. அதில், பத்தொன்பதாம்

நூற்றாண்டில் மகரிஷி தேவேந்திரநாத தக்கோர் என்ற பெரியாரொருவரிருந்தார். இம்மகாநுபாவர் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர் காலத்தே யிருந்தவர். இவரையே, ஸ்ரீமத் விவேகானந்த சுவாமிகள் எனக் கீர்த்தி பெற்ற நரேந்திர நாதர் 'தாங்கள் கடவுளை நேருக்கு நேராகத் தரிசித் திருக்கிறீர்களா?' என்று வினவினார். இப்பெரியாரே ஸ்ரீராஜாராம்மோகன்ராய் அவர்கள் தாபித்த பிரம்மசமாஜத்தின் இரண்டாவது தலைவருமாவார். இவரது தந்தையார் துவாரகாநாத தக்கோர் என்பார் விக்டோரியா மகாராணியார் செங்கோலோச்சிய காலத்தில், இங்கிலாந்துக்குச் சென்றிருந்தபொழுது அரண்மனையில் உபசரிக்கப்பெற்றார். மேலும் அக்குடும்பத்தாரே வங்காளத்தில் பெரிதும் கௌரவிக்கப் பெற்றவர்கள். துவாரகாநாதரின் மூத்த திருக்குமாரரான துவஜேந்திரநாத் தக்கோர் மகா ஞானியென்று பெயர் பெற்றவர். இரண்டாமவர் முதல்முதலாக இந்தியன் சிவில் சர்வீஸில் தேர்ந்தவர்.

## பால்யம்.

கவிரவீந்திரநாதர், மகரிஷி தேவேந்திரநாத தக்கோரின் திருக்குமாரர்; 1861-ம் ஆண்டு பிறந்தவர். அவருக்கிளமை முதல் கலாசாலையிற் சென்று கற்பதில் மிக்க வெறுப்பேற்பட்டிருந்தது. பள்ளிக்கேகுமாறு பெற்றோர் பலவந்தப்படுத்துவது கண்டு, அவர் சுரம் வரவேண்டிய துன்பங்களையெல்லாம் தமக்குத்தாமே யிழைத்துக்கொள்வர். ஆனால் படிப்பில் அவருக்கு அளவற்ற ஊக்கமேற்பட்டிருந்தது. தாமாகவே பாண்டித்யமடைய அவர் இடைவிடாது முயற்சித்து வந்தார். அவர் இளமை முழுதும் எந்தக் கலாசாலைக்குஞ் சென்று வாசித்ததேயில்லை. சமய அறிவும், நல்லொழுக்கமும், இலக்கிய இலக்கண பாண்டித்யமும் அவருக்கு இயற்கையாகவே பெருகி வந்தன. அவருக்குச் சிறுபிராயம் முதல் கவி சேர்ப்பதிலும், எளிய நடையில் வசனம் வரைவதிலும் இயல்பான ருசி யேற்பட்டது. சில சிறு கவிகளும் வங்க மொழியில் வரைந்தார். ஆனால் முதலில் அவரது கவிகளுக்கு அதிக மதிப்பேற்படவில்லை. சீமைக்குப்போய்ச் சட்டம் படித்துவர வேண்டுமென்ற ஆசை அவரையும் விடவில்லை. ஆகையால், அவர் சீமைக்குப் போனார். போனபின் அதில் சாரமேது மிருந்ததாக அவருக்குப் புலப்படாமையால், தமது இயல்பிற்குப் பொருத்தமற்ற அத்துறையில் புக மனமில்லாமல் திரும்பினார் இந்தியாவிற்கு. அதுமுதல் ஒரே முயற்சியாக அவர் நூல்கள் வரையத்தொடங்கிப் பிரசித்தரானார். அவருடைய கவித்திறமும் பழுத்துச் சமயமெய்ஞ்ஞான பாகாயிற்று. அவர்வனைய தலைவர்களைப்போலக் காங்கிரஸில் சேர்ந்தும், சுற்றுப்பிரயாணஞ் செய்தும், சிறை வாசம்புரிந்தும், தாய்நாட்டின் விடுதலைக்காகப் பாடுபடுமியல்பினரல்லர். தலைவர்களுள் பலர் பலவிதம் அவர்களுள் இவர் ஒருவிதம். இவர் சமயப்பற்றே சகல நன்மைகளையும் நல்குமென்னும் தனி நோக்குடையவர். ஆனால் மனத்தில் மட்டற்ற தாபமுடையவர். கல்கத்தாவிற்குத் தொண்ணூற்று மூன்றமைல் தூரத்திலுள்ள போல்பூரிலே இவர் ஓர் குருகுலத்தை நிறுவி நடத்திவருகின்றார்.



அங்கு சமயக்கல்வியும், தேசபக்தியும், வங்காளி, ஹிந்தி முதலிய பாஷாஞானமும் ஊட்டப் பெறுகின்றன. தேசத்தின் எதிர்கால மகாபக்தர்களை ஆயத்தப்படுத்தும் நோக்கமுடையது இக்குருகுலம். இதில் இருநூற்றுக்கதிகமான மாணவர்களுளர். பரந்த மரங்களினடியிலே கல்வி போதிக்கப்படுகின்றது. போல்பூரிலே மகரிஷி தேவேந்திரநாத தக்கோரால் பயிர் செய்யப்பெற்ற மரங்களடர்ந்த அச்சோலையில், அதிகாலையில் மாணவர்கள் யோகாப்பியாசஞ்செய்வர். இக்கலாசாலை இப்பொழுது பிரசித்தியாக விளங்குகின்றது.

## கீர்த்தி.

அவர் வரைந்துள்ள நூல்கள் முதலில் வங்காளி பாஷையிலேயே யிருந்தன. பின்னர், அவற்றை அவரே ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். அதுமுதல் அவரது அதிமேதாவித்தன்மையைக் கண்டு மேல்நாட்டு அறிவாளிகள் அவரைப் போற்றுவாராயினர். அப்பால் 1913-ம் ஆண்டில் நோபில் பிரைஸ்' என்னும் நன்கொடை அவருக்களிக்கப் பெற்றது. அவர் வரைந்த கீதாஞ்சலி, இளம்பிறைச் சந்திரன் (Crescent Moon) சித்ரா, சாதனா, கபீர் சதகம், பழக்கூடை முதலிய நூல்கள் ஆங்கிலத்தில் இனிய எளிய நடையில் மொழி பெயர்க்கப் பெற்றுள்ளன. 'நோபில் பிரைஸில்' கிடைத்த 8000 பவுன்களையும் அவர் போல்பூர் குருகுலத்திற்கெனவே சிறிது செலவிட்டு எஞ்சியதை நிதியாக்கினார். மேன்மேலோங்கும் அவர் கவித்துவத்தை மெச்சி கல்வியில் டாக்டர் என்னும் பட்டத்தை அவருக்குக் கல்கத்தா சர்வகலாசாலையார் 1913-ம் ஆண்டில் வழங்கினர். 1916-ம் வருஷம் அவர் ஜப்பான் தேச விற்பன்னர்களின் அழைப்புக்கிசைந்து அத்தேசத்திற்குப் போய்ப் பலவிடங்களிலும் யாத்திரை செய்து பிரசங்கங்களியற்றித் திரும்பினார். அப்பால், பல ஆண்டுகள் சென்றபின் அரசாங்கத்தார் அவருக்கு 'நைட்' (Knight) எனும் பட்டமளித்துக் கௌரவித்தார்களேனும் 1919-ம் ஆண்டைய பஞ்சாப்படுகொலைக்குச் சரியான நியாயமேற்படாததால், அவருக்கேற்பட்ட உள்ளக்கிளர்ச்சி காரணமாக அதனை அவர் ஏற்றாரில்லை. பின்னர், அவர் ரோமாபுரி, கிரீஸ், இத்தலி, பிரான்ஸ், இங்கிலாந்து முதலிய நாடுகளில் யாத்திரை செய்துவிட்டு வெகு சமீபத்தில் இந்தியாவுக்குத் திரும்பினார்.

இனி, அவர் தேசாபிமானத்தை வெளியிடும் இரண்டொரு நிகழ்ச்சிகளைக் கூறுவோம். தென்னாப்பிரிக்காவில் குடியேறிய ஹிந்துக்கள் படுந்துயருக்காற்றாது ஸி. எப். ஆண்டுரூஸ் துரையவர்கள் வாயிலாக, தக்கோர் 'தேற்றுதல் பா'வொன்று வரைந்து விடுத்தார். கானடா தேசத்தார் அவரைப் பலமுறையுந் தம்நாட்டில் பிரசங்கிக்குமாறு வேண்டியும் 'இந்தியாவினிடத்து உங்களுக்கு சமதிருஷ்டி ஏற்படும் வரையில் யான் உபந்நியசிக்க மாட்டேன்' என்றவர் மறுத்துவிட்டார்.

## குண விசேஷங்கள்.

ரவீந்திரநாத தக்கோர் மிக்க தயாள சிந்தையுள்ளவர்; அடக்கமாயிருப்பவர்; சாத்விகி; தன்னலம் பேணாத்தகைமை யுடையவர்; மிக்க வைதீக

மானவர். அவர் தமது முப்பத்தைந்தாம் பிராயத்தில் தமது தாரத்தையும் குழந்தைகளையு மிழந்தார். அதுமுதல் அவருக்கு தயாளகுணம் சிறந்தோங்குவதாயிற்று. பிறரைத் துவேஷியாப் பெருங்குணம் அவரிடம் பெரிதுமுண்டு. சங்கீதத்தில் அவர் வெகு பிரியமுடையவர். காலை முதல் மாலை வரையில் அவர் பாடக் கேட்டுக்கொண்டே யிருப்பார்.

அவரது நீண்டதாடியைக் கண்ணுறுங்கால், 'எனது தாய்நாடு விடுதலையடையும் வரை நான் தீக்ஷை வளர்ப்பேன்' என்ற விரதம் பூண்டிருப்பது போற் றோன்றும். நீந்துவதில் அவர் மகாப்பிரியர். தமக்குக் கடிதம் எழுதும் அன்பர்களுக்கு அவர் சிறிதும் காலந்தாழ்க்காமல் தம் கைப்படக் கடிதம் வரைவார். அவர், பாவிசைக்கும்போது முதலிரண்டு சீர்களை மட்டும், வெகு நாட்கள் யோசித்து அமைப்பது வழக்கம். அமைத்தபின் விரைவில் அக்கவியை முடித்துவிடுவார். தனிமையாயிருந்து தியானஞ் செய்வதிலும், ஆலோசித்துப் பல அருங்கவிகளை யமைப்பதிலும் அவர் அளவற்ற பழக்கமுடையவர். அவர் அமர்ந்து ஆலோசிக்கு மிடத்திற்குச் சாந்தநிகேதனம் (அமைதியை விரும்பும் ஆசனம்) எனப்பெயர்.

## தேசபக்தி.

கவி ரவீந்திரரின் தோற்றத்தால் வங்காளி பாஷைக்கே யுரிய ஓர் தனியுயர்வு வெளிப்படையாயிற்று. அவர் வங்காளியிலும், ஆங்கிலத்திலும் வரைந்துள்ள நூல்களை ஏனைய பாஷா நிபுணர்கள் தத்தம் மொழிகளில் மொழிபெயர்த்துப் போற்றி வருகின்றனர். அவர் வரைந்துள்ள 'கீதாஞ்சலி' யெனும் நூலிலிருந்து சில பாகங்கள் இவ்வாண்டைய எஸ். எஸ். எல். ஸி மாணவர்கட்குப் பாடமாக வைக்கப் பெற்றுள்ளன. அவர் வரைந்துள்ள கவிகளில் ஆங்காங்கு தேசாபிமானமும், மதாபிமானமும் பொங்கி வழிகின்றன.

> "எங்கு மனமானது நிர்ப்பயமாயிருக்கின்றதோ, எங்கு முடி வணங்காமலிருக்கின்றதோ, எங்கு அறிவானது அளவுகடந்து வியாபித்திருக்கின்றதோ, எங்கு தன்னலமும் தரித்திரமும் அற்றிருக்கின்றனவோ, எங்கு உண்மையின் உட்பொருளாய் அருள்வாக் கெழுகின்றதோ, எங்கு முடிவில்லா ஆர்வம் முத்தி யின்பத்தை நோக்கித் தன்னிரு கரகமலங்களையும் விரிக்கின்றதோ, எங்கு அடிமைத்தன்மை அழிவுற்று வீரஞ்செறிந்து விளங்குகின்றதோ, எங்கு உனதருள் வெள்ளத்தால் எனது மனமானது முன்னடையவும், ஜன்மம் நசிக்கவும் ஹேதுவுண்டோ, பரிபூர்ண சுதந்திரமும், பரிசுத்தமும் எங்குள்ளனவோ அங்கு எனது தாய்நாடு ஸ்தாபிக்கப்படட்டும்"

என்று கீதாஞ்சலியிற் காணப் பெறுஞ் சில அரிய கவிகள் அவரது சுதந்திர தாகத்தை வெளியிடும் மாண்புடையனவாய் இலங்குகின்றன. இந்தியத் தாயின் செல்வப் புதல்வரான இப்பெரியார் நீடூழிகாலம் வாழ்ந்து நம் பாரத நாட்டின் சீர்பாடி, விடுதலைக்குழைக்குமாறு இறைவன் அருள்புரிவானாக.

சம்பூர்ணம்.

ஸ்ரீ லக்ஷ்மீகாந்தன்.

---

# நமது நாட்டின் தௌர்ப்பாக்கிய நிலைமை.

(13-ம் தொகுதி 567-ம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு வானம் வழங்காமல் வறண்டதற்குக் காரணம் யாதோ? முன்னம் மாதம் மும்மாரி யென்பர் பெரியோர். இப்போது வருடம் மும்மாரியும் சரியாய்ப் பெய்யின் சாலுமே யென்னும் நிலைமை ஏற்பட்டுவிட்டது ஏழைமக்கள் என்செய்வர் பாவம்! நிற்க.

கைத்தொழிலைப்பற்றிச் சொல்லவேண்டியதில்லை. தேசாபிமானிகள் குறைந்தகாலத்தில் கைத்தொழிலெங்கே? அடுப்புமூட்டும் நெருப்பிற்கு முதலாய் அன்னியநாட்டை எதிர்பார்த்து நிற்கிறோம். கந்தலைத் தைத்துக்கட்ட ஊசியுண்டா? கடிதம் எழுதக் காகிதமா, மையா, பேனாவா, பென்சிலா, எல்லாம் இதரநாட்டிலிருந்தே வரவேண்டும். சுருங்கச் சொல்லின் இந்திய நாடு இதரநாடுகளின் உதவியின்றி வாழமுடியாதென்பது திண்ணம் திண்ணம் முக்காலும் திண்ணம். வேளாண்மையும் கைத்தொழிலு மில்லாவிடத்து வியாபாரமும் பூஜ்யம். ஆகவே நமது நாடு 'நாடு' என்னும் பெயர்க்கே யோக்கியதை யற்றதாய்விட்டது. ஏனெனில் நாட்டின் இலக்கணத்தைக் கூறுமிடத்து நாயனார்,

"நாடென்ப நாடா வளத்தன நாடல்ல
நாட வளந்தரு நாடு."

என்றனர்.

இந்த நிலைமையிலிருக்கும் நமக்கு நல் வாழ்வேது? கௌரவமென்பதுதானேது? நான் பணக்காரனென்றும் கல்விமானென்றும் வாய் கூசாது சொல்வதெப்படி? (இதற்காகத்தானோ பலர் தங்கள் சரீரநிறத்தை மாற்ற முடியாமற் போனாலும் போகட்டுமென்று அன்னிய நாட்டினரைப்போல் ஆடைதரித்து இன்னஜாதியாரென்று கண்டறிய வியலாதவாறு வேடம் பூண்டு, அன்னியபாஷை பேசி, 'பாண்டவர் விராடபுரத்திற் கரந்துறைந்தது போல் அஞ்ஞாதவாசம் புரிகின்றனர்!) இஃதிங்ஙனமாக,

வேறு பலர் எவ்வழியாலோ பணஞ் சம்பாதித்து வைத்துக்கொண்டு, அமெரிக்காதேசத்துக் கோடீசுவரர்களைப்போல, செலவிடும் வழியறியாது, நகரங்களில், பார்க்கின்றபேர்கட்கு, 'அப்பா! இந்தியாவைப்போலச் செல்வத்திற் சிறந்தநாடு முண்டா' வென்று தோன்றுமாறு டம்பாச்சாரிகள்போல் நடிக்கின்றனர்; நாடகங்கள், பயாஸ்கோப்புகள் என்னும் சித்திரப்படக் காட்சிகள், பாட்டுக் கச்சேரிகள், காப்பிக் கிளப்புகள், சாராயக்கடைகள், கள்ளுக்கடைகள், குதிரைப்பந்தயங்கள் முதலிய அயோக்கியவழிகளில் செலவிட்டுக்கொண்டு திரிகின்றனர். இந்த வெட்கங்கெட்ட காரியங்களின் வயிற்றெரிச்சலை என்னென்போம்! என்னென்போம்!! 'மாதா வயிறெரிய மாகேசுவரபூசை' புரியும் மகான்களல்லரோ இவர்கள்! தவிர, ஆலயங்களில் அமிதமான பணத்தைப் பாழாக்குகின்றனர். பாணவேடிக்கை, தங்கநாகசுர

மேளம், தாசி, ஏழைமக்களுக் கெட்டாத புளியோரை, வடை, தோசை முதலிய பக்ஷணங்கள் இவைகளுக்காக எவ்வளவு திரவியம் செலவாகின்றது! இவை எந்தத் தெய்வத்திற்குப் பிரீதி. இந்த வேடிக்கைகளைப் பார்க்கவரும் பேதைமக்கள், தங்கள் கையிற் பணமில்லாவிடினும் கடன் பட்டேனும் பணம் வாங்கிவந்து, சுவாமிக்கென்று செலவழித்த இரண்டணுபோக மிகுதிப் பணத்தை ரயில்காரனுக்கும் ஏமாற்றுவதற்காகவே கண்களைக் கவரக் கூடியபடி அலங்காரஞ் செய்துவைத்திருக்கும் சாமான்களுக்கும் செலவிட்டுத் திரும்பி வீடுசென்று, 'குந்தினையா குரங்கே சந்தடி யடங்க' வென்னும் வாக்கியப்படி கையில் காசில்லாமற் கலங்கி நிற்கின்றனர்.

இவர்கள், 'இலங்கு முயிருடலனைத்து-மீசன் கோயில்' என்னும் உண்மையை அறிவார்களாயின் நடமாடும் கோயில் நம்பர்களாகவுள்ள ஏழை மக்கள் தவித்துக் கொண்டிருக்க-பாரதத்தாய் பரிதபித்துக் கொண்டிருக்க-அக்கோயில்களைச் செவ்வைப்படுத்தக் கருதாமல் படமாடுங் கோயில் பரமற்குப் பணத்தைப் பாழுக்கிறைப்பதுபோல் இறைப்பார்களா?

" படமாடுங் கோயில் பரமற்கங் கீயின்
நடமாடுங் கோயில் நம்பர்க்கங் காகா
நடமாடுங் கோயில் நம்பர்க்கங் கீயின்
படமாடுங் கோயில் பரமர்க்கங் காகும்."

இவை யெல்லாம் ஒருபுறமிருக்க, பாரத மாதாவின் மக்கள் ஒற்றுமையின்றிச் செய்யும் அட்டூழியங்களை அளவிட முடியுமா? இதைக்கண்டு சகிக்க முடியாமலன்றோ கண்ணீர் ஆறுகப் பெருக அறிவு கலங்கி நிற்கின்றாள் அருமை அன்னை! ஐயோ! எனக்கு உடையும் உணவு மில்லாவிடினும் என் மக்கள் சண்டையின்றிச் சமாதானமாய் ஒற்றுமையுடன் வாழ்ந்தால் போதுமே என்பதே அவள் கோரிக்கை. எவ்வளவோ கதறினும் அவள் வார்த்தையைக் கேளாது அலட்சியம் செய்து, 'தாய் வார்த்தை கேளாப் பிள்ளை' களாயிருக்கின்றனரே!

நாங்கள் எங்கள் தாயின் நன்மைக்காகவே-தேசாபிமானத்தின் பொருட்டே உழைக்கின்றவர்கள். நாங்கள் உண்மையான தேசாபிமானிகள் என்று சொல்லிக்கொண்டு ஒருவரையொருவர் தூஷிப்பதே தொழிலாயிருக்கின்றனர். பிராமணர்-பிராமணரல்லாதார் கட்சிகள் தென்னாட்டில் தலைவிரித்தாடுகின்றன. இந்து-முகம்மதிய கட்சி வடநாட்டில் வம்பு செய்து திரிகின்றது. தீண்டாதார்-தீண்டப்படாதார் என்போர் செய்தி செப்பத்தரமல்ல. 'ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்' என்பதுபோல் இந்து மதத்தைச் சீர்குலைக்க இதுவே சமயமென்று சில நரிகள் கொண்டாடிக்கின்றன. இராஜாங்க சம்பந்தமாகப் பல கட்சிகள் தோன்றிவிட்டன. சுயராஜ்யக் கட்சி, ஜஸ்டிஸ் கட்சி, சுயேச்சைக் கட்சி முதலிய தலைக்கட்சிகள், இவைகளுக்குட்பட்ட பல கிளைக்கட்சிகள்; ஐயையோ! தாலியறுப்பான் வீட்டில் தலைதலைக்குப் பெரியதனம் என்பதற்கேற்ப, தலைவனில்லாச் சேனைபோல என்னபாடுபடுகின்றது நமது நாடு! 'நான் பிடித்த முயலுக்கு மூன்றே கால்' என்று வழக்காடும் இத்தேசாபிமானிகளால் என்ன நன்மை யுண்டாகும்! இந்த லக்ஷணத்தில் தேசாபிமானிகள் என்று வாய் கூசாது கூறித் திரிவதல்லவா வேடிக்கையாயிருக்கிறது. 'ஒன்றுபட்டா லுண்டு வாழ்வு' என்பது இவர்களறிவுக்குப்படவில்லையோ! ஐயோ! என்றுதான் இவர்கள் தங்கள் துவேஷகுணத்தைவிட்டு ஒற்றுமைப்பட்டுத் தாயின் துயரத்தைத் தவிர்ப்பார்களோ! (இதைப்பற்றிப் பிறகு தனியாகப் பேசுவோம்.) மாரி



வளம் சுரந்து வேளாண்மை பெருக்கியும், கற்றோரும் கருந்தனம் பெற்றோரும் கைத்தொழிலையும் வியாபாரத்தையும் தங்கள் சுயநலத்தைவிட்டுப் பாடுபட்டு விருத்திசெய்தும், கூத்து குடி (காப்பி குடி, கள்குடி) யொழித்து அவைகளுக்குச் செலவாகும் திரவியத்தைத் தேசநன்மைக்கென உபயோகித்தும், வீணுடம்பரமாகக் கோயில்களுக்குச் செலவழியும் திரவியத்தை ஏழைகளைக் கைதூக்கிவிடுதற்கான தருமபாடசாலைகளுக்கெனச் செலவழித்தும், கட்சிபேதங்களைவிட்டு யாவரும் சகோதரரேயென்னும் உணர்ச்சிகொண்டு ஒற்றுமையாய் வாழ்ந்தும் வருவார்களானால் பாரதத்தாயின் மக்கள், தேசம் க்ஷேமமடையும்; ஒப்பற்று விளங்கும்; பண்டைய நிலைமையை யெய்தும்; தாயும் அகங்களிப்பாள்; ஆனந்தத்தாண்டவமாடுவாள்.

ஏகமாய் நின்னோ டிருக்கும்நாள் எந்தநாள்
இந்நாளின் முற்றுறுதோ!
இகபர மிரண்டினிலு முயிரினுக் குயிராகி
எங்கு நிறைகின்ற பொருளே!

பூ. ஸ்ரீநிவாஸன், தமிழ்ப் பண்டிதர், சித்தூர்.

## விக்கிரகாராதனை.

கடல்சூழ்ந்த இக்காசினியின்கண், மனிதப்பிறவி எடுப்பதும், நல்வாழ்விற்கு உறுதுணையாக நிற்கும் கல்வி பயில்வதும், உண்மைநெறி உணர்ந்து அதன்வழி ஒழுகி உயர்வடைய முயல்வதும் அருளுருவாய ஆண்டவனை அறிந்து மகிழ்வதன் பொருட்டேயாம். "கற்றதுங் கேள்வி கேட்டதும் நின்னைக் கண்டிடும் பொருட்டன்றோ காணே!"—எனவும், "கற்றதனாலாய பயனென்கொல்? வாலறிவன்—நற்றாள் தொழாஅரெனின்"—எனவும் வரூஉம் ஆன்றோர் மொழிகளை ஊன்றி நோக்குக. இதன்பொருட்டே, விலங்கினத்தினின்றும் வேறுபடுத்தி, நல்லன இவை, தீயன இவை என்று பிரித்துணர்த்தும் ஆறுவதறிவாய பகுத்தறிவு, மனிதர்க்குமட்டில் சிறப்பாக வழங்கப்பட்டிருக்கின்றது. ஆகலின், அத்தகைய ஆறுவதறிவின் துணைகொண்டு, உண்மைநிலை விசாரித்துணர்ந்து அதன்வழிநின்று ஒழுகி மெய்யின்ப மெய்துவது மனிதராய்ப் பிறந்தோர் ஒவ்வொருவருடையவும் சிறந்த கடமையாகும்.

மற்றும், இத்தகைய உண்மைநிலை உணர்த்தும் கல்வியே மெய்க்கல்வியாம். அவ்வாறன்றி, பூதபௌதிக ஆராய்ச்சியிலாழ்ந்து எல்லாம் இயற்கையின் படைப்பு என்றும், இறைவன் என்றொருவன் தனியாக இல்லையென்றும், இறைவனுக்கு நாமரூபகுணங்களின்மையால், அவற்றை அவனுக்குக் கற்பித்து வழிபட்டு வருதல் பைத்தியக்காரத்தனமென்றும் பலவாறு பேசும் நாத்திகக் கொள்கையை விளைவிக்கும் நவீனநாகரிகக் கல்வி, உண்மைக் கல்வியாகாது. "நிற்கின்றதெல்லாம் நெடுமாலென் றோராதார்—கற்கின்ற

187489

தெல்லாம் கடை"—என்பது ஆழ்வார் அருள்மொழி. ஆதலால், மனிதப் பிறவியாற் பெறற்பாலதாய சீரியபேறும், கல்வியினாலடையத்தக்க சிறந்த பயனும் கடவுளை வழிபடுவதேயாம் என்பது செவ்விதிற் பெறப்படும்.

"அகண்டம் சச்சிதானந்தம் அவாங் மானச கோசரம்"—என்றபடி, "அங்கிங் கெனாதபடி எங்கும் பிரகாசமா"யும், "பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற பரிபூரணாநந்த" மாயுமுள்ள பகவானை, எங்ஙனம் உணர்ந்து, எவ்வாறு பாவித்து, எவ்வகையில் வழிபடுவது என்ற வினா எழுதல் இயல்பே. சின்னாட் பல்பிணிச் சிற்றறிவினராய நமது குறுகிய அறிவைக்கொண்டு, ஊரும் பேரும் உருவமும் குணமும் தோற்றமும் முடிவுமில்லாததொரு தனிப்பெருஞ் சோதியை, முதன் முதலாக தியானஞ் செய்யத் தொடங்கும்போதே, அவ்வாறே பாவித்து சிந்தையிலிருத்தி வழிபடுவது எவ்வகையிலும், சாத்தியமாகாததொன்றே என்பது தெளிவு. எல்லையில்லாத அவ்வருட்பெரும் ஒளிப்பிழம்பை, கேவலம் சாதாரண மனத்தால் நிர்க்குணோபாசனையாக தியானிப்பது முதன் முதலிலேயே சாத்யமானதன்று; அத்துணை எளியதொரு பொருளன்று ஆண்டவன். ஆகலான், "அண்டபகிரண்டமுமடங்கவொரு நிறைவாகி ஆனந்தமான" பரம்பொருளை, அவ்வாறே நிர்க்குண பிரமமாகப் பாவித்து, தியானித்தல் எளிதில் கைகூடுவதன்று என்பதை விரித்துரைக்கவேண்டுவதில்லை. அவ்வாறு வாசாஞானம் பேசித்திரியும் சாதாரண அறிவாளர்களுடைய கூற்று, அவர் தம் பேதைமையைச் செவ்விதில் வெளிப்படுத்திவிடும். எனினும், அத்தகைய நிர்க்குண பிரமதியானமும் ஒருகாலத்தில் கைகூடுவதுண்டு. அஃது, மிக மிக அரிதாம். சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் நான்கு படிகளில், மூன்றாவதாய யோகநிலையில், அத்தகைய நிர்க்குணபிரமதியானம், சிறிது சிறிதாக—படிப்படியாக வளர்ச்சிபெற்று எல்லா இடையூறுகளையும் கடந்து நிற்கும் மெய்ஞ்ஞானமாய கடைசிநிலையில் எவ்விதமான செயற்கை முயற்சியுமின்றித் தானே கைகூடும். அத்தகைய உண்மை யோகப்பயிற்சியாளர்கட்கன்றி, ஏனைய சாதாரண மனிதர்கட்கு நிர்க்குண பிரமதியானம் வாய் வேதாந்தமாகவே முடியுமென்பதில் எவ்வித ஐயமுமில்லை.

ஆதலால், உண்மையில் 'ஆண்டவனை அடையவேண்டும்' எனும் உறுதிகொண்டு இடையறாத முயற்சிசெய்பவர்கள், தத்தமது அறிவு வளர்ச்சிக்கு ஏற்றவாறு, எங்கும் பரந்து நிற்கும் இறைவனுக்குத் தத்தமது மனோபீஷ்டங்கட்கு இயைந்தவாறு பலதிறப்பட்ட இலக்கணங்களைக் கற்பித்து, திருவுருவங்களை ஏற்படுத்தி, அவற்றை அவ்வவர் மனமொழி மெய்களால் தளராத மெய்யன்போடு வழிபட்டு வருவது சாலச் சிறந்ததாம். அத்தகைய பக்தர்களது பாவனைகட் கிணங்க, லீலாவினோதனாய சர்வேச்வரன் பலவகைப்பட்ட வடிவங்களாக அவரவர்கட்குக் காட்சி அளித்தருள்வான்.

"யோயோயாம்யாம் தனும்பக்தஃ, ச்ரயார்ச்சிது மிச்சதி|
தஸ்யதஸ்யா சலாம்ச்ரத்தாம், தாமேவ விததாம்யஹம்"||

"ஸதயா ச்ரத்தயா யுக்தஃ, தஸ்யாராதன மீஹதே|
லபதேச ததஃ காமான், மயைவ விஹிதான் ஹிதான்|| (அ-7; சு-21, 22)

"எந்த எந்த பக்தன், நம்பிக்கையுடன் எவ்வெவ்வடிவத்தை அர்ச்சிக்க விரும்புகின்றானோ, அவனவனுடைய அசையாத நம்பிக்கைக்குத் தக்க வடிவத்தை, நான் மேற்கொள்ளுகின்றேன்; அவன், அந்த நம்பிக்கையுடன் கலந்து, அவ்வடிவத்தை ஆராதிக்கவேண்டுகின்றான். அதினின்றும், தான்



விரும்பியனவற்றை எய்துகிறான்; எனினும், அவற்றை வகுத்துக் கொடுப்பவன் யானே"—என்று, கண்ணபிரான் உலகு போற்றும் உயர் பெருநூலாம் பகவத்கீதையில் அருளிச்செய்தமை காண்க. ஆகவே, விக்கிரகாராதனை தொன்மையிற் சிறந்த இவ்விந்தியநாட்டில், புதிதாக ஏற்படுத்தப்பட்டதன்று என்பதும், மக்களது அறிவு வளரத்தொடங்கிய நாள்தொட்டு இருந்து வருவதென்பதும் தெள்ளிதிற் புலனாகக் கிடக்கின்றன.

மற்றும், நமது முன்னோர்கள் சிற்றறிவினர்களாய நாம் உணர்ந்து உய்தற்பொருட்டு, உபநிடத மறை பொருள்களை விக்கிரகங்களில் அமைத்து உதவியுள்ளனர். அவ்வர்த்தங்களை கிரகித்துக்கொண்டு, பக்தியிற் சிறந்து, நம்மனோர் மனம், தூய்மையாகுமாறு அவற்றைப் பூசித்து முன்னேற்றமடைய வேண்டுமென்பதே, நமது முன்னோர்கள் கருத்தாம். கடல்சூழ்ந்த இப்பூவுலகைப் படைத்துக் காத்து அழித்து முத்தொழில் நடாத்தும் முழுமுதற் பொருளாய முதல்வனது குணாதிசயங்களை, நமது மூதாதைகள் வகுத்துக் கொடுத்துச் சென்றிருக்கும் விக்கிரகங்களினின்றும், நாம் எளிதில் தெரிந்து கொள்ளலாம். உதாரணமாக, விஷ்ணுவின் விக்கிரகம், எங்கும் பரந்து, கருணைமழை பொழியும் இயல்பைக் குறிக்க, மேலே தவழும் மேகத்தின் நிறத்தைப்போன்ற நீலநிறமும், உயிர்களைப் படைக்கும், தன்மைக்கு அறிகுறியாக ஒருகையில் சங்கும், உலகை நடத்தும் அதிகாரத்தின் குறியாக மற்றொரு திருக்கையில் கதையும், அழிக்கும் சக்திக்கு அறிகுறியாக வேறொரு கரத்தில் சக்கரமும், அருள்பொழிந்து மெய்யின்பம் உறவித்தலைக் குறிக்கப் பிறிதொரு திருக்கரத்தில் தாமரைமலரும் கொண்டு விளங்குவதும், சபாபதியின் தில்லைத் திருநடனத்தின் தத்துவங்களும், ஆழ்ந்து கூர்ந்து ஆராய்ந்து உணரற்பாலன. நிற்க.

மண், தீ, நீர், காற்று, விசும்பு எனும் ஐவகைய பூதங்களாயிருப்பவனும், ஆண்டவனே என்பதை உணர்த்துவதற்காகவன்றோ, முறையே காஞ்சீபுரம், திருவருணை, திருவானைக்கா, திருக்காளத்தி, திருச்சிற்றம்பலம் முதலிய ஐந்து தலங்களிலும், அவ்வப்பூத அம்சமாக அவ்வத்தலத்து இறையவனை அமைத்துச் சென்றனர் நம் பெரியோர்! மற்றும், மக்கள் உடல், தோல், குருதி, தசை, கொழுப்பு, எலும்பு, மூளை, கருநீர் எனும் எழு தாதுக்களாலானதையும், அவ்வேழுங் கடந்தபின் அருள்நாட்டம் பெறுவதையுங் குறிக்கவன்றோ, சில ஆலயங்கள் எழுசுற்று மதில்கள் உடையனவாக அமைக்கப்பட்டிருக்கின்றன! சிவாலயங்களிலே, உள்முற்றத்தில் துவசத்தம்பமும், அதனையடுத்து பலிபீடமும், அதனருகில் நந்தியும், அதனைக் கடந்து உட்சென்றவிடத்துப் பிறிதொரு நந்தியும், அதனையுந் தாண்டிச் செல்லுமிடத்து மற்றொரு நந்தியும், அதன்முன் சிவலிங்கமும் ஆக ஆறு நிலைகளிருப்பதைக் கவனிக்கலாம். அவைதாம், (மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை-என வரூஉம் (தத்துவப் பெயர்களையுடைய) முன்னிடம், குறியிடம், கொப்பூழ், மார்பு, கழுத்து, புருவ மத்தி) என வரும் உடல் அமைப்புக்களைக் குறிக்க அமைக்கப்பட்டனவாம்.

இவற்றால், ஆறு ஆதாரங்கள், செவ்விதில் உணரக் கிடக்கின்றன. உடலின் நடுவேயுள்ள முதுகின் முள்ளாந்தண்டெலும்பைக் குறிக்கத் துவசத்தம்பமும், அவ்வெலும்பின் மேல் நுனியிடத்துத் தலை முன்னோக்கியிருப்பதைக் குறிக்க, பல சட்டங்களோடு முன்னோக்கிப் படர்ந்துள்ள அத்தம்பத்தின் உயரிய உச்சியும், மூளையிடத்தே எழும் நாத ஒலியைக் குறிக்க, அவ்வுச்சியிலுள்ள தகடுகளின்கீழ் காற்றிலசைந்து ஒலிக்கும் மணிகளும் அமைக்

கப்பட்டிருத்தல் ஆராயத்தக்கது. இவ்வகையில், 'உடம்பினுள்ளே கோயில் கொண்ட உத்தமனை' நிர்க்குணோபாசனை முறைப்படி வழிபட வியலாதவர்கட்காக, அவ்வுடலமைப்பையே, புற ஆலய வடிவாக அமைத்து உதவிய நமது முன்னோர்களின் பேரறிவையும், பெருங் கருணையையும் என்னென்று போற்றுவது!

போலி வேதாந்திகள் சிலர், ஆண்டவன் அகத்தினுள் அமர்ந்திருப்பதை அறியாது, வெளியில் அவனைத் தரிசிக்க ஆலயங்களை நாடி ஓடியலைவது பேதைமை யாகும் என்று எள்ளி நகையாடுவர். அம்மட்டோ! திருக்கோயில்களிலுள்ள தெய்வத் திருவுருவங்கள் கல்லாலும் செம்பாலும் ஆக்கப்பட்டவை யென்றும், அவற்றை வழிபடுதல் பைத்தியக்காரச் செயலென்றும், அவற்றில் ஆண்டவன் இல்லையென்றும் வேதாந்தம் பேசி, பாமர ஜனங்களின் பக்தியையும் கெடுக்க முயல்வர். அவர்தங் கூற்றுக்கு ஆதாரமாகப் பட்டினத்தடிகள் பாடலான,

"சொல்லிலும், சொல்லின் முடிவிலும், வேதச் சுருதியிலும்
அல்லிலும், மாசற்ற வாகாயந்தன்னிலும், ஆய்ந்துவிட்டோர்
இல்லிலும், அன்ப ரிடத்திலு மீசனிருக்குமிடம்
கல்லிலும் செம்பிலுமோ விருப்பான் எங்கள் கண்ணுதலே."

எனும் செய்யுளையும், அதைப்போன்ற, மற்றுஞ் சிற்சில பாக்களையும் பகர்வர். இச்செய்யுளும், இத்தகைய பிறவும், எங்கும் நிறைந்துள்ள இறைவனை கல்லாகவும், செம்பாகவும் மட்டும் கருதுவோர்க்கும், அவரவர் சமயக் கடவுளரின் விக்கிரகங்களிலன்றிப் பிறவிக்கிரகங்களில் இறைவன் உறைவதில்லை எனப் பூசலிடுவோர்க்கும் அறிவுச்சுடர் கொளுத்த எழுந்தனவேயன்றி, வேறன்று. அடிகள், திருவுள்ளக் கருத்து யாதெனில், "கல்லாகவும், செம்பாகவும் அவற்றைக் கொள்வோர்க்குக் கடவுளில்லை; கடவுளாகவே, அவற்றைக் கொள்வோர்க்கு, அவை கல், செம்பாகாவாம்"—என்பதே. மற்றும், கடவுளெண்ணம் உடையார்க்கு, அவை கல்லாகவாதல், செம்பாகவாதல் காட்சியளியா. அவ்வுருவங்களையே, லட்சியப் பொருள்களாகக் கொண்டு வழிபடாது, மந்திர மகிமையினாலும், பெரியோர் பலர் புரிந்த பூசனைகளாலும் அவற்றில் சாந்நித்யமாயமைந்துள்ள மூர்த்தியை வழிபடுவதே ஞானத்திற்கேதுவாம். மற்றும், மேற்காட்டிய திருமொழியை அருளிய பட்டினத்தடிகளே, திருவிடைமருதூர், திருக்கச்சி, தில்லை முதலிய சிவதலங்கள் தோறும் சென்று, ஆலய வழிபாட்டைப் போற்றிப் பலபடப் பாடியிருத்தலும் கவனிக்கற்பாலது. இவ்விடத்தில், கீழ்வரும் திருமூலர் பெருமொழி உய்த்து உணரற்பாலது:—

"மரத்தை மறைத்தது மாமத யானை,
மரத்தின் மறைந்தது மாமத யானை;
பரத்தை மறைத்தது பார்முதற் பூதம்,
பரத்தின் மறைந்தது பார்முதற் பூதமே."

உலகெங்கணும் சென்று, வேதாந்த கர்ச்சனை செய்து, பல நாட்டு அறிஞர்களையும், திருத்திப் பணிகொண்ட விவேகானந்தசுவாமிகள், விக்கிரகாராதனையைப் பற்றி வியந்துகூறும் திருமொழிகள் வருமாறு:—"விக்கிரகாராதனை தப்பு என்று உரைப்பது சாதாரணமாய்ப் போய்விட்டது; ஒவ்வொருவரும், அதை இப்பொழுது கேள்வி கேட்காமலே விழுங்கிவிடுகிறார்கள். நான், ஒருகாலத்தில் அப்படி நினைத்தேன்; அந்தக் குற்றத்துக்கு



அபராதமாக விக்கிரகங்களின் மூலமாகவே எல்லாவற்றையும் அனுபவத்திலறிந்த ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சருடைய பாதங்களினடியில் உட்கார்ந்து எனது பாடத்தை நான் கற்றுக்கொள்ள வேண்டிவந்தது. அத்தகைய மஹாத்மாக்கள் விக்கிரகாராதனையினால் உற்பத்தி செய்யப்படுவார்களானால், உங்களுக்கு என்ன வேண்டும்?—சீர்திருத்தக்காரனுடைய கோட்பாடா? அல்லது, எத்தனை விக்கிரகங்கள் வேண்டுமோ, அத்தனையுமா? எனக்கு ஒரு மறுமொழி வேண்டும். விக்கிரகாராதனையின் மூலமாக, ராமகிருஷ்ண பரமஹம்சர்களை உற்பத்தி செய்ய முடியுமானால்—ஓராயிரம் விக்கிரகங்களை எடுத்துக் கொள்ளுங்கள்; கடவுள் உங்களை அநுக்ரஹிப்பாராக; உங்களால் முடிந்த எந்தவிதத்திலும் அத்தகைய சிறந்த லட்சணங்களை உற்பத்திசெய்யுங்கள்."


மேலும், விக்கிரகாராதனையின் விசேஷபலன் என்னவெனின், எத்தகைய சாதாரண அன்புடையவர்களிடத்திலும், நாளடைவில் படிப்படியாக பக்தியை வளர்த்து, இறைவன்பால் கபடமற்ற உண்மையன்பை மனமொழி மெய்களால் செலுத்த அன்னாரைத் தூண்டுதலேயாம். விக்கிரகாராதனை செய்வோர், சர்வ சாதாரணமான பாமரராயிருப்பினும்—இலௌகிகவாழ்வில் பெரும் பற்றுடையோராக விருப்பினும்—வெளிப்பகட்டுக்கு, டம்பமாக நடந்துகொள்வோராக விருப்பினும்—பிற எத்தகைய கீழ்த்தரமானவர்களாயிருப்பினும், விக்கிரகத்தின் காந்த சக்தியினால்-பரிசுத்தத் தன்மையினால்-தெய்வ சாந்நித்யத்தினால்—அன்னோரது கயமைக்குணங்கள் நாளடைவில் படிப்படியாக, அன்னோரையும் அறியாது கிருஷ்ணபக்ஷத்துச் சந்திரனை போல சிறிது சிறிதாகத் தேய்ந்து தேய்ந்து, இறுதியாக முற்றும் மாய்ந்தொழிந்து, ஆண்டவனது திருஅருளைப் பெறுகின்றார்கள். விக்கிரகத்தின் முன்னே, அதைப்பற்றிய ஏகாக்ரசித்தத்தோடு கூடிய தியானத்திலேயே, ஊன்றிப் பழகப்பழக உற்சாகமும், மன ஒருமைப்பாடும், கடைசியில் உள்ளத்திலேயே ஆண்டவன் உறைவதை உணர்ந்து உய்யும் பேறும் தாமே விளைகின்றன. அவ்விக்கிரகத்தின் முன், மெய்யடியார்கள் அருளிய அன்பு ததும்பும் அருட் பாடல்களைப் பாடியாடி, அழுது தொழுது அகங்கசிந்து அன்பு வயப்பட்டு நிற்பதால் விளையும் இன்பத்தை, எழுதவுங் கூடுமோ! விரிக்கிற் பெருகும்.

இறுதியாக, செந்தமிழ்நாட்டுச் செல்வர்களே! வாசாஞானம் பேசித்திரியும் வேதாந்திகளே!! ஆண்டவன்பால் அன்புபூண்ட இல்லறத்தினரே!!! ஆலயங்கள் மலிந்து விளங்கும், அருமைத் தமிழ்நாட்டில் தோன்றும் தவம் படைத்தோரே! இனியேனும், விக்கிரகங்களை எள்ளி நகையாடாது, அவற்றின் பெருமைகளை உணர்ந்து, உங்கள் முன்னோர்கள் 'ஆன்ம ஞானம் பெறுவதற்குச் சிறந்த சாதன'மாகக் காட்டிக் கொடுத்துச் சென்றுள்ள விக்கிரகங்களை வழிபட்டும், வடமொழி வேதங்களினும் மிக்க பெருமையுடைய தமிழ்மறைகளாற் போற்றப்பட்ட ஆண்டவன் திருக்கோயில்கட்குச் சென்று இறைவனைப் போற்றியும், இம்மையிலும் மறுமையிலும் நன்மையடைவீர்களாக! திருமகள், உங்கட்கு அருள் தருவாளாக!

ஆ. வ. பதுமநாப பிள்ளை, "திருமகள் நிலயம்"; ஆரியூர்.

---

சந்தாதாரர்களுக்கு:—சந்தா நம்பர் தெரியாதவர்கள் மாதமாதம் வரும் சஞ்சிகையின் மேலுள்ள விலாசத்தில் குறிக்கப்பட்டிருக்கும் நம்பரைப் பார்த்துக் குறித்து வைத்துக்கொள்ளக் கோருகிறோம்.




## முடிந்த ஞானம்.

(13-ம் தொகுதி 557-ம் பக்கத் தொடர்ச்சி.)

அரசனே! வேறு ஆக்ஷேபனை வேண்டியதில்லை. பிரமத்துக்கு ஞானம் என்று ஒருபேர். சகல பிராணிகளும் அதிலேயே ஒடுங்குகின்றன. பூரணமான அதை அறிகிறவன் இவ்விடத்திலேயே முத்தி அடைகிறான். அந்தப் பரம்பொருளையே ஞானிகள் ஞானக்கண்ணால் காண்கிறார்கள்.

ஆயிரம் ஆயிரமான சிறகுகளுடன் மனதைப்போலப் பறந்தாலும் முடிவில் அதனிடத்திலேயே வந்து அடையவேண்டும். அதன் சொரூபம் கண்களுக்குக் கோசரமாகாது. பரிசுத்தமான இருதயமுடையவர்களே காணக்கூடும். பிறர் நலத்தைக் கவனித்து மனதை அடக்கி, துக்கத்தால் மனதை வருத்தாமல் இருக்கிறவனே பரிசுத்தமான இருதயமுடையவனென்று சொல்லப்படுகிறான். உலகத்தை விட்டவனே அமிர்தத்துவத்தை அடைகிறான். அழிவற்ற அந்தப் பிரமத்தையே யோகிகள் மனக்கண்ணால் பார்க்கிறார்கள். பிரமம் எல்லாரையும் பார்க்கிறது; அது நல்ல செய்கைகளால் மகிழ்வதுமில்லை; தீய செய்கைகளால் வெறுப்பதுமில்லை. பிரமத்தை அறிந்தவன் அமிர்தன் என்று சொல்லப்படுகிறான். பிரமத்தை அறிகிறவன் துக்கப்படுவதுமில்லை; நான் வேதத்தைப் படிக்கவில்லையென்றாவது அக்கினி ஹோத்திராதிகளைச் செய்யவில்லையென்றாவது கருதுவதுமில்லை. மன அடக்கமுடையவனுக்கே பிரமஞானமுண்டாகிறது. பிரமமே ஜீவாத்மாக்களைத் துக்கம் அஞ்ஞானம் இவைகளினின்றும் விடுவிக்கின்றது. அந்தப் பிரமத்தையே ஞானிகள் ஞானக்கண்ணால் காண்கிறார்கள்.

அங்குஷ்டமாத்திரமாக இருதயத்தில் இருக்கிறதும், கண்களாற் காண முடியாததுமான பிரமத்தை அறிகிறவனே வேதத்தில் சொல்லப்பட்ட கர்மங்களையெல்லாம் அடைகிறான். பிறப்பில்லாத அவன் நடக்கிறான்; இரவிலும் பகலிலும் விழித்துக்கொண்டிருக்கிறான். அவனை அறிகிறவன் படித்தவனும் பூர்ணமான மகிழ்ச்சியுடையவனுமாகிறான். நான் தாயாரும் தகப்பனுமாகிறேன். நானே மறுபடியும் புத்திரனாகிறேன். இருந்ததும் இருக்கிறதும் இருப்பதும் ஆகிய எல்லாம் பிரமமே. பாரதரே! நானே பிதாமகன், நானே பிதா, நானே புத்திரன், நீங்கள் என் ஆத்மாவில் இருக்கிறீர்கள். அப்படியிருந்தாலும் நீங்கள் என்னுடையவர்களாகமாட்டீர்கள்; நானும் உங்களுடையவனாகமாட்டேன்; ஆத்மாவே பிறப்பதற்கும் பிறப்பிக்கிறதற்கும் காரணமாகும். நானே உண்மையும் நாலும் சொசவுமா யிருக்கிறேன். நான் எதிலிருக்கிறேனோ அது அழிவற்றது. பிறவாது அசைக்கிறேன். நுட்



பத்திலும் நுட்பமானகண் இறப்பு எதிர்வுகளை அறியக்கூடும். இரவும் பகலும் விழித்து இருக்கிறேன். படித்தவனையும் சந்தோஷமுடையவனையும் அறிகிறேன். பிரமம் எல்லாப் பிராணிகளிடத்திலும் விழித்துக்கொண்டிருக்கிறது. அவனை அறிகிறவன் எல்லாப் பிராணிகளின் இருதயத்திலும் இருக்கிற பிரபஞ்சத்தின் பிதாவை அறிவான். அரசனே! நீர் கேட்ட சந்தேகங்களுக்கு எல்லாம் சமாதானம் சொல்லிவிட்டேன். இதைவிட நீர் அறிந்து கொள்ளவேண்டியது ஒன்றுமில்லை. ஒருவன் பிரமத்தை அறிந்து முத்தியை அடைவதற்குரிய ஞானமெல்லாம் சொல்லியாயிற்று.

அரசனே! மனதை அடக்கிப் புலன்களை ஜயித்துக் கவலையற்று நான் கூறிய இந்தநெறியில் தவறாமல் நடந்தால் நீர் மரணத்தை ஜயித்துவிடுவீர். மரணத்துக்குப் பயப்படவேண்டியதில்லை. இதுவே முடிந்த ஞானம். முடிந்த ஞானமென்றால் ஞானங்களுக்கெல்லாம் முடிந்த இடமாகிய சிறந்த ஞானமாம். நீர் மிகுந்த கவலையுடன் கேட்டமையாலும், விதுரருடைய விருப்பத்தை நிறைவேற்றுவதற்காகவும் உண்மையான ஞானத்தை உள்ளபடி உமக்குக் கூறிவிட்டேன்' என்று கூறிவிட்டு ஸநத்ஸுஜாத முனிவர் தமதிச்சைப்படி சென்றுவிட்டார்.

இந்த ஞானமும் பகவத்கீதையைப்போல வியாசரால் பாரதத்தில் கூறப்பட்டது. இதனைப் பகவத்கீதையின் சுருக்கமென்றே கூறலாம். பகவத்கீதை பகவான் அர்ஜுனனுக்கு உபதேசித்ததாகக் கூறப்பட்டது. இது ஸநத்ஸுஜாத முனிவரால் திருதராஷ்டிர மஹாராஜனுக் குபதேசித்ததாகக் கூறப்பட்டது. பகவத்கீதை அர்ஜுனனுக்கு உபதேசிப்பதற்கு முன்னாலேயே இது திருதராஷ்டிர மஹாராஜனுக்குக் கூறப்பட்டது. இதுவே பகவத்கீதையில் விரித்துக் கூறப்பட்டது என்னலாம். பகவத்கீதையைப்போலவே இதிலும் ஞானயோகம், பக்தியோகம், கர்மயோகம் என்கிற மூன்றும் கூறப்பட்டுள்ளன. இதனால் இந்த மூன்றுமே முக்திக்கு ஆதாரமாயுள்ளனவென்பதும், இவற்றுள் தமது சக்திக்குத் தகுதியான ஒன்றை அனுஷ்டித்து எல்லாரும் முக்தி அடையலாமென்பதும் வியாசபகவானுடைய கருத்தாமென்று தெரிந்துகொள்ளலாம். அறிஞர் எந்த ஞானநூலிலும் இந்த மூன்றையுமே விசேஷித்துக் கூறியிருக்கிறார்கள். இது பாரதத்தில் ஸநத்ஸுஜாதபர்வம் என்கிற பெயரால் வழங்கப்பட்டிருக்கிறது. இது பகவத்கீதைக்கு முந்தியதாதலாலும், இதுவே பகவத்கீதையாக விரிந்தமையாலும் இந்த ஞானத்தை முடிந்த ஞானமென்று பெரியோர் வழங்குகிறார்கள்.

இதில் பிரமத்தை அடைவதற்குக் குருகுலவாசமே சிறந்த மார்க்கமென்று விஸ்தாரமாகக் கூறப்பட்டுள்ளது. திருதராஷ்டிர மஹாராஜன் கஷ்டமில்லாமல் பிரமத்தை அடைகிற மார்க்கம் எதுவோ அதைக் கூறியருளும் என்று கேட்டபோது ஸநத்ஸுஜாத முனிவர் பின்வருமாறு கூறினார்.

முறைப்படி குருகுலத்தில் வாசம் பண்ணிக் குருவினுடைய கருணையைப் பெற்று சற்சிஷ்யனென்று மதிக்கப்படுகிறவன் சரியான பிரமசரிய விரதானுஷ்டானம் செய்கிறவனாவான். அவனிடத்தில் எப்போதும் பிரமம் பிரகாசிக்கிறது. அவன் தேகாந்தத்தில் பிரமமே யாய்விடுவான். அரசனே! இந்தச்சரீரம் மாதாபிதாக்களால் உண்டாக்கப்பட்டது. குரு உபதேசத்தால் பெறப்படுகிற புதிய சரீரமானது பரிசுத்தமுள்ளது; அழிவில்லாமலிருப்பது; பிறப்பினை யடையாதது. இதுவே ஞான சரீரமாம். பிரமத்துடன் சேர்க்கிறதும், நித்தியத்துவத்தைக் கொடுப்பதும், சத்தியத்தால் சரீரத்தை

மூடுவதுமான ஞானத்தைக் கொடுத்தருளிய குருவை மாதாபிதாக்க ளாகவே மதிக்கவேண்டும். அவர் செய்த நன்மையை நினைத்துக்கொண்டே யிருக்கவேண்டும். ஒருபோதும் மறக்கப்படாது. அவருக்கு யாதொரு தீமையும் செய்யக்கூடாது. தவறாமல் குருவை நமஸ்கரித்து அவரை மகி மைப்படுத்த வேண்டும். தேகத்தையும் மனதையும் பரிசுத்தமாக வைத்துக் கொண்டு அவரிடத்தில் பாடம்படிக்க வேண்டும். படிக்கும்போது வேறு கவனம் வைக்கக்கூடாது. குருவால் இடப்படுகிற எந்தப் பணிவிடையையும் குறைவாக நினைக்கப்படாது. கோபம் கொள்ளக்கூடாது. தன்குல தர்மத் தை விடாமல் அனுஷ்டிக்க வேண்டும். தன் ஜீவன், பொருள், எண்ணம், தொழில், பேச்சு எல்லாவற்றாலும் ஒத்துக் குருவுக்குப் பணிவிடை செய்ய வேண்டும்; குருபத்தினி குரு புத்திரன் முதலானவர்களிடத்திலும் குருவிடம் நடப்பதுபோலவே நடந்துகொள்ள வேண்டும். குருவானவர் தனக்குச் செய் ததை நன்றாய் மனதில் பதியவைத்துக் கொள்ளவேண்டும். அதன் கருத்தை உணர்ந்து சந்தோஷப்பட வேண்டும். இவர் எனக்கு உபதேசம் செய்தார்; எனக்குப் பெரிய காரியத்தைச் செய்தார் என்று மகிழ வேண்டும். அதை மற வாமல் சிந்தித்துக்கொண்டிருத்தல் வேண்டும். வேறொரு ஆசிரமத்தை யடைய விரும்பினால் சரியான தட்சணையை அவருக்குக் கொடுத்துவிட்டு அதன்பிறகு அடையவேண்டும்; தட்சணை கொடாமல் வேறு ஆசிரமத்தை அடையக்கூடாது. என்றதனால் பிரமஞானோபதேசம் பெற்றவர்கள் விரும்பி னால் கிருகஸ்தாசிரமத்தை அடையலாமென்றும் கிரமமான தட்சணையைக் கொடுக்க வேண்டுமென்றும், அதன்பின் கிருகஸ்தனாய்க் கர்மானுஷ்டானங் களைச் செய்து பிரம நிஷ்டாபரனாயிருக்கலா மென்றும் விளக்கப்பட்டது. வேறு ஆசிரமம் என்று கூறியதினால் கிருகஸ்தாசிரமமே யன்றி வானப்பிரஸ்த சந்நியாசாசிரமங்களில் விருப்பமானதை அடையலா மென்றும் கொள்ளக் கிடப்பது காண்க. தட்சணை கொடுக்கும்போது நான் இந்தத் தட்சணையைக் கொடுக்கிறேனென்று வாயாலும் சொல்லக்கூடாது, மனதிலும் நினைக்கக் கூடாது.

இங்ஙனங் கூறிப்போந்த பிரமசரியம் காலத்தாலும், குருவின் சம்பா ஷணையாலும், தன் அறிவினாலும், விசாரணையாலும் அடையப்படுவது. இந்தப் பிரமசரியம் பனிரண்டு தர்மங்களா லுண்டாகின்றது. அவைகள் யோகங்கள் எனப்படும். யோகத்தில் வசக்கமாயிருப்பது பலங்களென்று சொல்லப்படுகின்றது. அது குருவின் உதவியாலும் பிரமத்தின் சேர்க்கை யாலும் முயற்சியாலும் அடையப்படும். இத்தன்மையுள்ள சிஷ்யன் தான் சம்பாதிக்கிற எல்லாவற்றையும் தன் குருவுக்குக் கொடுத்துவிட வேண்டும். குரு புத்திரனிடத்திலும் இப்படியே நடந்துகொள்ள வேண்டும். இந்தச் சிஷ்யன் உலகத்தில் எவ்வகையாலும் பெருமை, புகழ், சந்ததி விருத்திகளை அடைவான். எல்லாரும் அவனுக்குச் செல்வத்தைச் சொரிவார்கள். இந்தப் பிரமசரியத்தினாலேயே தேவர்கள் தெய்வதத்துவத்தைப் பெற்றார்கள்.

இப்படியாக ஸநத்ஸுஜாத முனிவர் பரமோத்கர்ஷமாகிய அத்வைத பரமஞானத்தைச் சந்தேகமற உபதேசித்துவிட்டுத் தமதாச்ரமம் போய்விட் டார். அதன்பின் திருதராஷ்டிர மஹாராஜன் விதுரரைச் சமீபத்தில் அழைத்துப் புத்திசாலியே! உன்னால் நான் சிறந்த ஞானோபதேசம் பெற் றேன். கவலை ஒழிந்தேன். உபல்லாவியம் போய்வந்த சஞ்சயன் என்ன சமா சாரம் சொல்வானோ என்று மதிமயங்குகிறது. யுதிஷ்டிரன் சமாதானத்தை விரும்பாமல் சண்டையையே விரும்பினானால் கௌரவவம்சம் முழுவதும் நாசமாய்விடும். உலகத்திலுள்ள க்ஷத்திரியர்கள் எல்லாரும் அழிவார்கள்.



இந்தப் பாதகம் என்னைத்தான் சேரும். அதைக்குறித்து என்மனம் தத் தளிக்கின்றது. நீ எனக்கு உலகஞானத்தைக்கூறி இந்த இராவைக் கழியச் செய் என்று கூறினான்.

விதுரர்—மஹாராஜாவே! நீர் இருதிறத்தாரையும் சமனாகப்பாராமல் பட்சபாதகம் செய்கிறீர். பாண்டவர்களுக்குரிய பாகத்தைக் கொடுத்து விட்டீரானால் கவலையற்றுச் சுகமாய் ஜீவிக்கலாம். பாண்டவர்கள் தங்களுடைய பாதி ராஜ்யத்தையே விரும்புகிறார்கள். நீர் அதற்குச் சம்மதிக்கவில்லை. அவர்கள் உயிரோடிருக்கிறவரையில் அவர்கள் பாகத்தை இந்திரனாலும் அடைய முடியாது. உமது கவலை வீண் கவலையே. யோசித்துப்பார்த்தால் உமக்கே இராஜ்யம் கிடையாது. முழுமையும் பாண்டவருடையதே. அவர்க ளுடைய இராஜ்யத்தை நீர் அபகரிக்க முயலுகிறீர். இதனால் உலகத்தில் பெரிய சங்கார முண்டாகும். பீமார்ஜுனர்கள் கதையையும் வில்லையும் ஏந்திக்கொண்டு யுத்தகளத்தில் வந்து நின்றால் அவர்களோடு சரியாக எதிர்த்து நிற்கிறவர்கள் உமது சைனியத்தில் ஒருவருமில்லை. காலகேய நிவாதகவசர் களை ஒருவனாக எதிர்த்து ஜயித்த அர்ஜுனனை ஜயிப்பவர் யார்? நீர் கேட்ட உலகஞானத்தைச் சொல்லுகிறேன் கேளும் என்று சொல்கிறார்.

(தொடரும்) சிவானந்தசாகர யோகீஸ்வரர்.

## ஞானப் பிரகாசம்.

தண்ணீருக்குள் வைக்கப்பட்ட பாத்திரமானது, உள்ளும் புறம்பும் நீர் நிறைந்ததாகவே யிருக்கும்; அதைப்போலவே ஈசுரனிடத்திலே ஐக் கியமாயிருக்கும் ஆத்மா, எங்கும் வியாபகமாயுள்ள பரமாத்மாவை உள்ளும், புறம்பும் தரிசித்துக்கொண்டே யிருக்கும்.

* * *

நீ உன் மனதிற்குள்ளாகவே, "குடும்பக் கவலைகள் என்னுடையவை யல்ல; இவை ஈசுரனுடையவையே; நான் அவருடைய தாசனே; அவரின் இச்சைப்பிரகாரம் நடக்கவே நான் இங்கே வந்திருக்கிறேன்" என்று எப் பொழுதும் சிந்தனை செய்துகொண்டிரு; இச்சிந்தனை உறுதியடைந்துவிட் டால் உலகத்தில் உனக்குச் சொந்தமென்று கூறும்படி ஒன்றுமே யிராது; நீ ஈசுரனிடத்தே லயமாகிவிடுவாய்.

* * *

எடை கனமாயுள்ள தராசுத் தட்டு கீழே தாழ்கின்றது; இலேசான தட்டு மேலே கிளம்புகிறது; இவற்றைப்போலவே புத்திசாலித்தனமும், சாமார்த் தியமும் நிறைந்த மனிதன் எப்பொழுதும் அடக்கமும், வணக்கமு முடைய வனா யிருக்கிறான்; அறிவில்லாத மூடன் கர்வங்கொண்டு எவரையும் மதியா மல் தலைநிமிர்ந்து திரிகிறான்.

சாதுக்களுடைய சங்கமானது அரிசிக் கழுநீர் போன்றது; அரிசிக்கழுநீரானது, காடிநீரினு லுண்டாகும் மயக்கத்தைப் போக்கும் வல்லமையுள்ளது; அதைப்போல் சாதுக்களுடைய சங்கமும் வீணான உலக ஆசையாகிய மதுபானத்தினு லுண்டாகும் மயக்கத்தைப்போக்கும் வல்லமையுள்ளது.

* * *

பக்தனுக்கு ஈசுவரன் பல வடிவங்களிலும் பிரசன்ன மாகிறார்; ஆனால், சமாதியிலே பிரஹ்மஞானநுபூதி யடைந்தவனுக்கு அவர் நிர்க்குண பிரஹ்மமாகவே—நிராகார வஸ்துவாகவே—நிர்ப்பந்தப் பொருளாகவே யிருக்கிறார்; இந்நிலையில்தான் ஞானமும், பத்தியும் ஒற்றுமைப்படுகின்றன.

* * *

பிரபஞ்சலீலை எவருடையதோ அவருக்கே நித்தியத்தன்மையுண்டு; எவருக்கு நித்தியத்தன்மையுண்டோ அவருடையதே இந்தப் பிரபஞ்சலீலை.

* * *

குருவையும் அறியாத சிஷ்யனையும் அறியாத ஒருவித பரிசுத்தநிலை அதிக இரகசியமானது; அதுதான் பிரஹ்மஞானமென்று சொல்லப்படும்; அந்த ஞானம் ஒருவனுக்கு உண்டாய்விட்டால் குருவினிடத்திலும் சிஷ்யனிடத்திலும் வித்தியாசம் ஏற்படாது; எல்லாம் சமமே.

* * *

சில சமயங்களில் நாம் உடை தரித்துக்கொண்டும், சில சமயங்களில் ஆடையின்றியும் இருப்பதுபோல பிரஹ்மவஸ்துவானது சில சமயங்களில் சகுணமாயும், சில சமயங்களில் நிர்க்குணமாயும் இருக்கின்றது; சகுணப் பிரஹ்மம் சக்தியோடுகூடிய பிரஹ்மமெனப்படும்; அப்பொழுது அது ஈசுவரன் எனப்படும்.

* * *

ஈசுவரஞானத்தைப் புத்தகங்களைப் படிப்பதன்மூலமாகத்தான் அடைதல் கூடும், வேறு எவ்வழியினாலும் பெறல் முடியாது என்று பலர் நினைக்கிறார்கள்; இது சரியான அபிப்பிராயமன்று; சாஸ்திரங்களை வாசிப்பதைக்காட்டினும் உண்மையை, ஞானிகளிடம் கேட்பதனால் அந்த ஞானம் எளிதிலேற்படும்; அதிலும் அநுபவத்தில் அதி எளிதில் அந்த ஞானதரிசன முண்டாகும். வீண் சாஸ்திரப்படிப்பைக் காட்டினும் சற்குருமூலமாக ஈசுவரஞானத்தைக் கேட்டுணர்ந்துகொள்ளுதல் மனதில் நன்றாய்ப்பதியும்; அதைக் காட்டினும் பிரத்தியக்ஷ ஞானதரிசனம் நன்றாய்ப் பதியும்; காசியைப்பற்றி அறிவதற்கு அது சம்பந்தமான புத்தகத்தைப் படிப்பதைக் காட்டினும், காசிக்குச் சென்று அதை நேரில் பார்த்தவரிடம் கேட்டுத் தெரிந்துகொள்வது நலம்; அதைக் காட்டினும் நேரிலேயே காசிக்குச் சென்று அதைத் தரிசிப்பது மேலாகும். குருநாதர்.

---

## புதிய ஜீவிய சந்தாதார்.

மலாய் நாட்டைச்சார்ந்த டாம்பினிலுள்ள திருவாளர்-எம். சின்னையா அவர்கள், நம்போதினியின் 14 வது ஆண்டு ஆரம்பமாகிய இந்த ஆடிமாதத்தி லிருந்து நம்போதினிக்கு ஜீவிய சந்தாதாராகச் சேர்ந்திருக்கிறார்கள். இவர்களுடைய தமிழபிமானமும், பத்திரிகாபிமானமும் அறிஞர் பலராலும் புகழத்தக்கவை, தமிழைப் போற்றும் பெருங்குணம் வாய்ந்த இப்பேரறிஞர்க்குச் சிறந்த செல்வமும், நிறைந்த ஆயுளும் நல்குமாறு எல்லாம்வல்ல இறைவனை வேண்டுகின்றோம். ப-ர்.




## வேதாந்த சார சங்கிரக வசனம்.

(13-ம் தொகுதி 497-ம் பக்கத் தொடர்ச்சி)

நல்ல புத்திமான் கர்ப்பவாசம் ஜனனம் மரணம் முதுமை வியாதி நரகம் முதலானவைகளினால் பிராணிகளுக் குண்டாகும் துக்கங்களை யறிந்து அவற்றைப் பன்முறை சிந்தித்து, விஷயாதிகளிடத்துண்டாகும் விருப்பத்தை அவ்விஷயங்களினிடத்துள்ள தோஷங்களை யறிவதன்மூலமாக ஒழித்து, சித்தத்தினுடைய கிரந்தியாகிய பந்தத்தினின்று விடுதலை யடைவதற்காக சத்துவகுணத்தை யவலம்பிக்கவேண்டும்.

சீடன்:—என்னை வாழ்விக்கவந்த வரதரே! மனம் எதனால் நிர்மலமடையும்?

குரு:—மைந்தா! எவனொருவன் பிரயத்தினத்தினால் இயமநியமங்களில் விருப்பமுடையவனாகின்றானோ அந்த விவேகியின் மனம் நிர்மல மடையும். (இயமம்=இந்திரிய நிக்கிரகம். நியமம்=ஞானப்பியாசம்.) எவன் மோக்ஷாபேக்ஷையால் எப்பொழுதும் காமக்குரோதாதி துர்க்குணங்களாகிய அசுரசம்பத்தைவிட்டு விவேகம் விராகம் சமாதி சம்பத்தி முதலாகிய தேவசம்பத்தை அடைகின்றானோ அவனுடைய மனம் நிர்மலமாகும். எவனுடைய மனமானது பிறர்பொருளை யிச்சித்தல், பிறரை வஞ்சித்தல் பிறரை நிந்தித்தல், பரமாதரை விரும்புதல் முதலானவைகளை யடையாதிருக்கின்றதோ அவனுடைய மனம் பரிசுத்த மடையும். எவன் தனது சுகதுக்கங்களைப்போல சகல பிராணிகளின் சுகதுக்கங்களைக் கருதுகின்றானோ அவன் மனம் மலினமற்றதாகும். எவன் சகிப்புத்தன்மையுடையவனாய் சிரத்தா பக்திகளுடன் குருவையும் ஈசுவரனையும் இடைவிடாமல் தன்னிடத்தேதானே சேவிக்கின்றானோ அவன் மனம் நிர்மலமானதாகும். ஈசுவராராதனமும் பெரியோர் சேவையும் தீர்த்தயாத்திரையும் சித்தசுத்திக்குக் காரணங்களாம்.

சீடன்:—சுவாமி! சத்துவகுண விருத்தி எதனாலுண்டாம்?

குரு:—கசப்பு, புளிப்பு, உப்பு, மிக்க உஷ்ணம், பசையற்றது, மிக்க தாகத்தையுண்டாக்குவது, துர்க்கந்தமுள்ளது முதலாகிய தமோகுண பதார்த்தங்களைப் புசியாதிருத்தலால் சத்துவகுணம் விருத்தியாகும். வேதங்களையும் தத்துவார்த்தங்களைக் கூறுகின்ற புராணங்களையும் வாசிப்பதாலும் சாதுக்களுடன் சாங்கத்தியம் செய்வதாலும் சத்துவகுணம் மேம்படும். எவனுடைய மனம் விருப்பமற்றதாகின்றதோ, எவனுடைய மனம் சாந்த முடையதாகின்றதோ அவனுக்கு உலகமுழுதும் மித்திரபாவமாகும். முத்தியும் அவன் உள்ளங்கையிலிருக்கும்.

இதமும் மிதமுமான போஜனத்தைப் புசிப்பவனும் எப்போதும் ஏகாந்த (தனித்த) ஸ்தானத்தில் இருப்பவனும் மிதமாகப் பேசுவோனும் சொற்ப நித்திரையுடையவனுமாகிய மனிதன் விரைவில் சித்த சுத்தியையடைகிறான். சம்சார பந்தத்திலுள்ளவன் சித்த சுத்தியின்றி பரமாத்ம சொரூபத்தை (தத்துவஞானத்தைத்) தெரிந்துகொள்ளும் சத்தியுடையவனாகான். பரமாத்ம சொரூபத்தை யறியாவிடின் (தத்துவஞான மில்லாவிடின்) ஆயிரகோடி கற்ப மாயினும் முத்தி சித்தியாது. புருஷனுக்கு மனம் பரிசுத்தமாகாதிருத்தலே பந்தமாம். பரிசுத்தமாதலே சம்சாரபந்த விடுகலேயாம். ஆதலால் மனச் சுத்தத்தின் பொருட்டு மனத்திலுண்டாகும் இச்சைகளை யொழிக்க வேண்டும். அன்புள்ள குமாரா! இனி பிராணமய கோசத்தைக் கூறுகிறேன். கேட்பாயாக.

## பிராணமய கோசம்.

முற்கூறிய ஆகாசம் முதலிய (சூக்ஷ்ம) பூதங்களைந்திலுமுடைய ரஜோ குணாம்சத்தினின்றும் வாக்கு பாணி பாதம் பாயுரு உபஸ்தம் என்னும் கர்மேந்திரியங்களும், பிராணம் அபானம் வியானம் உதானம் சமானம் என்னும் ஐந்து வாயுக்களுமுண்டாயின. (பாணி-கை. பாயுரு(அ)-குதம்-மலத்துவாரம். உபஸ்தம்-ஜலத்துவாரம். கர்மேந்திரியம்-கர்ம இந்திரியம்-தொழிற்கருவி.) (சூக்கும பூதங்களின் தனித்தனியாகப் பிரிவுபட்ட ரஜோகுணாம்சத்தினின்றும் பஞ்சேந்திரியங்களும்," கலப்பான ரஜோகுணாம்சத்தினின்றும் பஞ்ச வாயுக்களும் தோன்றின வென்றறிக. கன்மேந்திரியங்கள் தனித் தனியாகப் பிரிந்திருப்பதும் வாயுக்கள் கலந்திருத்தலும் காண்க.) இவற்றுள்,

பிராணவாயு-மேல்நோக்காகச் சஞ்சரிப்பது. (இருதயத்திலிருக்கும்)
அபானவாயு-கீழ்முகமாகச் சஞ்சரிப்பது. (குதத்திலிருப்பது)
வியானவாயு-குறுக்காகச் சஞ்சரிப்பது. (சருவாங்கத்திலிருப்பது)
உதானவாயு-அன்ன ஜலங்களின் விபாகத்தைச் செய்வது (கண்டத்திலிருப்பது)

சமானவாயு-உண்ட அன்னரசத்தை சமமாகச் சகல அவயவங்களிலும் செலுத்துவது. (நாபியிலிருப்பது.)

சீடன்:—கன்மேந்திரியங்களும் வாயுக்களும் ரஜோகுணாம்சமானவை யென்றறிவதெப்படி?

குரு:—அவற்றினிடத்துக் காரியம் செய்யும் தன்மை காணப்படுவதால் அவை ரஜோகுண சம்பந்தமுடையவை யென்று அறிதல் வேண்டும். ஏனெனில், ரஜோகுணம் கிரியாசத்தியுடைய தென்றும், தமோகுணசக்தி சடத்தன்மையுடைய தென்றும், சத்துவகுணம் பிரகாச வடிவுடைய தென்றும் மகரிஷிகள் கூறியிருக்கின்றனர். ஆதலால் கன்மேந்திரியங்களும் வாயுக்களும் ரஜோகுணாம்சமேயென்றறிய வேண்டும்.

இந்த ஸ்தூல சரீரம் சலித்துக்கொண் டிருத்தற்குக் காரணமாக வுள்ள இந்தப் பிராணன் முதலாகிய பஞ்சவாயுக்களும் கர்மேந்திரியங்களைந்துடன் கூடி பிராணமய கோசமாம். வாக்கு முதலிய கர்மேந்திரியங்களாலும் சரீரத்தாலும் செய்யப்படும் புண்ணிய பாவங்களாகவுள்ள சகல காரியங்களும் பிராணமய கோசத்தினாலேயே செய்யப்படுகின்றன வாகும். எப்படி மரமானது காற்று வீசும்போது பல விதமாய் அசைகின்றதோ, காற்று வீசாத போது அசையாமலிருக்கின்றதோ அப்படியே சரீரமும் இந்த வாயுக்களாலும்



கன்மேந்திரியங்களாலும் பிரேரேபிக்கப் (தூண்டப்) படுவதாய் விதிவிலக்குகளாகிய பல வகைப்பட்ட காரியங்களிலும் பிரவேசிக்கின்றது. நிற்க,

## சூக்ஷ்ம பிரபஞ்சம்.

மைந்தா! இதுகாறும் கூறிய பிராணமயம் மனோமயம் விஞ்ஞானமயம் என்னும் மூன்று கோசங்களும்கூடி ஜீவாத்மாவின் சூக்கும சரீரமாகும். இச் சரீரம் அதிசூக்ஷ்மமாய் ஒடுங்கிக் காணப்படுவதால் லிங்கசரீரமென்றும் ஸ்தூலசரீர திருஷ்டியால் சூக்ஷ்மசரீர மென்றும் சொல்லப்படுகின்றது. ஒரு புத்திக்கு விஷயமாவதால் மூன்று கோசங்களும் சேர்ந்து லிங்கசரீரமாயின.

சமஷ்டி வடிவமாகிய விருக்ஷங்களின் கூட்டம் வனமெனப்படுதல் போல, இந்த லிங்கசரீர சமஷ்டியுடன் கூடினதும் எல்லாவற்றினும் வியாபித்துள்ளதுமாகிய சைதன்யம் (ஈசுவரன்) இரண்ய கர்ப்பனென்றும் சூத்திராத்மாவென்றும் பிராணம் என்றும் பெரியோர்களா லழைக்கப்படுகின்றது. பிரகாச ரூபமான புத்திக்குள் (கருப்பத்தில்) பொன்னைப் (இரணியம்) போல பிரகாசிப்பதால் இரணிய கருப்பனெனவும், ஓர் மணிக்கோவையிலுள்ள நூல் (சூத்திரம்) போல எல்லா லிங்கசரீரங்களினும் வியாபித்திருப்பவனாகையால் சூத்திராத்மாவென்றும், எல்லா லிங்கசரீரங்களையும் ஜீவிக்கச் செய்கின்றவனாகையால் பிராணமென்றும் இந்த சமஷ்டி லிங்கசரீராபிமானி (ஈசுவரனு) க்குப் பெயர்களிடப்பட்டன.

மேலும், இந்த லிங்கசரீரம் அநேக புத்திகளுக்கு விஷயமாவதால் வியஷ்டியாகின்றது. இந்த வியஷ்டி லிங்கசரீரத்தோடு கூடியதும் சிதாபாசனோடு கூடியதுமாகிய சைதன்யம் தைஜசன் என்னப்படும். இந்த லிங்க சரீராபிமானி (ஜீவன்) பிரகாச ரூபமாகிய அந்தக்கரணத்தை உபாதியாக வுடையவனாகையால் தைஜசன் (பிரகாச வடிவினன்) என்னப்படுகின்றான். (ஒரு புத்திக்கு விஷயமாவதால் லிங்கசரீர மனைத்தும் சேர்ந்து ஒரே சரீரமாயிற்றென்று முன்பு கூறப்பட்டது. இப்போது அநேக புத்திகளுக்கு விஷயமாவதால் லிங்கசரீரம் வியஷ்டியாகுமென்று கூறப்படுகின்றது. எனவே, அநேகமாகிய மரங்களும் ஒரு புத்திக்குக் கோசரமாகையால் அவற்றின் சமஷ்டி வடிவமாகிய வனமாகக் கிரகிக்கப்படுகின்றன. அவைகளே அநேக புத்திகளுக்குக் கோசரமாகும்பொழுது வியஷ்டி ரூபமாகிய அநேக மரங்களாகக் கிரகிக்கப்படுகின்றன. இங்கு ஒருமை (சமஷ்டி)த் தன்மையும் பன்மை (வியஷ்டி)த் தன்மையும் புத்தி கற்பிதமாகும். ஆதலால் இதையும் அவ்வாறே கொள்க.)

இந்த வியஷ்டிலிங்க சரீரம் ஸ்தூல சரீரத்தைவிட சூக்ஷ்மமானதாகலின் சூக்ஷ்மமென்றும் ஜாக்கிராவஸ்தையில் சம்ஸ்கார வடிவமாயிருத்தலின் சரீரமென்றும் கூறப்படுகின்றது. இந்த சூக்ஷ்ம சரீராபிமானி (தைஜசனென்னும் பெயருடைய ஜீவன்) சொப்பனாவஸ்தையில் ஜாக்கிராவஸ்தையின் வாசனைகளால் கற்பிக்கப்பட்ட சூக்ஷ்ம பதார்த்த வடிவ விஷயங்களை சூக்ஷ்ம மனோவிருத்திகளால் அனுபவிக்கிறான்.

முன் கூறியபடி சமஷ்டிக்கும் வியஷ்டிக்கும் சமான தருமத் தன்மையிருப்பதால் (பேதமேயில்லை) அபேதமே யென்றறியவேண்டும். ஜாதி ஒன்றாயிருக்கையில் பேதம் எப்படி யுண்டாகும்? இரண்டு உபாதிகளுக்கும் அபேதமேற்படும்பொழுது, அந்த சமஷ்டி வியஷ்டியென்னும் இரண்டு உபாதிகளை அபிமானித்த சூத்திராத்மாவிற்கும் தைஜசனுக்கும் மாத்திரம் பேதமுண்டாவதெங்ஙனம். ஆகையால் அபேதமே அங்கிகரிக்கப்பட்டது.

(தொடரும்.) பு. ஸ்ரீநிவாஸன், தமிழ்ப்பண்டிதர், சித்தூர்,




## ஸ்ரீ வைஷ்ணவ சமயப் பெரியார்.

ஸ்ரீ வைஷ்ணவ சமயத்தார் தமது சமயத்துப் பெரியாரை ஆழ்வார்கள் என்றழைப்பர். ஆழ்வார்களென்றால் ஆழ்ந்தறியும் ஞானத்தைத் துணைக் கருவியாகப் பெற்றுள்ளவர்களென்பதாம்; அதாவது "நீரளவே யாகுமாம் நீராம்பல் தாங்கற்ற நூலளவே யாகுமாம் நுண்ணறிவு" என்கிற படி, பிறர் தங்கள் முயற்சியால் கற்குங் கலையளவுக்குரிய ஞானத்தையே பெறுவர்; அன்னவர்க்குத் தாங் கற்றதுதவிரக் கல்லாதது புலனாகாது; ஆழ்வார்களோ பகவானுடைய ஜாயமான கடாக்ஷத்தைப்பெற்று, அவனால் இவ்வுலகத்தைத் திருத்த அவதரித்த நித்தியசூரிகளாதலால், அவர்களடைந்துள்ள ஞானம், மற்றவர்களுக்குப் புலப்படாமல் ஆழ்ந்து மறைந்திருக்கும் பொருள்களனைத்தும் விளக்கமாகத் தெரியக்கூடியதா யிருக்கும். இந்த அறிவின் ஆழ்ச்சி அதனை யுடையவர்கள் மீதேற்றப்பட்டதால் அவர்கள் ஆழ்வார்கள் என்னப்பெற்றனர். அவ்வாழ்ச்சிதான், அறிதற்கரிய பரமாத்மாவைப் பிரத்தியட்சமாகக் காணுதலாம்.

உதாரணம்:—பாண்டிய னொருவன், முன்னம், பரதத்வநிர்ணயத்தின் பொருட்டு நாட்டிய கிழியை, ஸ்ரீ பட்டர்பிரான் என்னும் ஆழ்வாரொருவர் அறுத்து, அப்பாண்டியனது சங்கையை யொழித்தபோது, சந்தோஷசாகரத்தில் மூழ்கிய அவன், அவ் வாழ்வாரை அலங்கரித்து நகர்வலம் வரச்செய்தான். அக்காலத்தில், கண்ணுக்குத் தோன்றாத பரமாத்மா யாவர் கண்ணுக்குந் தோன்றும்படி சேவை சாதிக்க, ஆழ்வார் போன்புகொண்டு, "பல்லாண்டு" பாடி அப்பரவஸ்துவை மங்களாசாசனம் புரிந்தார். இதனை,

"மங்களா சாசனத்தில் மற்றுமுள்ள வாழ்வார்கள்
தங்களார் வத்தளவு தானன்றிப்—பொங்கும்
பரிவாலே வில்லிபுத்தூர்ப் பட்டர்பிரான் பெற்றான்
பெரியாழ்வா ரென்னும் பெயர்"

எனவரும் பாசுரத்தா லறிக.

இப்படி பகவானுடைய கிருபா விசேஷத்தால், ஆழ்ந்துணரும் அறிவை யடைந்து, வேதமாகிற கடலில் ஆழ்ந்து மறைந்து கிடக்கும் முக்கிய சாராம்சமான மந்த்ர ரத்னார்த்தங்களைத் திரட்டிச் சுருக்கமாகவும், விசிதமாகவும் சேதனர்களுக் குதவிய காரணத்தால் இவர்கள் ஆழ்வார்கள் என்னும் பெயரை எய்தினரென்பதும் பொருத்தமானதே. ஆழ்வார் எனினும் பெரியார் எனினும் ஒன்றே என்பதனை, பரிமேலழகர், திருக்குறள், "இறைமாட்சி" யதிகாரத்தில் அப்பொருளை விளக்குமிடத்தில் திருவுடை மன்ன



ரைக்காணில் திருமாலைக் கண்டேனே யென்னும்" என்று ஆழ்வாரும் பணித்தார் என்று கூறாமல் அவருடைய பரியாய நாமத்தால் பெரியாரும் பணித்தார் என்றனர். அறிவுடையவர்களைப் பெரியாரென்றழைப்பது உலக முறைமை. அதைநோக்கிப் பரிமேலழகர் ஆழ்வாரைப் பெரியார் என்றனரே யல்லாமல் பெரியாரென்பது ஆழ்வாரின் பரியாய நாமமென் றுத்தேசித்தன்று எனக் கூறுவாரு முளர். அது சரியன்று. பரிமேலழகர் மேற்கோள் காட்டும் மற்ற இடங்களிலெல்லாம் பிறர் கூறுவர் என்று கூறிக்கொண்டே வந்து இங்குமாத்திரம், 'பெரியாரும் பணித்தார்' என்று கௌரவித்துக் கூறுவதால் இது ஆழ்வார் என்னும் பெயரின் பரியாய நாமமேயாம்.

ஆழ்வார்கள் ஆழ்ந்த அறிவைக் கொண்டவர்களென்பதை அவர்களருளிய பிரபந்தங்களைக் கூர்ந்து நோக்குவார்க்கு இனிது வெளியாம். இதனை,

"தெருளுற்ற ஆழ்வார்கள் சீர்மையறி வாரார்
அருளிச் செயலையறி வாரார்—அருள்பெற்ற
நாத முனிமுதலா நற்றே சிகரையல்லால்
பேதைமன மேயுண்டோ பேசு" (உபதேசரத்தினமாலை)

"உயிர்த்தா ரையிற்புக் குறுகுறும் பாமொரு மூன்றினையும்
செயிர்த்தார் குருகைவந் தார்திரு வாய்மொழி செப்பலுற்றால்
மயிர்த்தா ரைகள்பொடிக் குங்கண்கள் நீர்மல்கும் மாமறையுள்
அயிர்த்தா ரயிர்த்த பொருள்வெளி யாமெங்க ளந்தணர்க்கே"
(சடகோபரந்தாதி)

என்பவை போன்ற பாடல்கள் அறிவுறுத்தும். நிற்க,

இவ்வாழ்வார்கள் பதின்மராவர். அவர்கள் பொய்கையார், பூதத்தார், பேயார், (இம்மூவரும் ஆதியோகியரெனப் படுவர்) திருமழிசையார், குலசேகரர், பட்டர்பிரான், தொண்டரடிப்பொடியார், பாண்பெருமாள், திருமங்கையார், சடகோபர் என்பவராவர். இவர்களுடன் ஆண்டாள், மதுரகவியார் என்னும் இருவரும் சேர்ந்து பன்னிருவராவர்.

இவர்களுடையவும், இவர்கள் சம்பந்தம் பெற்ற ஆசாரிய புருஷர்களுடையவும் திவ்விய சரித்திரங்களைக் கிரமப்படி, சுருக்கமாகவும் விளக்கமாகவும் நமது ஆனந்த போதினி சஞ்சிகையில் சிறிதுசிறிதாக எழுதி, சந்தாநேயர்களெல்லோரும் நன்கறியுமாறு வெளியிட்டுவர அப் பெரியார்களது திருவருளைப் பிரார்த்திக்கின்றனம். மக்கள் பிழைக்குரியராதலின் இக்கட்டுரையிற் பிழைகாணின் அதை யறிஞர் பொறுத்தருள்வாராக:

### முதலாழ்வார்கள் ஆகிற பொய்கையார், பூதத்தார், பேயா ரென்னும் மூவர் வைபவம்.

பிரமதேவன் அசுவமேத யாகஞ்செய்து பகவானான ஸ்ரீயப்பதியை ஆராதித்த ஸ்தலமாகிய காஞ்சீபுரத்தில், திருவெஃகாவில், பொற்றாமரைப் பொய்கையில், துவாபர யுகத்தில் எட்டுலக்ஷத் தறுபத்தீராயிரத்துத் தொளாயிரத் தோராவதாண்டில் நிகழ்ந்த சித்தார்த்தினு ஐப்பசிமீ சுக்லாஷ்டமி,

செவ்வாய்க்கிழமை கூடிய திருவோண நக்ஷத்திரத்தில் ஸ்ரீபாஞ்சஜன்யாம்சராய் பொய்கை யாழ்வார் திருவவதாரம் செய்தருளினர்.

இவர் அவதரித்த சுபதினத்திற்கு மறுநாளான அவிட்ட நக்ஷத்திரத்தில், திருக்கடன் மல்லையில், மனோகரமானதொரு குருக்கத்திப் புஷ்பத்தினிடம் ஸ்ரீகதாம்சராக பூதத்தாழ்வார் திருவவதரித்தார்.

இவர் அவதரித்த சுதினத்திற்கு மறுநாளான சதய நக்ஷத்திரத்தில், திருமயிலையில், மாதவப் பெருமாள் சந்நிதித் திருக்கிணற்றில் செவ்வல்லிப் புஷ்பத்தினிடம் ஸ்ரீநாந்தகாம்சராக பேயாழ்வார் அவதரித்தருளினர். இவர், பகவத் பக்தி மிக்குடையவராய், "பேயனே யொழிந்தே னெம்பிரானுக்கே" என்கிறபடி பகவதனுபவானந்தத்தால் திருமேனியில் மயிர்க்கூச்செறிந்து, ஆனந்தக் கண்ணீர்சோர நெகிழ்ந்த திருவுள்ளத்தையும் பரவசத் தொனியுடன் அமிர்தப் பிரவாகத்தை யொத்து வெளிப்படுஞ் சொற்களடங்கிய திருவாக்கையும் உடையவராய், ஸர்வசங்க பரித்யாகியாய்த் தோன்றியபடியாலே, "பேயாழ்வார்" என்னும் பெயராலழைக்கப்பட்டனர்.

உலகத்தை நல்வழிப் படுத்தவந்த அயோனிஜராகிய இம்மூவரும் ஒருநாள் இருந்த இடத்தில் மறுநாள் இராமல், தங்களைப்போன்ற பரம சாத்விகர்களைத் தேடித்தரிசிக்க இஷ்டங்கொண்டு புண்ணிய க்ஷேத்திரங்கள் தோறும் சஞ்சரித்து வரலானார்கள். இவ்வாறு இவர்கள் ஒருவரை யொருவரறியாது தனித்தனியே, "உண்டியே யுடையே யுகந்தோடுமிம், மண்டலத்தோடும் கூடுவதில்லை" "மாரனார் வரிவெஞ்சிலைக் காட்படும், பாரினாரொடுங் கூடுவதில்லை" "நண்ணுதார் முறுவலிப்ப நல்லுற்றார் கரைந்தேங்க, எண்ணுராத் துயர்விளைக்கும் இவை யென்ன வுலகியற்கை" என்றெண்ணித் திரிவதைக்கண்ட பகவான், இவர்களை ஒருங்கே சேர்க்கக்கருதி, பெண்ணையாற்றின் தென்கரையில் வாமன க்ஷேத்திரமாகிய திருக்கோவலூரில் வந்து தன்னைச் சேவிக்கும்படி இவர்களுக்குப் புத்திப்ரதானம் பண்ணினான். இவர்களும் அத்திருப்பதியையடைந்தார்கள்; அவ்வாறடைந்த சமயத்தில் சூரியனும் அஸ்தமிக்கலானான்.

முதலாக வந்த பொய்கையாழ்வார் ஒரு ஸ்ரீ வைஷ்ணவருடைய திருமாளிகையிற் சென்று அம்மாளிகையின் இடை கழியின்மீது சயனித்திருந்தார். பின்னர் பூதத்தாழ்வார் கண்வளர்தற்கு இடந்தேடிக் கொண்டு சென்று, பொய்கையார் சயனித்திருக்கும் இடத்தை யடைந்து, "அடியேன் சயனித்தற்கு இங்கு இடங்கிடைக்குமோ?" என்று வினவினார். அதற்குப் பொய்கையார், "சுவாமி! இவ்விடை கழியில் ஒருவர் படுக்கலாம்; இருவர் இருக்கலாம்; தேவரீர் எழுந்தருளினால் இருவரும் இருக்கலாம்" என்றார். அங்ஙனமே அவ்விருவரும் அங்கு உட்கார்ந்து, ஒருவரை யொருவர் உசாவிக்கொண்டிருந்தனர். அப்போது பேயாழ்வாரும் அவ்விடம் வந்து இடங்கேட்க, அங்கிருந்த இருவரும் அவரை நோக்கி, "சுவாமி! இங்கு ஒருவர் படுக்கலாம், இருவர் இருக்கலாம், தேவரீரும் எழுந்தருளினால் மூவரும் நிற்கலாம்" என்றனர். அவ்விதமே மூவரும் நின்றுகொண்டு ஒருவரோடொருவர் வார்த்தையாடிக் கொண்டிருக்கும்போது அந்தத் திருக்கோவலூர் எம்பெருமான் தன் சங்கற்பத்தால் பேரிருளும் பெருமழையும் உண்டாக்கி அவ்வாழ்வார்களோடு தானும் ஒருவனாகச் சென்று நின்றனன். அதனால் நெருக்கமுண்டாயிற்று.

ஆழ்வார்கள் மூவரும், "முன்னில்லாத நெருக்கம் இப்பொழுதுண்டான காரணம் என்னை? நம்மை யொழியவும் இவ்விடை கழியைப் பற்றி நிற்பாரும் உண்டோ?" என்று, "ஞானச்சுடர் விளக்கேற்றியும்" "உணர்வெனும் ஒளிகொள் விளக்கேற்றியும்" "வெய்ய கதிரோன் விளக்கேற்றியும்" பார்த்தனர்; பகவானுடைய திவ்யமங்கள சொரூபத்தை ஞானக்கண்ணாற் கண்டு பரமானந்தங்கொண்டு பிறப்பெனும் பெரும் பிணிக்குப் பரமௌஷதமும், சமுசார சாகரத்தைக் கடப்பதற்குரித்தான தெப்பமும், அப்பகவானது திவ்ய குணானுபவ ரூபமுமான பாடல்களால் அவனைத் துதித்தார்கள்.



திருக்கோவலூரில், ஆதியோகிகளாகிய இம்மூவரும் பகவானைக் கண்டு களித்து, பின் திருவயோத்திக் கெழுந்தருளி சீதா லக்ஷ்மண பரத சத்ருக்ந ஆஞ்சநேய சமேதரான சக்ரவர்த்தித் திருமகனாரைச் சேவித்து, அங்கு வறுமைப் பிணியால் வாட்டமுற்றிருந்த வேதிய ரொருவருக்கு இகபரப் பேற்றை யளித்தனர்; அதன் பின்னர் வதரியாசிரமத்தையடைந்து நரநாராயண முனிவர்களைப் பணிந்து, ஒரு மலைக்குகையில் யோகத்திலிருந்தனர். பிரமதேவன் அங்கு வந்து நரநாராயணர்களால் இவர்களுடைய வைபவத்தையறிந்து, இவர்களைச் சோதிக்கத்தொடங்கி, ஒரு சோலையையும், அதில் சில ரூபவதிகளான மங்கையரையும் உண்டு பண்ணி அம்மங்கையரால் மூவரையும் மயக்க முயன்றான். மூவரும் தமது யோக நிலையினின்றும் பிசகவில்லை; பிறகு துஷ்டமிருகங்களாலும், கொடிய சர்ப்பங்களாலும், இடி மழை மின்னலாலும் இவர்கள் தவத்தை யழிக்கப்பார்த்தும் பயன்படாமை கண்டு அந்தக் கமலாசனன் இவர்களை வணங்கிவிட்டுப் போனான்.

அப்பால் ஆழ்வார்கள் மூவரும் திருவேங்கட மென்னும் திருமலைக்குப் போய் அஃது சேஷாம்ச மாதலால் அதன்மீதேறாமல் அடிவாரத்திலிருந்தபடியே ஸ்ரீநிவாசப் பெருமானைத் தொழுது நிற்க, அப்பெருமான் இவர்களிருந்த இடத்தே வந்து காட்சியளித்தனன். அங்கு அரிதாசனென்னுமொருவர் இவர்கள் திருவடியை ஆஸ்ரயிக்க அவர்க்கு இவர்கள் அக்ஷய பாத்திரமொன்றும், அதனைப் பாதுகாக்கத் திருவாழியொன்றும் கொடுத்து, அப்பாத்திரமளிக்கும் பொன்னைக்கொண்டு சந்நிதி ஜீர்ணோத்தாரண கைங்கரியமும், பாகவதாராதனமும் செய்துவர நியமித்தார்கள். அம்மலையில் இவர்கள் எழுந்தருளியிருந்த இடத்திலிருந்த தீர்த்தம் இப்போதும் ஆழ்வார் தீர்த்தமென வழங்கப்பெற்று வருகின்றது.

பிறகு இவ்வாழ்வார்கள் கச்சிமாநகரை யடைந்து பேரருளாளப் பெருமானைச்சேவித்து, அங்குத் தம்மைச் சரண்புகுந்த விஷ்ணுவர்த்தனனென்னுமரசனை யாட்கொண்டு, அவன் தன் பகைவரையும் வெல்லச் செய்தார்கள்; அனந்தரம் திருவரங்கஞ்சென்று ஸ்ரீரங்கநாதனைவணங்கித் தொழுது சில நாள் யோகத்திருந்தனர்; இந்த இடத்தில் குஷ்டநோய் கொண்ட வேந்தனொருவன் இவர்களிடம்வந்து இவர்களுடைய திருவடிப் பொடியைப் பூசிக்கொள்ள உடனே அவன் வியாதி நீங்கிச் சுந்தர வடிவம் பெற்று, யோகிதாசன் என்னும் பெயரெய்தினான். அக்கால சோழபூபதியொருவன் நூறு குமாரத்திகளோடும் மனைவியோடும்வந்து இவர்களைப் பணிந்து நியாசவித்தை யுபதேசம் பெற்றனன். இவன் பெண்மக்கள் நூறு பேரும் யோகிதாசன் என்னும் அரசனை மணக்க விரும்பினார்கள். அவர்களை ஆழ்வார்கள் அவனுக்குத் திருமண முடிப்பித்து, சோழநாட்டையும் அச்சோழனது செல்வமுழுதையும் கொடுப்பித்தனர்.

கடைசியாக ஆழ்வார்கள் மூவரும் சுவேதத்தீபம், திருப்பாற்கடல், சூரிய மண்டலம், பிரமலோகம் சென்று ஆங்காங்குள்ள எம்பெருமான்களைச் சேவித்து, ஆமோத பிரமோத சம்மோத லோகங்களுக்கும் போய் சங்கர்ஷண பிரத்யும்ந அநிருத்தர்களான வியூகமூர்த்திகளையும் பணிந்து நெடுநாள் யோகத்திருந்து அர்ச்சிராதிமார்க்கமாகப் பரமபத மெய்தினார்கள்.

இவர்கள் செய்தருளிய பிரபந்தங்கள்:—

பொய்கை யாழ்வார்,

“ வையந் தகளியா வார்கடலே நெய்யாக
வெய்ய கதிரோன் விளக்காகச்—செய்ய
சுடராழி யானடிக்கே சூட்டினென்சொன் மாலை
இடராழி நீங்குகவே யென்று ”

என்று தொடங்கி ருக்வேத சாரமான முதற்றிருவந்தாதியையும்,

பூதத்தாழ்வார்,

“ அன்பே தகளியா வார்வமே நெய்யாக
இன்புருகு சிந்தை யிடுதிரியா—நன்குருகி
ஞானச் சுடர்விளக் கேற்றினே ஞாரணர்க்கு
ஞானத் தமிழ்புரிந்த நான் ”

என்று தொடங்கி எஜுர்வேதசாரமான இரண்டாந் திருவந்தாதியையும்,

பேயாழ்வார்,

“ திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன் திகழும்
அருக்க னணிநிறமுங் கண்டேன்—செருக்கிளரும்
பொன்னாழி கண்டேன் புரிசங்கங் கைக்கண்டேன்
என்னாழி வண்ணன்பா லின்று ”

என்று தொடங்கி சாமவேத சாரமான மூன்றாந் திருவந்தாதியையும் திருவாய் மலர்ந்தருளி உலகை வாழ்வித்தார்கள்.

முதலாழ்வார்கள் வைபவம் முற்றுப்பெற்றது.

ஓரன்பன்.

## ஆமணக்கன் செடி.

ஆமணக்கன் செடி-(தமிழ்); ஆயல் பிலான்ட்-(இங்கிலீஷ்); எராமுதபு, ஆமுத-(தெலுங்கு); ஹரளு-(கன்னடம்).

கிடைக்க கூடிய இடம்:—இந்தச் செடி சர்வ சாதாரணமாயும், மிக விசேஷமாயும் இந்தியாவிலுள்ள காடுகளில் அகப்படக்கூடியது. இந்தியா முழுவதிலும் இந்தச் செடியை விவசாயிகள் பயிரிடுகிறார்கள். முக்கியமாய் மதராஸ், வங்காளம், பம்பாய் முதலிய மாகாணங்களில் இது பயிர் செய்யப் பட்டு இதிலுண்டாகும் விதைகள், வியாபாரிகளால் வெளிநாடுகளுக்கு ஏற்று மதி செய்யப்படுகின்றன.

வகையும் குணமும் உபயோகமும் :—நான்கு விதமான ஆமணக் குண்டு :—(1) பேராமணக்கு, (2) சிற்றாமணக்கு, (3) காட்டாமணக்கு, (4) வெள்ளைக் காட்டாமணக்கு.

1. பேராமணக்கு சாதாரணமாய் வேலிகளில் விசேஷமாய் அடர்த்தி யாக முளைப்பதுண்டு. இதன் செடி பெரிதாயும், விதைகள் பெரியனவாயும், சிவப்பாயு மிருக்கும். இதை யந்திரத்திலிட்டுப் பிழிந்தால் 100-க்கு 40 பாகம் எண்ணெய் உண்டாகும். இதை நம்நாட்டவர் விளக்கெரிப்பதற்கும் உபயோ கிக்கிறார்கள்.



2. சிற்றாமணக்கு வருஷத்துக் கொருமுறை வரிசை வரிசையாக வெற்றிலைத் தோட்டங்களிலும், கரும்புத் தோட்டங்களிலும் பயிரிடப் படுகிறது. இதன் கொட்டை சிறியதாயும், சாம்பர்பூத்த நிறமுள்ளதா யும், சிறிய கபில வர்ணமுள்ள புள்ளிகளை உடைத்தானதாயு மிருக்கும். இது, 100-க்கு 37 பாகம் எண்ணெய் கொடுக்கக் கூடியது. இதைப் பெரும்பாலும் மனிதர் மருந்துகளுக்கு உபயோகிக்கிறார்கள். முத்துக் கொட்டையை யந்திரங்களிலிட்டு ஆட்டி எண்ணெ யெடுக்கிறதைப் பார்க்கிலும் அடுப்பில்வைத்துக் காய்ச்சி யெடுப்பதே விசேஷ மென் பது அநேகருடைய அபிப்பிராயம். இயந்திரங்களிலிருந்து எடுக்கின்ற எண்ணெயானது மிகவும் வெண்மையாகவும், தெளிவாகவும், வாசனை அற்றதாகவும் இருக்கும். இந்த எண்ணெய் உடம்புக்குக் குளிர்ச்சியைக் கொடுக்கக் கூடியதும், கடுகடுப்பில்லாததும், சுகமாய்ப் பேதியாகக் கூடிய தும், கைகால் பிடிப்பு, முடக்குவாதம் முதலிய நோய்களைத் தீர்க்கத் தக்கதுமானது. குடல்கள் மருந்து வேக்காட்டால் வெந்திருக்கும் சமயத் தில் இதை உபயோகிப்பது முண்டு. குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கும் சீதபேதி யாகும்பொழுது இதை அபினியுடன் கலந்து உபயோகித்தால் சீக்கிரத்தில் அவ்வியாதி நீங்கிக் குணமுண்டாகும். சிலர் இதனுடன் வேலம் பிசினியும், சலமும், கலந்து கொடுப்பதுண்டு. இதை, கைகால்கள் எரிச்ச லால் கஷ்டப்படுகிறவர்களுக்கும், சிறு குழந்தைகளுக்கும், கர்ப்பஸ்திரீகளுக் கும், பிரஸவித்த ஸ்திரீகளுக்கும், மூத்திர எரிவு வியாதிகளுக்கும் கொடுக்க லாம். சிறிய குழந்தைகள் முதல் பெரியார்கள் வரைக்கும் ஒரு தேக்கரண்டி முதல் மூன்று தேக்கரண்டி வரையிலும் வயதுக்குத் தக்கபடி இதைக் கொடுக்கலாம். இதைப் பாலிலும், காபியிலும், சிசித் தண்ணீரிலும், ஓமத் தண்ணீரிலும், மிதக்கவிட்டுக் கொடுப்பது சிரேஷ்டம். ஆசனத்தில் எரிச் சல் நோய் முதலானவைகள் இருக்கும்போதும், மூல வியாதி, பௌத்திர வியாதி ஆகியவற்றால் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும்போதும் நோயுள்ள ஸ்தானத்தில் இதைத் தடவினால் வியாதி உடனே நீங்கும். அதிக வெட்டை யால் மலம் 2, 3 நாள் வெளிவராமல் கஷ்டப்பட்டுக்கொண் டிருக்கும் பொழுது எனிமா கொடுக்கும் காலத்தில் கொஞ்சம் விளக்கெண்ணெய் தட விக் கட்டையை ஆசனத் துவாரத்தில்வைப்பது தவிர கொஞ்சம் புகையிலைக் காம்பை இந்த எண்ணெயில் தோய்த்து ஆசனத் துவாரத்தில் புகுத்தினால் 10 நிமிஷத்திற்குள் மலம் வெளிப்படும். மேலும் பௌத்திர மூலவியாதியஸ் தர்கள் மிக உஷ்ணத்தினால் மலம் வெளிவராமல் கஷ்டப்பட்டுக் கொண் டிருக்கும்பொழுது கொஞ்சம் விளக்கெண்ணெயில் ஒருவிரலைத் தோய்த்து ஆசனவழியில் சுற்றித் தடவிவிட்டால் வெகு லேசாய் மலம் கழன்று விடும். மேகவெட்டையால் ஸ்திரீகளுக்கு தனக்காம்பு வெடித்துக் குழந்தைகள் பாலுண்ண மாட்டாமல் அழுதுகொண் டிருக்கும்போது கொஞ்சம் விளக் கெண்ணெயை அக்காம்பில் தடவ அது மெதுவாய்க் குழந்தை அழாமல் பால் குடிக்கும்.

விளக்கெண்ணெயில் சமமாகத் தனப்பால் கலந்து கண்ணிற்குப் போடக் கண் எரிச்சல், கண்வலி ஆகியவை நீங்கும். கோசலத்தில் அதாவது 8 அவுன்சு கோமயத்தில் $\frac{3}{4}$ அவுன்சு விளக்கெண்ணெய் கலந்து காலை நோந் களில் கொடுத்துவர 3 நாட்களில் பித்தகாமாலை, பித்தசோகை ஆகிய கல் லீரலின் வியாதிகளும், அவற்றால் உண்டாகும் வீக்கங்களும் குறையும். நீர் தாராளமாய் இறங்கும்.


டாக்டர், மே. மாசிலாமணி முதலியார்.




# கோடை காலப் பானம்.

## 'ஐஸ்' செய்யும் விதம்.

**'ஐஸ்'** என்பது கோடைகாலத்தின் ஐஸ்வரியமாகும். இதை வெகு சுலபமாகத் தயார் செய்யலாம்; படத்திற் காட்டியபடி இரண்டு தாமிரப் பெட்டிபோன்ற பாத்திரங்களைக்கொண்டு எளிதிற் செய்யலாம். 1. என்னும் பெட்டி கொதிக்க வைப்பதற்காக அடுப்பின்மீது அமைக்கப்பட வேண்டியது. 2. என்ற மற்றொரு பெட்டி போன்றது, அதனுள் இறக்கப்பெற்ற 4. என்னும் பாத்திரத்துடன் அமைந்திருப்பதைப் பக்கத்தில் காட்டிய படத்திற் காணலாம். கொதி பாத்திரமும், (Boiler) உறை பாத்திரமும் (Freezer) 3. என்ற ஓர் தாமிரக் குழாயால் இணைக்கப் பெற்றுள்ளன. அவ்விரண்டு பாத்திரங்களும் குழாயும் காற்று நுழையா வண்ணம் (Air tight) பலமாய் மூடப்பட்டிருக்கின்றன. உள்ளிருந்து பிரயோகிக்கப் படும் பலத்தை சதுர அங்குல மொன்றிற்கு 15 பவுன் (lb) வீதம் ஏற்கக் கூடியனவாய் இப்பாத்திரங்கள் குழாய் முதலியன அமைந்திருக்கவேண்டும். 1. என்னும் கொதிபாத்திரத்தில் பூர்ணமாக அஹம்மான வாயு ((Ammonia-cal gas) திராவிதம் ((Solution) நிறைந்திருக்க வேண்டும். இவ்விதமாயமைக்கப்படும் இயந்திரத்தைக்கொண்டு 'ஐஸ்' செய்வதில் 1. என்னும் பாத்திரத்தை அடுப்பின்மீது வைத்துச் சூடாக்க வேண்டும். சூடாக்குங்கால் 2. எனும் ஏனத்தை குளிர்நீர் நிறைந்த பாத்திர மொன்றின்மீது பொருத்த வேண்டும். கொதிபானை சூடானதும் அதனுள்ளேயுள்ள அஹம்மான வாயு திராவிதம் உஷ்ணப்பட்டு 3 என்னும் குழாய் வழியே குளிர் நீரின்மீது பொருத்தப்பட்ட 2-வது உறைபானையை யடைகின்றது. இங்கு அது அகம்மான திரவமாக (Liquid Ammonia) மாறிவிடும். இப்படி எல்லா அகம்மான வாயு திராவிதமும் 3-வது பாத்திரத்திற் செலுத்தப்பெற்று திரவமாக மாறியதும் கொதிபானையை அடுப்பிலிருந்து எடுத்துவிட வேண்டும். 2-ல் உள்ள 4. என்னும் போகணியில் ஓர் சிறு குழாய்போன்ற பாத்திரம் பொருத்தமாகத் தண்ணீருடன் அமைக்கப்பட்டுள்ளது. 1-வது ஏனம் பின்பு சீதள நீருள்ள பாத்திரமொன்றில் வைத்துக் குளிர்ச்சிப் படுத்தப்படுகின்றது. அங்ஙனம் வைத்ததும் அதிலுள்ள பதார்த்தம் குளிர்ச்சியடைய ஆரம்பிக்க, உறை






பாத்திரத்திலுள்ள திரவமும் நீராவியாகமாற வாரம்பிக்கின்றது. அப்படிச் செய்வதால் அதைத்தொட்டு நிற்கும் எல்லாப் பொருள்களிலிருந்தும் அது உஷ்ணத்தைக் கிரகிக்கின்றது. ஆக, 4 ஆல் ஏற்கப்பட்ட குளிர்ச்சி அதனுள்ளே யமைந்திருக்கும் போகணிக்குள்ளேயுள்ள தண்ணீரை உறைவிக்கப் போதுமானதா யிருக்கின்றது. இப்பொழுது 4. என்னும் போகணி நீர் 'ஐஸ்' ஆக மாறிவிடுகின்றது. இவ்விசம், கொதிப்பிப்பதும் உறைவிப்பதுமாக எத்தனைமுறை வேண்டுமானாலும் 'ஐஸ்' செய்யலாம். 1. லிருந்து 2-ல் சேர்க்கப்பட்டுள்ள குழாயானது எப்பொழுதும் அவ்விரு பாத்திரங்களின் மேற் பாகத்திலேயே அமைந்திருக்க வேண்டு மென்பதும், அக்குழாயின் நீளம் இரண்டடிக்கு மேற்படலாகா தென்பதும் இங்குக் கவனிக்கத்தக்கது. ஐஸ், வெடியுப்புத் திராவகம் (Nitric Acid) 2-பாகமும், ஸ்வர்ஜக கந்தகேதம் (Sodium Sulphate) மூன்று பாகமுங் கலந்து, அக்கலவையில் குளிர்ஜலமுள்ள ஓர் போகணியை இறக்கிவைத்துச் சுலபமாக வீடுகளிற் செய்யலாம். அதிகமான ஐஸ், மேற்கூறிய முறைப்படி செய்யப்பெற்ற இரண்டுபாகம் ஐஸும், ஒருபாகம் ஸ்வர்ஜக கலாரிதமும் (Sodium Chloride) கலந்த ஓர் தண்ணீர் நிறைந்த தொட்டியிலிட்டுச் செய்யப்படும்.

மேலுரைத்த விதிப்படி சிறு இயந்திரத்தைக்கொண்டு 'ஐஸ்' செய்வதில் இரண்டு பொதுமுறைகள் உள்ளன. அவை போகணி முறை (Can System) பாத்திரிகை முறை (Cell System) என்பன. இவ்விரண்டு முறைகளிலும் உஷ்ணத்தைச்செலுத்த உவர்நீர் ஏற்பட்டு முகற் பாத்திரத்திலிருந்து கொதி பாத்திரத்திற்கு உஷ்ணம் செலுத்தப் படுகின்றது. இவ்விரு முறைகளுக்குமுள்ள பெரும்பேத மென்னவெனில், போகணி முறையில் தண்ணீரானது பல போகணிகளில் நிரப்பப்பெற்று, மேல் மூடி திறக்கப்பெற்ற ஓர் கல் தொட்டியில் மிதக்க விடப்பட்டிருக்கும். ஆனால் பாத்திரிகை முறையில் உப்புநீரானது பல குழாய்களில் நிறப்பப்பெற்றிருக்கும். அக்குழாய்களினிடையே 'ஐஸ்' ஆக்கப்படவேண்டிய தண்ணீர் நிரப்பப்பெற்றிருக்கும். இவ்விரண்டினும், சுத்தமான ஐஸை அடைவதன் பொருட்டு சடவைக்கும் போது தண்ணீர் குலுக்கப்பட வேண்டும். சாதாரணமாக யோசிக்குங்கால் தண்ணீரானது தன்னுள்ளே ஒரு அளவு காற்றைக்கொண் டிருப்பதாக அறியலாம். உஷ்ணமானது தணிந்து தண்ணீரானது உறைந்தபின், அத்தண்ணீரிலுள்ள காற்றானது வெளியே சென்று விடுகின்றது. ஆயின், தண்ணீர் வேகமாக உறைந்து ஐஸாக மாறிக்கொண்டு வருகையில், குலுக்கப்படாமலிருப்பின், தண்ணீரிலிருந்துவரும் குமிழிகளுங்கூட உறைந்து ஐஸை மங்கலானதாகச் செய்துவிடும். இதைப்போக்கத் தண்ணீரை முதலில் வடிகட்டி அதனோடு சேரக்கூடிய பதார்த்தங்களை நீக்குவதுடன்கூட, உறையும்போது குலுக்கிக் கொண்டிருத்தலும் நலம். அதனால் நல்ல சுத்தமான ஐஸையடையலாம்.


## போகணி முறை (Can System)

இதுவே பெரும்பான்மையோரால் கையாளப்பட்டு வருவதும். அதிகப் பொருட் செலவில்லாமல், சுலபமுமானதா யிருப்பதால் இதனைப் பலரும் அனுசரிக்கின்றனர். இதில் போகணிகள் 'ஐஸ்' செய்ய வேண்டிய நீருடன், உவர்நீர் பொருந்திய தொட்டியில் ஒரு பகுதி உள்ளே பொருந்துமாறு மிதக்கவிடப்படுகின்றன. தண்ணீரெல்லாம் அடியிலும் காலாபக்கங்களிலுமாக உறையவாரம்பித்து, முதல் நிலையிலேயே நீக்கப்படாத பதார்த்தங்கள் நடுவிலே யுறைந்து தனியே நின்று விடுகின்றன. இங்ஙனம் நடுவே யுறைந்த

அழுக்குகள் நீக்கப்பட வேண்டியவை. இவற்றை நீக்கவே இப்போகணி முறையில் பல சிறு யந்திரங்களும் பொருத்தப் பெற்றிருக்கின்றன. சுத்தப் படுத்தல், திரும்பச் சுடவைத்தல், வடிக்கட்டுதல் முதலிய உபகரணங்கள் செய்யப்படவேண்டும்.

## பாத்திரிகை முறை (Cell System)

இம்முறையில் ஓர் தொட்டி சமபாகங்களாகத் தடுக்கப்பட்டு, அவற்றி னிடையே 'ஐஸ்' செய்யப்படவேண்டிய குழாய்கள் நுழைத்துப் பொருத்தப் பட்டிருக்கும். (படத்தைப் பார்க்க)



அக்குழாய்களில் போகணி முறையிற் செய்யப்படும் ஐஸைவிட அதிகம் செய்யப்படலாம். இக்குழாய்கட்கும் சிறு அறைகட்குமுள்ள இடைவெளியில், உவர்நீரானது நிரப்பப்பெற்று, அந்நீர் சுழலுங்கி வருவதற்காகச் சிற்சிறு தண்டுகள் மேலுங் கீழுமாகப் போவதும் வருவதுமாக விருக்கும். 'ஐஸ்' சரிவரப் பாத்திரங்களில் வந்ததும், அடியிலுள்ள அணை திறந்துவிடப்பட்டு, குளிர் உவர்நீர் வெளியே போக, மித உஷ்ணமான உவர்நீர் ஊற்றப்படும். இதனால் ஐஸ் சொருசாக அப்பாத்திரங்களில் இளகிவிடும். இதற்கான சிறு இயந்திரங்களை வாங்கி, சொற்பச் செலவில் மேற்குறித்த முறைப்படி ஐஸ் விருத்திசெய்து பலனடையலாம். இக்கைத்தொழிலில் நல்ல லாபமுண்டு.

(இண்டஸ்டிரி)

ஸ்ரீதரன், திரிசிரபுரம்.

ஒசிப்பொடிக்காரர்:—ஆயுள்வரை காசுகொடுத்து மூக்குத்தூள் வாங்காமல் ஒசிப்பொடி (மூக்குத்தூள்) போட்டுக் காலந்தள்ளும் சில ஆசாமிகளுண்டு. இவர்கள் தெருத்திண்ணையில் உட்கார்ந்துகொண்டு, தெருவில் போகிறவர்களையெல்லாம் கூப்பிட்டு (அவர்கள் தெரிந்தவர்களாயிருந்தாலும், தெரியாதவர்களா யிருந்தாலும்) "தாசனிங்கோ" என்று அவர்களுக்குக் கும்பிடு போடுவார்கள். அவர்கள் திரும்பிப் பார்த்தவுடன், "எங்கே அவசரமோ" என்று கேட்பார்கள். அவர்கள் ஏதாவது பதில் சொன்னவுடன், "கொஞ்சம் பொடியிருந்தால் கொடுங்கள்" என்று கேட்பார்கள். அவர்கள் தங்களிடம் பொடியிருந்து ஒரு சிட்டிகை அள்ளிக் கொடுத்தால், 'இன்னும் கொஞ்சம் கொடுங்கள்' என்று பின்னும் இரண்டு சிட்டிகை வாங்கிக்கொள்வார்கள்; பொடிடப்பியைக் கையிற் கொடுத்துவிட்டாலோ, அந்தப்புண்ணியாத்மாக்கள் ஒரே பிடியில் டப்பியைக் காலிசெய்து விடுவார்கள். இந்தப் பக்காப் பேர்வழிகளின் குட்டுத் தெரிந்தவர்கள் இவர்கள் தாசனம் போட்டுக் கூப்பிடும்போது திரும்பிப் பாராமலே போய்விடுவார்கள்.




## ஆத்திசூடி உதாரணக் கதைகள்.

(13-ம் தொகுதி-549-ம் பக்கத் தொடர்ச்சி.)

### "சுளிக்கச் சொல்லேல்"

"சுளிக்க - (கேட்பவர்) கோபிக்கும்படி, சொல்லேல் (நீ எதையும் பேசாதே" என்பது இதன் பொருள்.

மனிதராய்ப் பிறந்த ஒவ்வொருவரும், எவரிடத்தும், எப்பொழுதும் மனமகிழ்ச்சியை உண்டாக்கத் தக்க இனிமையான வார்த்தைகளையே பேசவேண்டும். அங்ஙனம் பேசுவார்க்குப் பலருடைய உறவு முண்டாகும்; பற்பல நன்மைகளேற்படும்; எவரும் அவர்களிடம் பகைகொள்ள மாட்டார்கள். இவ்வாறின்றி ஒவ்வொருவரிடத்திலும் பேசும்போதெல்லாம் அவர்க்குக் கோபமுண்டாகத் தக்க வார்த்தைகளையே பேசுவோர்க்கு எப்போதும் பலருடைய விரோதமுண்டாகிக் கொண்டே யிருக்கும்; எவருடைய உதவியு மேற்படாது; அதனால் அவர்களுடைய வாழ்க்கையில் ஆனந்தமென்பதே ஏற்படாது; துக்கமே மிகுந்திருக்கும். இவ்வாறு, பிறர் கோபிக்குமாறு பேசுவோர்க்குத் துன்பமுண்டாகு மென்பதை அடியில் வரும் கதை விளக்கும்:

ஒரு சிற்றூரில், தங்கவேல் என்னும் ஒரு வாலிபனிருந்தான். அவன், எவரோடு பேசினாலும் வீண்தர்க்கமே பேசுவான்; பிறமனிதர் கூறும் எந்த வார்த்தையையும் தடுத்துப்பேசுவதே அவனுடைய வழக்கம். ஒருவர், 'கடல் நீர் உப்பாயிருக்கும்' என்றால், இவன், 'இல்லை; அது துவர்ப்பாயிருக்கும்' என்று ஒரே பிடிவாதமாகப் பேசுவான். இப்படியே இவன் எல்லாருடனும் பேசிவந்ததால் பலரும் இவன்மீது விரோதமே கொண்டிருந்தார்கள்; 'வம்புப் பேச்சுக்காரன்' என்ற பட்டம் இவனுக்குண்டாகி விட்டது. இவனை எவரும் தங்கள் கூட்டத்தில் சேர்ப்பதில்லை. இவனோடு பழக்கமாயிருந்த நண்பனொருவன், இவனுடைய கெட்ட குணத்தைக்கண்டு வெறுத்து ஒரு நாள் இவனிடத்தில், "நீ எவரிடத்தும் கோபமுண்டாகத் தக்க வார்த்தைகளையே பேசும் வழக்கத்தை மேற்கொண்டிருக்கிறாய்; இது மிகவும் கெட்ட வழக்கம்; ஒரு சமயத்தில் பெருந்துன்பத்தை யுண்டாக்கிவிடும்; ஆகலின் இவ்வழக்கத்தை நீ விட்டுவிடு" என்று கூறினான். அவன் வார்த்தைகளை இவன் சட்டை பண்ணவேயில்லை.

இப்பேர்ப்பட்ட வாய்வம்புக்காரனாகிய தங்கவேல் ஒரு நாள் நெடுந்தூரத்திலுள்ள ஓர் ஊருக்குப் பிரயாணமாகி நடந்துபோனான். நடுவழியிற் செல்லும்போது வெயிலின் கொடுமை அதிகரித்தபடியால் அவனுக்குக் களைப்பும், தாகமும், பசியும் அதிகரித்தன; அதனால் நடக்க முடியவில்லை. அத்தருணத்தில் பக்கத்தில் ஒரு சிறு கிராமம் அவனுக் கெதிர்ப்பட்டது. அதைக் கண்டதும் அவன், 'அந்த ஊரில்போய் எவரிடமாவது கொஞ்சம் தண்ணீர் வாங்கிக்குடித்து இளைப்பாறிவிட்டுப் போகலாம்' என்று நினைத்து அவ்வூருக்குச் சென்றான். அவ்வூர்ப் பொதுச்சாவடியில் சில மனிதர்கள்

கூடியிருந்தார்கள். அவர்களிற் பெரும்பான்மையோர் அவ்வூர்ப் பெரிய குடித்தனக்காரர்கள். தங்கவேல் அவர்களிடம் போய், “எனக்கு தாகத்திற்குக் கொஞ்சம் தண்ணீர் வேண்டும்” என்று கேட்டான். அவர்கள் அவன் வெயிலால் இளைப்புற்று வந்திருப்பதை யுணர்ந்து அவனை நோக்கி, “ஐயா! உட்காரும்; நாங்கள் தண்ணீர் வரவழைத்துத் தருகிறோம்” என்று சொன்னார்கள். அவன் ஒரு பக்கத்தில் உட்கார்ந்தான். உடனே அந்த மனிதர்கள் அவனுக்கு நல்ல மோர்கொண்டு வரும்படி ஒரு ஆளை அனுப்பினார்கள். அவன் மோர் கொண்டுவரச் சென்றபின்பு தங்கவேலின் வாய் சும்மா இருக்கவில்லை; அவன், தன்னுடைய வழக்கப்படியே அங்கிருந்தவர்களோடு வம்புப்பேச்சுப் பேச ஆரம்பித்துவிட்டான்.

அவ்வூரில் பண்டைக்காலத்தில் சில திருடர்கள் இருந்தார்கள்; அதனால், அது திருடர் குடியிருக்கும் ஊர் என்று பலராலும் கருதப்பட்டு வந்தது. பிந்தினகாலத்தில் அத்திருடர்கள் ஒழிந்துபோனார்கள்; நல்லவர்களே விருத்தியாகி யிருந்தார்கள்; அவர்களால், அவ்வூருக்கேற்பட்டிருந்த கெட்ட பெயர் நீங்கிவிட்டது. அப்படியிருந்தும், தங்கவேல், அந்த ஊருக்கு முந்தி யேற்பட்டிருந்த கெட்டபெயரைக் கேள்விப்பட்டிருந்தபடியால் அதையே உறுதிப்படுத்திக்கொண்டு, பின்னர் அவ்வூர் நல்ல பெயரெடுத்திருப்பதைச் சிந்திக்காமல் அங்குக் கூடியிருந்தவர்களை நோக்கி, “இந்த ஊர் திருடர் குடியிருக்குமூர் என்று நான் கேள்விப்பட்டிருக்கிறேன்; இஃதுண்மைதானே?” என்று கேட்டான். அதற்கவர்கள், “ஐயா! நெடுங்காலத்துக்கு முன் சிலரால் இவ்வூருக்கு அந்தக் கெட்ட பெயர் ஏற்பட்டிருந்தது; இப்போது அது மறைந்துவிட்டது; இது நல்ல யோக்கியர்கள் குடியிருக்குமூர்” என்று சொன்னார்கள். தங்கவேல், “இல்லை, இல்லை; இஃதெப்பொழுதுமே திருடர் குடியிருக்குமூர்தான்; எனக்கிது நன்றாய்த் தெரியும்” என்றான். அவர்கள், “ஐயா! அப்படிச் சொல்லவேண்டாம்; எதையும் ஆராய்ந்து பேசும்” என்றார்கள். தங்கவேல், “நீங்கள் உங்கள் ஊரைப்பற்றிப் பிறர் இழிவு பேசச் சம்மதிக்க மாட்டீர்கள்; நான் உண்மை பேசுவதில் யாருக்கும் அஞ்ச மாட்டேன்; இது திருட்டுப் பாதகர்கள் இருக்கும் ஊர்தான்” என்றான்.

இந்த வார்த்தைகளைக் கேட்டதும் அங்குக் கூடியிருந்தவர்களுக்கு மிகுந்த கோப முண்டாய்விட்டது. உடனே அவர்கள், “இவன் மிக்க வாய் வம்புக்காரனும், அகங்காரியாயு மிருக்கிறான்; இந்தப் போக்கிரிக்கு அறிவு கற்பிக்கவேண்டும்” என்று உடனே அவனைப்பிடித்து, அவன் கால்களையும், கைகளையும் கட்டி அந்தச் சாவடிக்கு முன்னே வெயிலிற்போட்டு, “வாய்மதம் பேசும் உனக்கு இதுதான் தண்டனை” என்று உருட்டிவிட்டார்கள். அவனுக்கு மோர்கொடுக்க ஏற்பாடு செய்ததையும் நிறுத்தி விட்டார்கள். சூரிய வெப்பம் மேலும் மேலும் வெதுப்பியதால் தங்கவேலுக்குச் சகிக்கமுடியாத வேதனையுண்டாயிற்று. அவன், துன்பத்தைப் பொறுக்க முடியாமல், “ஐயோ! நான் தெரியாமல் பேசி விட்டேன்; என் குற்றத்தை மன்னித்து என்னை அவிழ்த்து விடுங்கள்” என்று அவர்களைக் கெஞ்சினான். அதன்மேல் அவர்கள் அவன் கட்டுக்களை அவிழ்த்து விட்டு, “இனி எவ்விடத்திலும் இவ்வாறு மூடத்தனமாகப் பேசுவதை விட்டுவிடு” என்று சொல்லி அவனைத் துரத்திவிட்டார்கள். அவன் அது முதல் அந்தக் கெட்ட பழக்கத்தை விட்டுவிட்டான்.

செம்பூர், வி. ஆறுமுகஞ் சேர்வை.

# அறிஞரின் அமுதமொழிகள்.

(13-ம் தொகுதி 570-ம் பக்கத் தொடர்ச்சி.)

40. தெய்வ மொருவ னென்றேத்தி யொருமித்திருந்தால் அருவினைகள் ஐந்தும் அறும். (கம்பன்)

The five great sins will be forgiven him who worships the one God with singleness of heart. *Kamban.*

41. நீருக்கி மோர்பெருக்கி நெய்யுருக்கி யுண்பவர்தம் பேருரைக்கப் போமே பிணி. (தேரையர்)

He who drinks his water after boiling, his curds diluted, and his butter made ghee, will find sickness flee at the sound of his name. *Theraiyar.*

42. அல்லாதவழியாற் பொருளீட்டல் காமந்துய்த்தல் இவை யாகா. (கூர்ம புராணம்)

Wealth must not be sought, nor the pleasure of love, &c., obtained by evil means. *Kurma Puranam.*

43. அல்லற்பட் டாற்றா தழுதகண் ணீரன்றே செல்வத்தைத் தேய்க்கும் படை.

Will not the unendurable grief, (literally tears) of a people become a file, to wear away the wealth—i.e. of their oppressor?

44. ஆண்டாண்டுதோறு மழுது புரண்டாலும் மாண்டார் வருவரோ மாநிலத்தில்? (ஔவை)

What though we roll in sorrow from year to year, can the deceased return again to this nether world? *Avvai.*

45. தேடாதழிக்கிற் பாடாய் முடியும். (ஔவை)

If you spend what you have not earned, you will suffer. *Avvai.*

46. திரவியத்தி லழுந்த மானவன் செத்தாலுங் கொடான்.

A miser would rather lose his life than give anything from his fortune.

47. அளவளா வில்லாதான் வாழ்க்கை குளவளாக் கோடின்றி நீர்நிறைந்தற்று.

The prosperity of the man who does not cultivate sociality with his friends, is like a tank full of water without banks.

48. இகழ்ச்சியடைவதைக் காட்டிலும் இறப்பது நல்லது.

It is better to suffer death than disgrace.


49. அள்ளாது குறையாது சொல்லாது பிறவாது.

If nothing be taken, nothing will be wanting; if nothing be spoken, nothing will be rumoured; i.e. there is no rumour however vague, but has some truth in it.

50. அறவாழி யந்தணன் றாள்சேர்ந்தார்க் கல்லாற் பிறவாழி நீந்தலரிது. (திருவள்ளுவர்)

It is very difficult to swim and escape from the sea of vice, except for those who worship at the feet of Him who is the sea of virtue. *Tiruvalluvar.*

A. P. இராமன், B. A.



# சிறு வேடிக்கைக் கதைகள்.

## 1. தட்டுப் பறிக்கும் அர்ச்சகர்.

தெய்வபக்தியிற் சிறந்த ஒரு பெண்மணி, வெள்ளிக்கிழமையன்று, வெள்ளித் தட்டில் தேங்காய், பழம், புஷ்பம், தாம்பூலம், கர்பூரம் முதலிய பூஜா திரவியங்களை யெல்லாம் வைத்து எடுத்துக் கொண்டு சுவாமி தரிசனைக்காகக் கோவிலுக்குப் போனாள். அந்தக் கோவிலில் மிக்க பேராசைக்காரராகிய அர்ச்சகரொருவரிருந்தார். கோவிலுக்கு வரும் பக்தர்களை ஏமாற்றுவதில் அவர் மகா சாமர்த்தியசாலி. அவர், மேற்கூறிய பெண்மணியைக் கண்டவுடன், "அம்மா! வரவேண்டும், வரவேண்டும்; உள்ளே வாருங்கள்; இன்று வெள்ளிக்கிழமை; விசேஷதினம்; இன்று சுவாமிக்கு அர்ச்சனை செய்தால் விசேஷ பலனுண்டாகும்; அஷ்டோத்திர நாம அர்ச்சனை செய்யவா, சகஸ்திர நாம அர்ச்சனை செய்யவா?" என்று உபசாரத்துடன் மூலஸ்தானத்திற்கு அழைத்துச் சென்றார். உடனே அந்தப் பெண்மணி வெள்ளித்தட்டு பூஜாவஸ்துக்களை அவரிடம் கொடுத்து, "அஷ்டோத்திரநாம அர்ச்சனை செய்யுங்கள்" என்றாள். அர்ச்சகர் அவற்றைக் கொண்டுபோய் மூலஸ்தான விக்கிரகத்தின் முன்னிலையில் வைத்து வெகு தடபுடலாக நூற்றெட்டு மந்திரங்கள் சொல்வதற்குப் பதிலாகப் பத்திருபது மந்திரங்களை அவளுக்குக் கேட்கும்படி உரக்கச்சொல்லி அர்ச்சனையை முடித்துத் தேங்காயை உடைத்துக் கற்பூரம் கொளுத்தித் தீபாராதனை காட்டிவிட்டு, வெள்ளித்தட்டு, தேங்காய் பழம் முதலிய எல்லாவற்றையும் எடுத்துச் சுவாமிக்குப் பின்னால் வைத்துவிட்டுக் கொஞ்சம் விபூதியை எடுத்துக்கொண்டுவந்து அந்





தப்பெண்ணின் தலையில் போட்டு "அம்மா! போய் வாருங்கள்; உங்களுக்கு பகவான் கிருபை செய்வார்" என்றார்.

அந்தப் பெண் திடுக்கிட்டு, "ஐயோ! சாமி! தேங்காய் பழமெங்கே? வெள்ளித்தட்டு எங்கே?" என்றாள். அர்ச்சகர், "வெள்ளிக்கிழமையில் யாரேனும் வெள்ளித்தட்டில் பூஜாதிரவியம் கொண்டுவந்தால் தட்டோடு எல்லாம் சுவாமிக்கு சேர்வது வழக்கம்; ஆதலால், உங்கள் தட்டும், தேங்காய் பழங்களும் சுவாமிக்குச் சேர்ந்துவிட்டன; உங்களுக்கு மிகுந்த க்ஷேமமுண்டாகும்; போய்வாருங்கள்" என்றார். பெண் வயிறெரிந்து "இஃதென்ன சாமி! நூதன வழக்கமா யிருக்கிறதே! இதை நான் எங்கும் கேட்டதில்லையே" என்றாள். அர்ச்சகர், "நீங்கள் எவ்வளவோ செலவு செய்கிறீர்கள்; சுவாமி விஷயத்தில் அழுத்தம் செய்யவேண்டாம்; நீங்கள் இதைப்பற்றி ஏதாவது நினைத்தால் கோவிலுக்கு வந்தும் பலனில்லை; இந்த வெள்ளித்தட்டிற்குப் பதிலாக பகவான் உங்களுக்கு எத்தனையோ வெள்ளித் தட்டுக்கள் கொடுப்பார்; நீங்கள் வேறொன்றும் வித்தியாசம் நினைக்காமல் வீட்டிற்குச் செல்லுங்கள்" என்று சொன்னார். அந்தப் பெண் முணு முணுத்துக்கொண்டு வீட்டிற்குப் போய்விட்டாள்; அர்ச்சகர் வெள்ளித்தட்டை வீட்டிற்குக் கொண்டு போய்ச் சேர்த்தார்.

## 2. குதிரைப் பந்தயத்தால் குடும்பத்தைக் கெடுத்தவன் கதை.

ஒரு நகரத்தில் குதிரைப் பந்தயப் பைத்தியம் பிடித்த பேராசைப் பித்தன் ஒருவனிருந்தான். அவன், குதிரைப்பந்தயத்துக்கு ஏற்பட்ட ஒரு குறிப்புப் புத்தகத்தை வாங்கிவைத்துக்கொண்டு பென்சல் காகிதத்தைக் கையிலேந்தி ஓயாமல் ஆகாயத்தைப் பார்த்தபடியே கணக்குப் போட்டு இன்ன இன்ன குதிரை நிச்சயமாகக் கெலிக்கும் என்று நிச்சயப்படுத்திக் கொண்டு ஒவ்வொரு குதிரைப்பந்தயத்துக்கும் தவறாமல் ரூபாய் ஆயிரம் இரண்டாயிரம் எடுத்துக் கொண்டுபோய்ப் பந்தயம் கட்டுவான்; எல்லாம் தொலைந்துவிடும். பேசாமல் திரும்பி வீட்டிற்கு வருவான். அவன் பணமிழந்துவந்த சங்கதி தெரிந்தவர்கள், "என்ன நீங்கள் குதிரைப் பந்தயக் கணக்கில் மகா நிபுணராயிருந்தும் தோற்றுப் போனீர்களே!" என்று கேட்டால், அந்தப் பைத்தி[illegible]ான் போடும் கணக்கு ஒரு நாளும் பிசகாது; முதல் [illegible] வரவேண்டிய குதிரைக்கு வரும்



போதே மார்நோயுண்டாகிவிட்டது; இரண்டாவது வரவேண்டிய குதிரையை ஜாக்கி மோசப்படுத்தி விட்டான்'' என்று அவர்களுக்குச் சமாதானங் கூறுவான். இப்படியே அவிவேகி தன்னுடைய சொத்துக்க ளெல்லாவற்றையும் தொலைத்து விட்டான். முடிவில் தன்னுடைய மனைவியின் நகைகளைக் கேட்டான். "உனக்கு எனிந்தப் பைத்தியம்? நகைகளிருந்தாலும் விற்றுவது ஜீவிக்கலாம்; முடிவில் இவற்றையும் தொலைக்கப் பார்க்கிறாயே; நான் கொடுக்கமாட்டேன்'' என்றாள். அவன் கேட்காமல், "அடி பைத்தியக்காரி! இன்றைக்கு நான் வெகு தெளிவாகக் கணக்குப் போட்டிருக்கிறேன்; இன்றைக்கு நான் பந்தயங்கட்டும் குதிரைகளெல்லாம் ஜெயிக்கும்; இதுவரை தொலைந்த பணமெல்லாம் இன்றைக்கு வந்துவிடும்'' என்று ஏதேதோ ஜால வார்த்தைகள் பேசி அவள் அணிந்திருந்த நகைகளைத் தந்திரமாக வாங்கிக்கொண்டு போய்விட்டான். அவைகளும் தொலைந்து போயின. அதன்மேல் அவன் வீட்டிற்குப்போனால் மனைவிக்குச் சமாதானஞ் சொல்ல முடியாதென்று பரதேசியாய் எங்கேயோ ஓடிப்போய் விட்டான். அவன் மனைவி கூலிவேலை செய்து காலத்தைக் கடத்தினாள். செம்பியன்.

*** *** ***

இருவர் பறங்கிப்பழம் திருட ஒரு கொல்லையை அடைந்தார்கள். அப்போது ஒருவன் அக்காயின் காம்பைத் தன் பேனாக்கத்தியா லறுத்துவிட்டு வந்துவிட்டான்; மற்றவன் அதனைத் தூக்கிக்கொண்டு வந்துவிட்டான். மறுநாள் தோட்டக்காரன் அவர்கள்மீது வழக்குத் தொடுத்தான். நியாயாதிபதி அவர்கள்மீது சந்தேகித்து சத்தியங்கேட்க முதல் ஆள், "நான் அந்தக் காயைச் சத்தியமாகத் தொடவேயில்லை'' என்று சத்தியம் செய்தான். மற்றவன் "நான் சத்தியமாக அக்காயை அறுக்கவேயில்லை'' என்று சத்தியம் செய்தான். நியாயாதிபதியும் சரியென அவர்களை விட்டுவிட்டாராம். முதல்பேர்வழி காயைத் தொடாததும், இரண்டாவது பேர்வழி காயை அறுக்காததும் உண்மைதானே?

R. C. S. அமலோற்பவநாஸ், உபாத்தியாயர், தேவமங்கலம்.

பத்திரிகைகளை வாசிக்க சுலபமுறை:—தமது நண்பர்களை நோக்கி ஒருவர், "பத்திரிகைகளை வாசிக்க சுலபமுறை எது?'' என்றார். அந்த நண்பரில் ஒருவர், "வாசகசாலைகளில், சந்தாதாராகச் சேர்ந்தால், நலம்'' என்றார். உடனே மற்றொருவர், "போஸ்ட் மாஸ்டர், அல்லது லேட்டர் பியூன்'' இவர்கள் சிநேகித மிருப்பின் மிக்க சுலபம்; எப்படி எனின்? தபாலில் வரும் பத்திரிகைகளை 2 தினம் வாசித்துத் தருவதாக எடுத்துவந்து வாசித்துக் கொடுக்கலாம்; வேண்டுமானால் நாமே எடுத்துக்கொள்ளலாம்'' என்றாராம்.

எயிடெட் பாடசாலை பாடங்கள்:—ஓர் கிராண்டு பெறும், எயிடெட் (எலிமெண்டெரி) பாடசாலைக்கு பரீக்ஷாதிகாரிவந்து, பிள்ளைகளை நோக்கி "உங்கள் உபாத்தியாயர் உங்களுக்கு என்னென்ன கற்பித்திருக்கிறார்?'' என்றாராம். அதற்கு ஓர்பிள்ளை எழுந்து "மரங்களிலேறி விறகு இலை கொண்டுவரவும், இலை தைக்கவும், பால், தயிர் வாங்கி வரவும், இன்னும் காப்பிக் கொட்டை வறுத்துத் தூள் செய்யவும் கற்பித்திருக்கிறார்'' என்றானாம். பரீக்ஷாதிகாரி "பாடங்கள் கற்பிக்கவில்லையோ?'' என்றாராம்; அதற்குப் பிள்ளைகள், "பாடங்கள் உண்டு; அவற்றை உபாத்தியாயர் சொல்வதில்லை; மேல்வகுப்புப் பிள்ளைகள் சொல்லித் தருவர்,'' என்றார்களாம்.

—M. K. கோவிந்தன், தொண்டமாநத்தம். (S. A.)




## கிருஷ்ணலிங் அல்லது துப்பறியும்சிடன்.

(13-ம் தொகுதி 573-ம் பக்கத் தொடர்ச்சி)

அம்மாது சாவியை யெடுத்துக் கொண்டு திரும்பிவந்த போது இப் பொய் மாது மிக்க வியாதி யடைந்தவள்போல் பெருமூச்செறிந்து கொண்டு வாசற்படிமேல் சாய்ந்தபடி நின்றிருக்கக் கண்டாள்.

பொய் மாது அவளைக்கண்டதே "அம்மா! அம்மா! அய்யோ'' வென்று மார்பைக் கரத்தால் பற்றிக்கொண்டு நிற்க முடியாது வியாதியுற்றவள்போல் கீழே சாய்ந்து விழப்போனாள்.

அம்மாது கோபத்தோடு அந்த ஸ்திரீயைக் கீழே விழாதபடி பிடித்துக் கொண்டு "என்ன உனக்கு?'' என்றாள். பொய் மாது "ஹா அப் படிகள்..... என் இருதயம்......அப்பா என் உயிர்......ஒரு வைத்தியரை......அம்மா'' என்று மூச்சு தடுமாறிக்கொண்டே மூர்ச்சை யடைபவள்போல் மெதுவாய்க் கீழே சாய்ந்துவிட்டாள். இதைக்கண்ட அம்மாது கோபத்தோடு "அட சனியனே! இவள் வீதியில் விழுந்தே மடியலாகாதா! இனி வைத்தியரை யழைத்து வரவேண்டும்போ லிருக்கிறது'' என்று கூறிக்கொண்டே துரிதமாய் ஒரு சால்வையை யெடுத்துப் போர்த்துக்கொண்டு துரிதமாய் வீட்டிலிருந்து புறப்பட்டாள்.

அவள் சென்றதே ஆனந்தலிங் ஜாக்கிரதையோடு கண்களைத் திறந்து பார்த்தான். அந்த அறை சாதாரணமாய் வாடகைக்கு விடப்படும் இடத்தைப் போலல்லாமல் மிக்க அலங்காரம் செய்யப்பட்டிருந்தது.

அவன் ஜாக்கிரதையோடு ஏதாவது உளவு அகப்படுமென்று பார்த்தான்; ஒன்றும் அகப்படவில்லை.

அவன் ஜாக்கிரதையோடு பக்கத்துவீட்டில் மனோன்மணியைக் கடைசியாய்க் கண்ட அறை யிந்தவீட்டின் எப்பக்க மிருக்குமோ அந்தச்சுவரை சரியாய்ப் பார்த்தான். அச்சுவரின் ஓரத்தில் மிக்க பலமான ஒரு உடுப்பு வைக்கும் உயரமான பீரோ வைக்கப்பட்டிருந்தது.

அதைக்கண்டதே ஆனந்தலிங், "ஆஹா இதைச் சோதிக்கவேண்டும்'', என்று தனக்குத்தானே கூறிக்கொண்டான். உடனே பூனைபோல் மிக்க எச்சரிக்கையோடு அற்ப சத்தத்தையும் கவனித்துக்கொண்டு எழுந்துபோய் அந்த அலமாரியைத் திறந்து பார்த்தான். அது உடுப்புகள் வைக்கும் பீரோவாயினும் அதில் உடைகள் ஒன்றுமேயில்லை.

அதன்மேல் அவன் சுவரின் ஓரமாயிருக்கும் பீரோவின் பக்கத்தை மெதுவாய்த் தடவிப்பார்த்தான். அதில் ஒரு ஆணி மற்றவற்றைவிடச் சற்று உயரமாயிருந்தது. அதைப்பிடித்து அழுத்தியதே யது கதவுபோல் திறந்து கொண்டதும் மறுபக்கம் ஆனந்தலிங் முன்னால் மனோன்மணியைத் துறத்திச்சென்ற அறையைக் கண்டான்.

அவன் மெதுவாய் அந்த அறையில் காலை வைத்தான். மறுநிமிடம் எங்கோ வீட்டிற்குள் மணியடிக்கும் சத்தம் கேட்டதும் இவன் வெளிவந்த வழியிலிருந்த கதவு தானே மூடிக்கொண்டதும், இந்த அறையிலிருந்த

வேறொருகதவு திறக்கப்பட்டது. ஆனந்தவிங் வியப்போடு நாற்புறமும் பார்த்தான். தான் முன்னால் கண்ட அம்முரட்டு மனிதன் இவன் எதிரில் வந்து நின்றான். அதேசமயம் வீட்டின் முன்பக்கம் செல்லும் வழியிலிருக்கும் ஒரு கதவு திறக்கப்பட்டதும் ஒரு அழகிய கன்னிகை அங்கு வந்தாள்.

இவ்வாறு சந்தித்த மூவரில் யார் அதிக வியப்படைந்தார்கள் என்று கூற நம்மால் கூறமுடியாது. இதில் வித்தியாசமென்னவெனில் அங்குவந்த இருவரும் தங்கள் வியப்பை முகக்குறியால் வெளிப்படையாய்க் காட்டிக்கொண்டார்கள். ஆனந்தவிங் சமயோசனையுடையவனாதலால் தன் வியப்பையெல்லாம் மிக்க சாமார்த்தியத்தோடு அடக்கிக்கொண்டு, அவர்களைக் கண்டதும் மூக்கின்மேல் விரல்வைத்து "ஒன்றும் பேசாமலிருங்கள்" என்று சமிஞ்ஞை செய்தான்

அவர்களிருவரும் அதற்கு இணங்கிவிட்டார்களெனினும் "இந்த மாது யார்?" என்று ஒருவரையொருவர் வியப்போடு கேட்பவர்கள்போல் குறிப்பாய்ப் பார்த்துக்கொண்டார்கள்.

இச்சமயத்தில் தான் ஆனந்தவிங் அடைந்த தேர்ச்சியின் பயன் வெளியாயிற்று. இச்சம்பவத்தைத் தனக்கு அனுகூலமாய்ச் செய்து கொள்ள அவன் உடனே தன் மனதில் யூகித்துக்கொண்டான். அவன் தன்னை வீட்டிற்குள் விட்டுவிட்டு வைத்தியரை யழைக்கப் போயிருக்கும் அம்மாதின் குரலைப் போலவே,

"துப்பறியும் கிருஷ்ணவிங் கிழவன் என்னைப் பின்பற்றி வந்தான். அவன் அதோ உள்ளே யிருக்கிறான்" என்றான்.

முரடன்கூட விருக்கும் கன்னிகை "அம்மா நீ யார்? இந்த மாறுவேடம் உனக்கு எப்படி கிடைத்தது. யார் உனக்கு இதை யணிவித்தவர்கள்" என்று கலக்கமின்றி வியப்போடு கேட்டாள்.

முரட்டு மனிதன்:—"ஓஹோ நீயா?" என்று மட்டும் அரைச் சந்தேகத்தோடு கூறினான்.

ஆனந்:—"விவரம் பிறகு கூறுகிறேன். அங்கே அவர்கள் யாராவது இருக்கிறார்களோ" என்று தான் வெளிவந்த அறையைச் சுட்டிக்காட்டி முரடனைக் கேட்டான்.

முரடன் இன்னும் கொஞ்சம் சந்தேகத்தோடேயே, "இல்லை. முனியன் இப்போதுதான் வெளியே சென்றான்" எனமொழிந்தான்.

இதில் அதிகமாய் ஒன்றும் தெரியாவிட்டாலும் அந்த அறையில் ஒரு கள்ளக்கூட்டம் இருக்கிறதென்றும், அதில் முனியன் என்பவன் ஒருவனென்றும் ஆனந்தவிங் தெரிந்து கொண்டான். அவன் உடனே நேராய் அங்கிருந்த கன்னிகையை நோக்கி, ஆவலோடு "அக்கன்னிகை?" என்றான்.

அதைக்கேட்டதே அப்பெண்ணும் அம்மனிதனும் மிக்க வியப்படைந்து "கன்னிகையா?" என்று ஏககாலத்தில் கூவினார்கள்.

ஆனந்தவிங் உடனே "ஓகோ! நாம் தவறு செய்துவிட்டோம் என்று உணர்ந்துகொண்டு தட்சணம், "ஓகோ! நீங்கள் அவளைப்பார்க்கவில்லையோ? அவள்...அங்கிருந்து கடிதம் கொண்டுவந்தாளே" என்று கண் சிமிட்டிவிட்டு "நான் கூறுகிற ஆளை நீங்கள் தெரிந்துகொள்ள வில்லையோ?" என்றான்.

(தொடரும்.) ஆரணி-குப்புசாமி முதலியார்.

---

# சந்தாதார்க்கு அறிக்கை.

14-வது ஆண்டு சந்தாத்தொகையை நமக்கு 14-6-28-க்குள் வந்து சேரும்படி அனுப்பிய சந்தா நேயர்களுக்கு "ஓயாச் சிரிப்பு" என்னும் விநோத புத்தகம் நாளிது ஆடிமாதக் கடைசிக்குள் அனுப்பப்படும். இந்தக் கெடுவுக்கு ஒருநாள் பிந்தியாவது எமக்குச் சேரும்படி சந்தா அனுப்பியவர்க்கு ஷை புத்தகம் அனுப்பப்படமாட்டாது. இதைப்பற்றி வீணாகக் கடிதம் எழுதி எமக்குத் தொந்தரவு கொடுக்காதபடி வேண்டிக் கொள்ளுகிறோம். ப-ர்.

## பொது வர்த்தமானம்.

சைமன் கமிஷன்காரர்களின் இரண்டாவது முறை வருகை :— இங்கிலாந்து சென்ற சைமன் கமிஷன்காரர்கள், மறுமுறையும் இந்தியாவிற்குப் புறப்பட்டு நாளிது 1928ஆு அக்டோபர்மீ 12உ பூனாவுக்கும், 30உ லாகூருக்கும், நவம்பர்மீ 11உ கராச்சிக்கும், 16உ பெஷாவருக்கும், 21உ தில்லிக்கும், 28உ லக்னோவுக்கும், 1929ஆு ஜனவரிமீ 2உ ஷில்லாங்குக்கும், 12உ கல்கத்தாவுக்கும், 29உ இரங்கோனுக்கும், பிப்ரவரிமீ 18உ சென்னைக்கும், மார்ச்சுமீ 13உ நாகப்பூருக்கும், 25உ தில்லிக்கும் செல்வார்கள்.

* * *

சென்ற மாதத்தில் சென்னைக்கு இரண்டு ஆகாய விமானங்கள் வந்து சுமார் இரண்டு வாரகாலம் தங்கியிருந்தன. அவைகள் தினந்தோறும் காலையில் $7\frac{1}{2}$ மணி முதல் 11 மணிவரையிலும் மாலையில் 3 மணி முதல் 6 மணி வரையிலும் சென்னையில் சுற்றி வந்தன. அவைகளின் சொந்தக்காரர்கள் அவைகளில் ஏறியவர்கள் ஒவ்வொருவரிட மிருந்தும். 10 ரூபா கட்டணம்பெற்றார்கள். இவ்வகையில் அவர்கள் பல ஆயிரக்கணக்கான ரூபா சம்பாதித்தார்கள். சென்னையில் வெளியாகும் பத்திரிகைகளில் முதன்மையானவைகளின் பிரதிநிதிகளை இந்த ஆகாய விமானங்களின் சொந்தக்காரர்கள் அழைத்து இவ்வாகாய விமானங்களில் ஏற்றிச் சென்னை நகரின்மேல் சுற்றிவந்தனர். இந்த விமானங்களிலுள்ள இயந்திரங்கள் பெரும்பாலும் மோட்டார் வண்டியிலுள்ள இயந்திரங்களைப் போலவே இருக்கின்றன. விமானம் செலுத்துபவரும் அதில் ஏறியவர்களும் சாதாரண உடையே தரித்துக்கொண்டிருந்தனர். சிறுவர்களும் இவ்விமானத்தில் ஏறிச் சுற்றி வந்தனர். மோட்டார் வண்டிக்கு எவ்வளவு பெட்ரோல் செலவாகிறதோ அவ்வளவுதான் இந்த விமானத்திற்கும் செலவாகிறது.

* * *

அயர்லாந்து தேசத்தில் கன்னிகை பிரான்சஸ் ஸ்டெர்னி என்னும் பெண் மகளின் தலைமயிர் 5 அடி நீளமானதா யிருக்கிறது. அதை அவிழ்த்துவிட்டால் அது தரையில் விழுகிறது. இந்தப் பெண் மகளின் தாயாருக்கும் பாட்டியாருக்கும் தலைமயிர் அதிக நீட்டா யிருந்ததாம்.

* * *

அமெரிக்காவில் பிராண்டன் என்னும் ஊரில் ஒரு உபாத்தியாயரின் மனைவி இறந்துவிட அவர் இரண்டாம்தாரம் விவாகம் செய்து கொண்டார். இரண்டு ஆண்டுகளுக்குமுன் அவர் இறந்துவிட்டார். அவருடைய முதல் தாரத்தின் 31 வயது வாய்ந்த புத்திரன் தன்னுடைய 43 வயது வாய்ந்த சிறிய தாயாரை இரண்டு மாதங்களுக்குமுன் விவாகஞ் செய்து கொண்டார். இது கலிகால விந்தைகளில் ஒன்று.

## "ஆனந்தபோதினி" பஞ்சாங்கம்.

விபவ௵ ஆவணி௴—கலியுகாதி 5030, சாலிவாகனம் 1851,
பசலி 1338—கோல்லமாண்டு 1104—ஹிஜிரி 1347
இங்கிலீஷ் 1928௵ ஆகஸ்டு௴—செப்டம்பர்௴

| ஆவணி௴ | ஆகஸ்டு௴ | வாரம். | திதி. | நக்ஷத்திரம். | யோகம். | விசேஷங்கள். |
|---|---|---|---|---|---|---|
| 1 | 16 | வியா | பிர30-33 | மகம்33-33 | அ33-33சி | விஷ்ணுபதி புண்யகாலம் |
| 2 | 17 | வெ | துதி29-10 | பூரம்34-8 | சித்60 | கரிநாள் |
| 3 | 18 | சனி | திரி29-25 | உத்36-20 | மர60 | மஹஸ்ராவா |
| 4 | 19 | ஞா | சது31-35 | அஸ்40-10 | அ40-10சி | |
| 5 | 20 | திங் | பஞ்35-13 | சித்45-35 | பி45-35அ | |
| 6 | 21 | செவ் | சஷ்40-20 | சுவா52-18 | சி52-18ம | |
| 7 | 22 | புத | சப்45-10 | விசா59-48 | சித்60 | |
| 8 | 23 | வியா | அ52-43 | அநு60-0 | சித்60 | |
| 9 | 24 | வெ | நவ58-48 | அநு7-35 | சி7-35ம | |
| 10 | 25 | சனி | தச60-0 | கேட்14-50 | சித்60 | |
| 11 | 26 | ஞா | தச3-45 | மூல21-3 | அ21-3சி | |
| 12 | 27 | திங் | ஏகா7-25 | பூரா25-48 | மர60 | |
| 13 | 28 | செவ் | துவா9-20 | உத்23-48 | அ28-48சி | |
| 14 | 29 | புத | திர9-25 | திரு30-5 | சி30-5பி | ருக் உபாகர்மம். |
| 15 | 30 | வியா | ச○7-53 | அவி29-48 | சி29-48ம | பௌர்ணமி, யஜுர்வேத உபா, ஆவணிஅவிட்டம் |
| 16 | 31 | வெ | பௌ5-8 | சத28-8 | சித்60 | காயத்திரி ஜபம் |
| 17 | செப்டம்பர் 1 | சனி | பிர0-50 துதி55-55 | பூரட்25-28 | ம25-28சி | திரு சிராவணபகுளம், அவமாகம் |
| 18 | 2 | ஞா | திரி50-25 | உத்22-5 | அமி60 | சர்வ முகூர்த்தம் |
| 19 | 3 | திங் | சது44-40 | ரேவ18-23 | சித்60 | சங்கஷ்ட சதுர்த்தி |
| 20 | 4 | செவ் | பஞ்33-53 | அஸ்14-30 | சித்60 | வியாதியஸ்தர் குளிக்க |
| 21 | 5 | புத | சஷ்33-10 | பர✕10-40 | சி10-40அ | கிருத்திகை, சிதளாசப்தமி |
| 22 | 6 | வியா | சப்27-43 | கிரு7-0 | மர60 | கோகுலாஷ்டமி |
| 23 | 7 | வெ | அ22-40 | ரோ3-43 | ம3-43சி | ஸ்ரீ கிருஷ்ண ஜயந்தி |
| 24 | 8 | சனி | நவ17-58 | மிரு0-43 திரு58-8 | சித்60 | அவமாகம் |
| 25 | 9 | ஞா | தச13-40 | புன56-5 | சித்60 | சர்வமுகூர்த்தம் |
| 26 | 10 | திங் | ஏகா9-53 | பூசம்54-33 | சித்60 | சர்வமத்வ ஏகாதசி, காருத்த, வித்தியாரம்பம் |
| 27 | 11 | செ | துவா6-38 | ஆயி53-40 | சித்60 | பிரதோஷம் [செய்ய |
| 28 | 12 | புத | திர4-8 | மகம்53-43 | சி53-43அ | கரிநாள், மாச சிவராத்திரி |
| 29 | 13 | வியா | ச●2-40 | பூரம்54-45 | சி54-45ம | சர்வந்திர அமாவாசை |
| 30 | 14 | வெ | அமா2-5 | உத்57-0 | சி57-0அ | மௌன விரதம் |
| 31 | 15 | சனி | பிர3-5 | அஸ்60-0 | மர60 | சாமவேத உபாகர்மம் |

| | | | |
|---|---|---|---|
| | குரு | செ ராகு | |
| | 1௳ சிம்-புத<br>15, கன்-சுக்<br>17,, கன்-புத | | சூரி பு-ச |
| | சனி கே | | |

PRINTED & PUBLISHED BY N. MUNISAWMI MUDALIAR,
AT THE "ANANDA BODHINI" POWER PRESS,
15, VENKATESA MAISTRY ST., MADRAS.


# காதலர் கண்டு களிப்புறும் நூல்கள்.
## சதிபதிகளின் மர்மம் அல்லது
# மானிடரகசிய சாஸ்திரம்

பெண்களைச் சந்தோஷிக்கச்செய்யும் விதமும், சிசு உற்பத்தி நேர்மையும் சிசுவை கவனிக்கவேண்டிய ஏற்பாடும் உண்மையான ஜாதிபேதங்களும், அவைகளின் லட்சணங்களும், ஆண் பெண் இருவர்களும் இன்புற்றிருக்கும் விதங்களும், இன்ன ஸ்திரீயை இன்னவர் விவாகம் செய்யவேண்டும் என்ற விவரமும், போகம் செய்யவேண்டிய நாளும், நாழிகையும், சுகிக்கவேண்டிய கிரமமும், ஆண் பெண் மலடு விவரங்களும், ருது காலங்களும், அவைகளின் பலாபலன்களும், மாதர்களுக்கு அமிர்தநிலை இருக்கும் விவரமும் அதை இன்ன விதமாய் நிலைபெயர்க்கலாம் என்பதும் அகாலசேர்க்கையால் வரும் கெடுதியும் இன்னும் பல அறிய விஷயங்களும் இதில் அடங்கியிருக்கின்றன. கண்களைக் கவரும் அழகிய சித்திரப் படங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. விலை ரூ. 1.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| இன்பவாழ்க்கையின் இரகசியங்கள் | 2 | 0 | 0 | ரதி சாஸ்திரம் | 1 | 4 | 0 |
| | | | | சரீர மர்மசாஸ்திரம் | 1 | 0 | 0 |
| இல்வாழ்க்கையின் இரகசியங்கள் | 2 | 0 | 0 | மதனாதி ரஹஸ்யம் | 1 | 0 | 0 |
| | | | | ரதிமதனசிருங்காரரஹஸ்யம் | 1 | 0 | 0 |
| மணவாழ்க்கையின் மர்மங்கள் | 2 | 4 | 0 | மாயாஜால விநோதம் | 1 | 0 | 0 |
| | | | | மனோவசிய சாஸ்திரம் | 1 | 8 | 0 |
| மாதர் நீதி | 1 | 0 | 0 | ஸ்திரீ புருஷ ரகசியம் | 1 | 8 | 0 |

ஆரியன் புக் டிபோ, திருவல்லிக்கேணி, மதராஸ்.

## காந்தசக்தி வைத்திய சாஸ்திரம்.
(தமிழ்ப் பதிப்பு)



இப்புஸ்தகமானது, ஔஷதப் பிரயோக மின்றிப் பிணிகளைத் தீர்க்கும் சக்தியை யளிக்கக் கூடியது. ஒருவனை நித்திரை போன்ற மயக்க மடையச் செய்வதற்கு உரிய வழியையும், வியாதிகளையும், கெட்ட பழக்கங்களையும் நீர்த்துக் கொள்ளக்கூடிய பல வழிகளையும் தெரிவிக்கிறது. நரம்புகளினால் உண்டாகும் குத்துவலிகள், வயிற்றுவலி, மலச்சிக்கல், தலைவலி, நரம்புக்குத்தல், பல்வலி, வாதரோகம் முதலிய பல வியாதிகளையும் காந்த சத்தியால் தீர்க்கும் மார்க்கங்களெல்லாம் இதில் விளக்கமாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. இதில் பல படங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

இதன் விலை ரூபா 1—0—0

## ஹஸ்தரேகை சாஸ்திரம்.



இது, யாவரும் தெரிந்து கொள்ளும்படியான செந்தமிழ் வசன நடையில் எழுதி சுமார் 200 படங்களுடன் அச்சிட்டு வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. இதை வாசிக்கும் அனைவரும் தங்களுடைய விவாஹம், ஆயுள், இல்லறச்சுகம், சந்தானம், ஐசுவரியம், தேகசௌக்கியம், தனநஷ்டம், மரணம் முதலிய பல விஷயங்களையும் சுலபமாகத் தெரிந்து கொள்ளலாம். விலை ரூபா 2—0—0

இதே புஸ்தகம் இங்கிலீஷிலும் கிடைக்கும். விலை ரூபா 1—8—0

ஆனந்தபோதினி ஆபீஸ்,
தபால்பெட்டி நெ. 167,
மதறாஸ்.

# ஸ்ரீமத் கம்பராமாயண வசன சங்கிரகம்

## (சப்தகாண்டங்கள் அடங்கியது.)

## (மூன்றாம் பதிப்பு)

**ஸ்ரீ இராமர் பட்டாபிஷேகம் ஆப்டோன் படம் சேர்க்கப்பட்டது.**

**மிக்க திருத்தங்களோடு கிளேஸ் கடிதத்தில் அச்சிடப்பட்டுள்ளது.**

☞ இதன் முதல் இரண்டு பதிப்புக்களும் மிக விரைவில் செலவாகிவிட்டபடியால் இம்மூன்றாம்பதிப்பு இப்போது வெளிவந்துள்ளது. இப் பதிப்பிலும் சொற்பக் காப்பிகளே அச்சிடப்பட்டிருக்கின்றன. ஆதலின் இப்பதிப்பு புஸ்தகம் வேண்டியவர்கள் முன்னரே எழுதிப் பெற்றுக்கொள்க.

ஸ்ரீ இராமபிரான் சரிதையை விரித்துக்கூறும் இந்த இராமாயணமானது மிக்க புண்ணிய கதை யென்பது உலகறிந்த விஷயம். இதனைப் பாராயணஞ் செய்வதாலுண்டாம் பயன்கள் அளவிடற்கரியனவாம். இதனைப் பக்தி சிரத்தையுடன் படிப்பவர்க்கு உலகத்தில் விரும்பக்கூடிய பொருள்களெல்லாம் கைகூடும்; உயர்ந்த அறிவுண்டாகும்; கீர்த்தி அதிகரிக்கும்; மோக்ஷத்தை அடையும் மார்க்கம் ஏற்படும்; இலக்குமி கடாக்ஷ முண்டாகும்.

இன்னும் இந்த இராமாயணத்தைப் பக்தியுடன் படித்து முடிக்குமிடங்களில் கலியாணம் முதலிய மங்களகாரியங்கள் நிறைவேறும்; புத்திர பாக்கிய முண்டாகும்; பசு, பால், தானியம் முதலியன விருத்தியாகும்; பில்லி, சூனியம், தீராதநோய், பூதபைசாச உபத்திரவங்கள் முதலியவை நீங்கும்; பகை நீங்கும்; விஷஜெந்துக்கள் அணுகமாட்டா; பஞ்சம் நீங்கும்; நல்ல மழை பெய்யும்; துக்கமான சம்பவங்கள் நீங்கி மிக்க ஆனந்தமுண்டாகும். இவையெல்லாம் உண்டாவது நிச்சயம். இராமாயணம் படித்த பற்பல இடங்களில் இப்பயன்கள் உண்டாகியிருக்கின்றன. இவற்றை ஒவ்வொருவரும் அநுபவத்திலும் உணர்ந்துகொள்ளலாம்.

இத்தகைய மகாமகிமைவாய்ந்த இராமாயணம் பெரும்பான்மையும் கம்பர் இராமாயணச் செய்யுட்களின் போக்கைத் தழுவியே தெள்ளிய நடையில் எழுதப் பெற்றிருக்கின்றது. இராமாயண பாராயணஞ்செய்ய விரும்புவோரும், சாதாரணமாக இராமர் கதையைப் படித்துணர விரும்புவோரும், வித்தியார்த்திகளாகிய மாணவர்கள், மாணவிகள், மற்றைய ஆண்மக்கள், பெண்மக்கள் முதலிய எல்லோரும் இதனை எளிதில் படித்துணரலாம்.

இதன் விலை ரூபா 2.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.




### மதன காமேஸ்வர லேகியம்.

இது விலை உயர்ந்த சாலாமிசிரி முதலாகிய மூலிகைகளால் செய்யப்பட்டது. பலமும், வீரிய விர்த்தியையும் உண்டாக்குவதில் அதிமேன்மை பொருந்தியது. மேகம், வெட்டைச்சூடு, நித்தாரணை, சுக்கில நஷ்டம், அதிமூத்திரம், சுரம் முதலியவைகளை நீக்கி மிகுந்தபலத்தையும், யௌவனமும் உண்டாக்குவதில் அமோகமானது. இரண்டு டின்கள் போதுமான 20 தோலாம் டின் 1-க்கு ரூ. 1-4-0 வி. பி. சார்ஜு அணா 8.

பி. சி. ப. அண்டு கோ.

ஆயுர்வேத சமாஜம், பெரிதேபி, செல்லூர் ஜில்லா.

# நேர்த்தியான பட்டு அங்கவஸ்திரங்கள்

ஐந்தரை முழ நீளம் இரண்டரை முழ அகலம்.



நாகரீகமும் அழகும் வாய்ந்த இந்த நவீன பட்டுக்குட்டைகள் வேண்டியவர்கள் இச்சமயத்தில் நாளைப் போக்காமல் இன்றைக்கே எழுதுங்கள். ஸ்டாக்கிலிருப்பவை செலவழிந்து விட்டபின் 10 ரூபாய் கொடுத்தாலும் இப்படிப்பட்ட குட்டைகள் கிடைக்கமாட்டாவென்பது உண்மை! உண்மை!! மிகவும் நேர்த்தியான பளபளப்போடு கூடிய பட்டினால் செய்யப்பட்ட இக்குட்டைகளை சிரசில் சுற்றிக்கொள்ளலாம், கமிஸ், சட்டை, கோட் முதலிய சொக்காய்களின் மேல் போடும் துப்பட்டாக்களாகவும், ஸ்திரீகள் தாவணியாகவும், சிறு பெண்பிள்ளைகள் தாவணியாகவும் அங்கவஸ்திரமாகவும் உபயோகிக்கலாம். இவற்றில் பச்சை, வெள்ளை, சிவப்பு, வெண்சிவப்பு, ரோஸ், ஊதா, நீலம், மஞ்சள், மேகவர்ணம் முதலிய பல நிறங்கள் பொருந்தியவை உண்டு வேண்டுவோர் இன்ன குட்டை வேண்டுமென்று கடிதம் எழுதி அனுப்பவும். விலை 1-க்கு ரூ. 2-8-0

**காமவல்லி** இன்பரசம் பொருந்தியது, பெண்களின் மாயஜாலத்தை விளக்குவது. நீதியைப்போதிப்பது இதன் விலை அணா 8.

விலாசம்:- தனலட்சுமி கம்பெனி, தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

## G. W. M. REYNOLDS'

### BOLD TYPE EDITIONS.

| No. | Title | Vols. | Rs. | A. |
|---|---|---|---|---|
| 1. | Mysteries of the Court of London | 17 vols. | 17 | 0 |
| 2. | Joseph Wilmot | 8 ,, | 5 | 0 |
| 3. | Ellen Percy | 8 ,, | 5 | 0 |
| 4. | Mary Price | 8 ,, | 5 | 0 |
| 5. | Rye House Plot | 4 ,, | 3 | 0 |
| 6. | Young Duchess | 4 ,, | 3 | 0 |
| 7. | Rosa Lambert | 4 ,, | 3 | 0 |
| 8. | Loves of the Harem | 4 ,, | 3 | 0 |
| 9. | Margaret | 4 ,, | 3 | 0 |
| 10. | Massacre of Glencoe | 4 ,, | 3 | 0 |
| 11. | Virgin's Kiss | 4 ,, | 3 | 0 |
| 12. | Canonbury House | 3 ,, | 2 | 4 |
| 13. | Mysteries of Old London | 3 ,, | 2 | 4 |
| 14. | Pope Joan | 3 ,, | 1 | 12 |
| 15. | Soldier's Wife | 2 ,, | 1 | 8 |
| 16. | May Middleton | 2 vols. | 1 | 8 |
| 17. | Faust | 2 ,, | 1 | 8 |
| 18. | Leila | 2 ,, | 1 | 8 |
| 19. | Robert Macaire | 2 ,, | 1 | 4 |
| 20. | Mary Stuart | 2 ,, | 1 | 4 |
| 21. | Seamstress | | 1 | 0 |
| 22. | Alfred | | 1 | 0 |
| 23. | Grace Darling | | 0 | 12 |
| 24. | Young Fisherman | | 0 | 10 |
| 25. | Agnes | 9 ,, | 6 | 0 |
| 26. | Kenneth | 4 ,, | 3 | 0 |
| 27. | Omar | 4 ,, | 3 | 0 |
| 28. | Coral Island | 4 ,, | 3 | 0 |
| 29. | Wagner | 3 ,, | 1 | 12 |
| 30. | Master Timothy's Book Case | 3 ,, | 1 | 12 |
| 31. | Parricide | | 1 | 12 |
| 32. | Stories Told by a Gendarme | | 0 | 12 |
| 33. | Mysteries of Paris by *EUGENE SUE* | | 1 | 0 |


SUPERIOR WATCH CO., P. B. No. 167, MADRAS.

கவனியுங்கள்!! நல்ல லாபம்

## PHOTO HAND CAMERA


### நூதன போட்டோ பிடிக்கும் காமரா

ரொம்பவும் குறைந்த விலை ரூபா. 2—8—0



நண்பர்களே! மேலே சொல்லிய காமிரா லண்டனில் புதிதாய்ச் செய்யப்பட்டது. பழக்க மில்லாதவர்களும் முன் அனுபோகம் இல்லாதவர்களும் சுருண நேரத்தில் போட்டோ எடுக்கலாம். எக்காலத்திலும் தெளிவான போட்டோ பிடிக்கலாம். இந்த காமிராவைவாங்கி நூறுநூறு கப் பணம் சம்பாதிக்க ஆரம்பித்து விட்டனர். போட்டோவின் அளவு 3½ X 2¼ ஆகும். காமிராவைச் சேர்ந்த எல்லா சாமான்களுடனும் அனுப்பப்படும். போட்டோ பிடிக்கும் விபரம் தெளிவாய் அச்சிடப்பட்டு பெட்டியுடன் அனுப்பப்படும். சிறிது நாளைக்கு மட்டும் எங்களுடைய அசல் விலை ரூ. 2—8—0-க்கு கொடுக்கப்படும். வி. பி. வேறு. உடனே எழுதுங்கள்.

### நூதன ஜெர்மன் எலக்ட்ரிக் விளக்கு.




இதை மேஜையின் பேரிலும், சுவற்றிலும் வைக்கலாம். இராத்திரியில் படுக்கையி லிருந்தபடியே விளக்கை இதில் கண்ட கயிற்றின் (Wire) உதவியால் நிறுத்தவும் செய்யலாம். புயற்காற்று அடித்தாலும் எரியும் பிரகாசம் கண்ணைப் பறித்துக்கொண்டு போகக்கூடியது. விசேஷ காலங்களில் வைத்தால் திரளான ஜனங்கள் அதிசயத்தைப் பார்க்கக் கூம் பலாக்கூடி விடுவார்கள் மிக ஜாக்கிரதையாக பாக்கிங் செய்தனுப்பப்படும்.

குறைந்த விலை ரூ. 4—8—0.

### 110 சாமான்கள் அடங்கிய ஜெர்மன் பெட்டி.

விலை ரூ. 3-8-0 தான்




விலை ரூ. 3-8-0 தான்

சாமான்களின் விவரம்.

18 காரட் ரோல்டு கோல்டு அழகிய நிப்புள்ள பவுண்டன் பேனு 1; 18 காரட் ரோல்டு கோல்டு இமிடேஷன் வைர மோதிரங்கள் 2; டை, சர்ட் பொத்தான்கள் செட் 12; டை கல்லிழைத்த புரூச் 1; ஜப்பான் நூதன பொம்மைகள் 6; கோர்த்தியான முகம் பார்க்கும் கண்ணாடி 1; அழகிய தந்த சீப்பு 1; மடிப்புள்ள கத்தி 1; கோர்த்தியான கத்தி 1; காம்பினேஷன் நூதன சாவி வளையமும் செயின் 1; உயர்ந்த பென்சல்கள் 12; பென்சல் கிளிப்புடன் கூடிய கவர் 1; பலாக பென் ஹோல்டர்கள் 6; உயர்ந்த நிப்புகள் 12; மணி பர்ஸ் 1; ஜெர்மன் இங்கி புட்டி 1; இங்கி மாத்திரைகள் 12; செண்ட் புட்டி 1; தேசீய டிரான்ஸ்பர் படங்கள் 12; அழகிய பலாக சேப்டி பின்கள் 25; ஆக 110 சாமான்கள் அடங்கிய ஜெர்மன் பெட்டி 1-க்கு ரூ. 3—8—0.

இராஜலட்சுமி கம்பெனி, நெ. 44, நம்புலையர் தெருவு, மதராஸ்.


## டேபில் டைம்பீஸ் இனும்!!!




எங்கள் 22 காரட் ரோல்ட் கோல்ட் "கோல்டன்" கைக்கெடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேஜையின் பேரில் வைக்கக்கூடிய ஒரு அழகான டேபில் டைம்பீஸ் இனுமாக சேர்த்து அனுப்பப்படும். இரண்டும், 5 வருஷம் உத்திரவாதம். மூன்றுங்கள் விலை ரூ. 6-8-0 தபால் கூலி பிரத்தியேகம்.

வி. பி. சட்டமில்லாத வெளிநாட்டு நேயர்கள் இதற்கு ரூ. 8—0—0 முன் பணம் அனுப்பவேண்டும்.

## இனும்! இனும்!!




முனையில் இரிடியம் உள்ள 14 Kt. தங்க நிப்பு போட்ட Self-filling பௌண்டன்பேனு இனும்.



எங்கள் 18 காரட் ரோலடு கோல்டு பின்புறம் விசித்திர வேலை செய்யப்பட்ட லீவர் பாக்கெட் கெடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேலே சொல்லிய படி பௌண்டன் பேனு இனுமாய் அனுப்பப்படும். கடியாரம் விலை ரூ. 4—12—0. 5 வருஷம் உத்தரவாதம். உடனே எழுதுங்கள்.

### 22 காரட் ரோல்டு கோல்டு புது மாடல் கைக்கடியாரங்கள்.



இதிற்கண்டபடி எந்த வேஷப் வேண்டுமோனாலும் அனுப்பப்படும். வேலைப்பாடு மிகவும் உறுதி. கையில் கட்டிக்கொண்டால் தங்க ஆபரணம் போல் இருக்கும். ஒவ்வொரு கடியாரத்திற்கும் ரோல்டு கோல்டு அமெரிக்கன் கைச்சங்கிலி இனுமாய்ச் சேர்த்து அனுப்பப்படும். 5 வருஷம் உத்ரவாதம். ரூ. 5-8-0 வி. பி. வேறு.

சுபீரியர் வாட்சு கம்பெனி, கெடியார வியாபாரிகள், மதராஸ்.

படுக்கை அறையின் லீலாவினோத படங்கள் அடங்கிய

## போட்டோ ஆல்பம்.




நேயர்களே! இந்த ஆல்பத்தில் பன்னிரண்டு விதமான ப்ரெஞ்சு லேடிகளின் படுக்கையறைப் போட்டோக்கள் பார்க்க வெகு சுந்தரமாக வைக்கப்பெற்றிருக்கின்றன. பாரிஸ் மாதரின் லீலா விநோதமும் ஒப்புயர் வற்ற ரூபலாவண்யமும் பலவினுசு சாயல்களில் கண்டு ஆனந்திக்கலாம். ஒரு ஆல்பம் தருவித்தவர் உடனே திரும்ப அநேக ஆல்பங்கள் அனுப்புங்கள் எனக் கடிதம் எழுதுகிறார்கள். நீங்கள் உடனே முந்துங்கள். விலை ரூ. 2—12—0 வி. பி. வேறு.

இராஜலட்சுமி கம்பெனி, நெ. 44, நம்புலையர் தெருவு, மதராஸ்.

### உங்களுக்கு வேண்டிய

வாசனை சாமான்களுக்கு எமது பிரஞ்சு செண்டுகளின் நன்மைகளை தெரியும் பொருட்டு கீழ்காணும் விதம் விற்கப்படும். அதை வாங்கி திருப்தி அடைந்து பின்னால் சதையே வாங்குவீர்கள் என்பது உறுதி.

நெ. 1. ஒரு சோப், ஒருமாதிரி செண்டு புட்டி, ஒரு முகவசிகர டப்பி விலை ரூ. 1—0—0. நெ. 2. ஒரு பிஸ்கட் பாக்கெட், ஒரு கூந்தல் வளரும் தைல புட்டி விலை ரூ 1—0—0 நெ. 3. ஒரு சேமியா பாக்கெட், 4 சாக்லட் எனும் மிட்டாய் 4 தேங்காய் மிட்டாய் ரூ. 1—0—0 ஜாஸ்மின், வில்லா, ரோஸ் உயர்ந்த ரகம் பெரிய புட்டி விலை ரூ. 2. ஷை சிறிய புட்டி விலை ரூ. 1.

மூன்று விதமான மாதிரி புட்டிகள் விலை ரூ. 1. தபால் கூலி அணா 12. விபர ஜாப்தா இனாம். வேண்டுவோர் உடனே எழுதவும்

லக்ஷ்மண பிரசாத் கம்பெனி, (டிபாட் 6) புதுச்சேரி.

---

# ஜெய ரசம்.

(1) அக்னிக்கு ஜெயித்த ரசம், இது ஒரு சாதுவின் முறைப்படி செய்தது. இந்த ரச வெட்டையை உருக்க மணியாகும். ஒரு தோலா இடை ரூ. 7—12—0.

(2) மேற்படி ஜெய ரசம் செய்யும் முறை ரூ. 10—4—0. தபால் சார்ஜ் இனாம். முன்பணம் அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

S. C. சேகரம்,
தெப்பகுளம் போஸ்ட்,
திருச்சினாப்பள்ளி.

---

### ஜர்மன் இரகஸ்ய இங்கி.

இந்த இங்கியினால் இரகசிய விஷயங்கள் கடித மூலமாய் ஒருவர்க்கொருவர் தெரிந்துகொள்ள வேண்டுமானால் அதில் உள்ள விஷயம அறிய உபயோகிக்கும் முறைப்படி செய்தால் உடனே ஆச்சரியமாக மேற்படி கடிதத்திலிருந்து கருப்பு இங்கியில் எழுதிய எழுத்துகள்போல் தெரியவரும் இதை உபயோகிக்கும் முறைப்படி செய்கிறவரையில் இதிலெழுதியுள்ள விஷயத்தை அறிய ஒருவராலும் முடியாது ஸரயம் ஒரு அவுன்சு புட்டி அணா 12.

### லக்ஷிமீ கரிபவுடர் என்னும் மசாலாவர்க்கம்

சகல குடும்பங்களுக்கும் உபயோகப்படும் வஸ்து சகல பதார்த்தங்களையும் ருசியைத்தரும் வஸ்து இக்கறிபவுடர் என்னும் மசாலாவர்க்கம் பாகசாஸ்திரத்தில் தேர்ந்த பண்டிதர்களால பாகவிதிப்படியும் சரக்குகளை அளவின்படியும் சேர்த்து தயாரானது. இது எவ்வித கறிபதார்த்தங்களுக்கும் உபயோகிக்கலாம் இதைச் சேர்த்துக் கொண்டால் இனகாய் மசாலை வாங்கவேண்டியதில்லை சாதாரண பதார்த்தங்களைக் கழுவி தண்ணீரோ அல்லது தேங்காய்ப்பாலோ விட்டு இத்தூளில் சொல்லிய அளவிறகு போட்டு சமைக்கும் முறைமையில் சமைத்தால் வெகு ருசிகரமாகவும் பரிமள வாசனையும் தரும். இது அனேக நற்சாக்ஷிப் பத்திரங்கள் பெற்றது.



அளவு முறைகளும் உபயோக விதியும் பார்சலுடன் அனுப்புவோம்.

| | |
|---|---|
| 1-சேர் (8 பலம்) கொண்ட டின் | ரூ. 1—4—0 |
| ஒரே முறையில் 1 வீசை டின் வாங்கினால் | ரூ. 6—0—0 |
| ஆனந்தபோதினியில் பார்த்ததாக எழுதுவோருக்கு | ரூ. 5—0—0 |

என். பாக்ய லக்ஷிமி Co., பார்க்டவுன் போஸ்டு, மதராஸ்,

---


## நோய்க் கிடங்கொடேல்

நீங்கள் ஏன் தலைவலிகளுக்கு, ஜலதோஷம், பாரிசவாயு, கீல்வாயு முதலான பலவித நோய்களுக்கு உட்பட்டு அவஸ்தைப்பட வேண்டும்? சூரியனைக்கண்ட பனி போல் நோய் இருக்கிற இடம் தெரியாமல் இலகுவில் சொஸ்தப்படுத்துவது நிகரற்றதான

# Amrutanjan

# அமிருதாஞ்சன்

### ஸர்வ நோய்களுக்கு ஸித்தௌஷதம்





அமிருதாஞ்சனம் அபூர்வமான மூலிகைகளிலிருந்து செய்யப்படுகிறது. தோலைப்பற்றிய சொறி சிரங்குகளுக்கும், வெட்டுக்காயம், இருமல் முதலிய உபத்திரவங்களுக்கும் கை கண்ட மருந்து.

விலை அணா 10

### படைத் தைலம்.

இது எல்லாவிதமான படைகளையும் போக்கும். விலை டப்பி 1-க்கு அணா 6.

### மோஹினி தைலம்.

ஸ்த்ரீ புருஷர் உபயோகிப்பதற்கு பிரசித்தமானது. 5 தோலா எண்ணெய் சீசா 1-க்கு அணா 12.

### தந்த சூரணம்.

பல்துலக்க இது நல்ல தூள். பல் வியாதி, ஈறு வலி முதலிய நோய்கள் நீங்கும். விலை டப்பி ஒன்றுக்கு அணா 2.

எல்லா கடைகளிலும் கிடைக்கும்.

## அமிருதாஞ்சன் டிப்போ,

நெ. 6, தம்புசெட்டி தெரு, மதராஸ்.

# புத்திர சந்தான எண்ணெய்.

ஆண்மலடு சொன்னாலும் சொல்ல லாகும்
அப்பனே பெண்மலடு யாரு மில்லை
என்மலடாய்ப் போவதென்று கேட்பா யாகில்
இயம்புவேன் கருக்குழியில் சோரி சேர்ந்தால்
ஊன்மிகுந்தால் புழுதரித்தால் உதிரங் கெட்டால்
ஓங்கார பிரணவத்தில் வாயு சேர்ந்தால்
தான்மதத்து விபரீதச் சேர்க்கைசெய்தால்
தலையாட்டுப் பேய்பிணியால் தரியாதெல்லோ.

ஸ்திரீகளின் கருக்குழியினிடத்தில் புழுக்கள் உண்டாகி அவ்வப்போது வித்தைப் புசித்து விடுவதினாலும், விபரீதச் சேர்க்கையாலும், கருக்குழியினிடத்தில் சதைவளர்ந்து சோரிபற்றி இரத்தங் கட்டியிருப்பதாலும், கருக்குழி மதத்துக் கொழுத்திருப்பதாலும், மூலச்சுழியில் வாயு பித்தம் தங்கி யிருப்பதனாலும் கரு தரிக்காது.

இந்த எண்ணெயைக் காலை மாலை இருவேளையும் 1-அல்லது 2-காசு அளவு உள்ளங்கையில் விட்டுச் சாப்பிடவேண்டியது. இப்படி 15-நாள் சாப்பிட்டால் இது கருக்குழியிலிருக்கும் மேற்படி குற்றங்களை நீக்கி, கருக்குழியைச் சுத்தப்படுத்தி, மறுமாதத்திலேயே கரு தரிக்கும்படி செய்யும். இது அனுபவமான எண்ணெய். இதற்குக் கடுமையான பத்தியம் கிடையாது.

சிலருக்குக் கரு தரித்து 2, 3, 4-மாதங்கள் வரையில் தங்கியிருந்து திடீரென்று உடைந்துபோவதுண்டு. இவ்வகைத் தோஷமும் இந்த எண்ணெயால் நிவர்த்தியாகித் தீர்க்காயுளான கரு தரிக்கும். இதன் விலை ரூபா 2.

விலாசம்:-தனலட்சுமி கம்பெனி, தபால்பெட்டி நெ. 167, மதராஸ்

---

# 'குடி அரசு' 'குடி அரசு'

உண்மையான விஷயங்களை அறிய ஆசைப்படுகின்றீர்களா?

அப்படியானால் குடி அரசை வாங்கி வாசிக்கத் தவறாதீர்கள்

அரசியலின் பேராலும், மதத்தின் பேராலும், பார்ப்பனர்களும், வயிற்றுப் பிழைப்புக்காரர்களும் பாமரமக்களை ஏமாற்றி வஞ்சிப்பதைக்குறித்தும், "இந்து" மத ஆபாசங்களாகிய வேதம், சாஸ்திரம், புராணம் முதலியவைகளின் பேரால் பார்ப்பனர்கள் தங்கள் வயிற்றுப் பிழைப்புக்காக எழுதிவைத்துக்கொண்டிருக்கும் பித்தலாட்டங்களைக் குறித்தும் அஞ்சாது தைரியமாய் உண்மையை வெளியிட்டு பாமர மக்களைத் தட்டி எழுப்பி எல்லோரும் சுயமரியாதையையும், சமத்துவத்தையும், சுதந்திரத்தையும் அடையச் செய்யும் தமிழ் வாரப்பத்திரிகை 'குடி அரசு' ஒன்றே.

16 முதல் 24 பக்கங்கள் வரை கொண்டது.

7000 சந்தாதாரர்களை யுடையது.

வருட சந்தா ரூ. 3 தான்.

ஈ. வெ. ராமசாமி நாயக்கர்,
ஆசிரியர், 'குடி அரசு', ஈரோடு

---

# பூவுலக வாழ்க்கைக்கு இன்றியமையாத சிங்கபலத்தைத் தருவதெது?




முறையாய்ச் செய்த அயக்காந்த செந்தூரத்தைக் காட்டிலும், தேகபலத்தைத் தரும் ஔடதம்வேறொன்று மில்லை.

விளம்பரம்.

இதைக் கண்ணுறும் கனவான்களே!

இந்த லேகிய செந்தூரங்கள் சாமான்யமானவையல்ல. அபாரமான பலத்தைத் தரக்கூடிய சக்தி அமைந்துள்ளவை. உறுதியாய் இவற்றை நம்பி வாங்கிச் சாப்பிட்டால் ஒரே தடவையிலேயே இவற்றின் விசேடகுணம் நன்கு விளங்கும்.

# இந்த லேகிய செந்தூரங்களால்

## நிவர்த்தியாகும் முக்கிய வியாதிகளாவன:

தற்காலத்தில் மனிதரின் பால்ய சேஷ்டையாலும், இரத்தப் போக்காலும் அவர்க்கு உண்டான 20 வகை மேகரோகங்கள், சூலைரோகம், குன்மரோகம், பித்தபாண்டு, கைகால் முடக்கு, நடுவாய்வு, பித்த வெப்பம், நெஞ்சு தொண்டை எரிச்சல், வயிற்றுப்பிசம், அஜீரணம், பசியில்லாமை, தாது நஷ்டம், தேக உளைச்சல், கண்ணில் நீர்வடிதல், சோம்பல், நித்திரையில்லாமை, தலை சுழற்றல், நீர் இறங்கும்போது பொறுக்கமுடியாத பாதையைத்தரும் தந்திமேகம் முதலியவைகள் ஆச்சரியப்படத்தக்கவிதமாய் நீங்கிவிடும். பயங்கரமான மேக சம்பந்த வியாதிகளைப் பத்தே வேளையில் போக்கி சப்த நரம்புகளுக்கும் முறுக்கேற்றி அபரிமிதமான இரத்தவிருத்தியைப் பெருக்கிப் பலத்தைத் தருவதில் இதற்கு மிஞ்சின இலேகிய பஸ்பம் வேறெங்குமில்லை என்று நாம் உறுதியாகச் சொல்லுவோம். இதல்லாமல் தேகத்தைப் புஷ்டியாக்கித் தேகத் தடிப்பு, நகக்கண் வெளுத்திருத்தல் முதலிய வியாதிகளைக் கண்டித்து, தினந்தோறும் மலத்தைத் தாராளமாய்ப் போக்குவதில் இந்த லேகிய செந்தூரங்களே முதன்மையானவை யென்பதை யாம் எமது அனுபவத்தில் கண்டிருக்கிறோம். நிற்க, இந்த லேகிய செந்தூரங்கள், மேற்கண்ட வியாதிகளைக் கண்டிப்பாய் நிவர்த்திக்குமா என்னும் சந்தேகமுடையோர் பரீக்ஷார்த்தமாக முதலில் 48-நாளைக்கு வாங்கி யுண்டால் இவற்றின் அபார குணம் தெரியவரும். தவிர யாங்கள் இம்மகத்துவம் பொருந்திய லேகிய செந்தூரங்களை எவ்வளவு சிறப்பித்துக் கூறியபோதிலும் அது தகும். மேலும் இவற்றை நோய் உள்ளவரேதாம் சாப்பிடவேண்டும் என்ற அவசியமில்லை; யாவரும் சாப்பிடலாம். நோய் உள்ளவர்களைவிட நோய் இல்லாதவர்கள் எண்ணிக்கையாக 48-நாள் இந்த லேகிய செந்தூரங்களை யாதும் பத்தியமின்றிச் சாப்பிட அவர்க்கு நல்ல பலம் ஏற்படும். இது தவறாது. இவற்றைத் தருவித்து நண்பர் எண்ணிக்கையாகச் சாப்பிட்டு 10-நாளைக்குள் குணம் இல்லாவிடில் உடனே தெரியப்படுத்தினால் கட்டாயம் இவற்றிற்கு வாங்கிய பணம் வாபஸ் செய்யப்படும். தவிர மேற்காட்டிய நோய்கள் உடையோர் 48-நாட்கள் சாப்பிடுவார்களேயானால் அவை முழுதும் நீங்கிவிடும். அப்படி நீங்கிக் குணம் ஏற்படாவிடில் நாங்கள் அதற்கு உத்திரவாதிகளாவோம். யாங்கள் இவ்வளவு அருமையான லேகிய செந்தூரங்களை எவ்வளவோ சிரத்தையுடன் கஷ்டப்பட்டு முடித்துப் பரோபகாரார்த்தமாக வெளியிட்டோம். இவ்வருமை வாய்ந்த லேகிய செந்தூரங்களுக்குப் பொன் மெடல், வெள்ளிமெடல், பெற்றதல்லாமல் ஆயிரக்கணக்கான யோக்கியதா பத்திரங்களும் பெற்றிருக்கின்றோம். ஆதலின் நமது லேகிய செந்தூரங்கள் யாம் சொன்னபடி குணத்தைக் கொடுக்கும் என்றதைப்பற்றி ஜவாப்தாரியாயிருக்கக் காத்துக்கொண்டிருக்கிறோம்; இது உண்மை. இவற்றை ஒரேதரம் தருவித்துப் பாருங்கள்; எமது உண்மை விளங்கும்.

வாதாதிக்க தோஷத்தினாலாவது, ஸ்திரீ யாசத்தினாலாவது, அதிக மனக்கவலையினாலாவது, அடிக்கடி உண்டாகும் நோயினாலாவது, மற்றெந்தக் காரணத்தினாலாவது பலமிழந்தவர்கள் எண்ணிக்கையாக டை லேகிய செந்தூரங்களைப் புசிப்பார்களானால் இவை தேகாரோக்யம், வலிமை, அழகு முதலியவற்றை அவர்க்குக் கொடுத்து அவர்களைச் சந்தோஷிக்கச் செய்யுமென்பதில் தடையில்லை. வெளியூர்க் கனவான்கள் இந்த லேகிய செந்தூரங்களில் முழு நம்பிக்கைவைத்து ஒரே ஒருதரம் இவற்றைப் பரீக்ஷிப்பார்களானால், அவர்கள் அவசியம் ஆனந்தமடைவார்கள்.

இந்த லேகிய செந்தூரங்களுக்குப் பத்தியமே கிடையாது. எந்தப் பண்டங்களையும் நீக்குதலின்றி மருந்து சாப்பிடும் காலத்தில் வயிற்றிற்குத் துரோகம் செய்யாமல் சாப்பிடலாம். இவற்றைச் சாப்பிடும்போது பசி அதிகமாக் எடுக்கும் ஆதலால் பச்சைப்பயற்றுக் குழம்பு, தயிர், பால், கறி, மார்க்கள் ரூப்பு, நெய் இலைகளை அதிகமாகப் பசியைத் தணிக்கக்கூடிய விதமாகத் தாமதம் செய்யாமல் சாப்பிட்டுவரவேண்டியது. இவற்றைப் புசிக்கும்போதெல்லாம் பலகாராதிகள் சாப்பிடல் வேண்டும். தயிர், பால், நெய் முதலியவைகள் எவைகளாயிருந்தாலும் சந்தேகமின்றிச் சாப்பிட்டுவரலாம்.

இவ்வருமைவாய்ந்த லேகிய செந்தூரங்களை மட்டும் ஒருவர் தருவித்து எண்ணிக்கையாக 48 நாள் சாப்பிடுவாரே யானால் இவை தேகத்தில் ஊறஊற, மேகமெல்லாம் சூரியனைக்கண்ட பனிபோல் நீங்கி அவர் தேகமானது வலுத்துப் புதிய ரத்தம் பரவித் தன் வாழ்நாள் பரியந்தம் இளைக்காமலிருக்கும், அவரும் அசக்களிப்போடு ஆஜானுபாஹுவாய் விளங்குவார். இவற்றைப் புருஷன் பெண்ஜாதி இருவரும் ஏககாலத்தில் ஒற்றுமையாய்ச் சாப்பிட்டு வந்தார்களேயானால் அவர்க்கு உதிக்கும் மக்கள் யாதொரு நோயுமில்லாமல் மிகுந்த தேஜஸோடு தோன்றுவார்கள். இது உண்மை. இதைப்பற்றி இன்னும் அதிகம் எழுதுதல் அனாவசியம். இந்தியா, பர்மா, ஸிலோன் ஆகிய உள் நாடுகளுக்கு 24-நாள் சாப்பிடக்கூடிய லேகியமும் செந்தூரமும் விலை ரூ. 1-12-0. போஸ்டேஜ் அணா 6. ஒரே தடவை 48-நாள் மருந்து வாங்குவோர்க்கு போஸ்டேஜ் உள்பட ரூபா 4.

பினங்கு, ஸிங்கப்பூர், செட்டால் முதலிய அயல்நாடுகளுக்கு 24-நாள் சாப்பிடக்கூடிய மருந்து விலை ரூபா 1-12-0 தபாற்கூலி ரூபா 1-4-0.

48-நாள் மருந்து வாங்குவோருக்கு போஸ்டேஜ் உள்பட ரூபா 5-8-0. ஸிங்கப்பூர், பினங், மலாக்கா முதலிய வெளிநாடுகளுக்கு வி. பி. ஆர்டர் இருந்தாலும் முன்பணம் அனுப்பாதவர்களுக்கு மருந்து அனுப்பப்படமாட்டாது.

**விலாசம்:—லேகியம் டிபோ,**
**தபால் பெட்டி நெ. 167, மதராஸ்.**

---

# சர்வதேள் விஷ சஞ்சீவினி.

(ரிஜிஸ்டர்ட் டிரேட் மார்க்.)

**பட்டவுடனே விஷம் பறக்கும்! அழுதவன் சிரிப்பான்!!**

**இதில் குணமில்லையென்று நிரூபிப்பவர்களுக்கு 100-ரூபாய் இனாம்.**




நமது நாட்டிற்கு இது அவசியமாய் ஒவ்வொரு குடும்பத்திலும் சதா கையிருப்பாய் இருக்கவேண்டிய ஓர் ஔஷதமாகும். இது ஆங்கில யூனானி தமிழ் வைத்திய நிபுணர்களால் நன்கு மதிக்கப்பட்டுள்ளது. இதை நாள்பட வைத்திருப்பதால் இதன் குணம் சற்றும் குறையாது. தேள், கட்டுவாய்க்காலி, செய்யான், பாம்பு, எலி முதலியவற்றின் விஷங்களை இரண்டொரு நிமிஷங்களில் இது அடியோடு நீக்கக்கூடியது. எண்ணிறந்தோர் இதனால்சுகமடைந்திருப்பது பிரத்தியக்ஷ அனுபவமானதால் இதைப்பற்றி நாம் அதிகம் கூறவேண்டியதில்லை. இது இரண்டுவித மருந்துகளடங்கியது. இதை உபயோகிக்கும் முறை மருந்தோடு அனுப்பப்படும்.

விலை:—இரண்டுவித மருந்தும் அடங்கிய பாக்கெட் 1-க்கு அணா 6. தபாற்கூலி அணா 4, டஜன் 1-க்கு ரூபா 5. ஏககாலத்தில் 8-பாக்கெட் வாங்குவோருக்குத் தபாற்கூலி இனாம். வியாபாரிகளுக்கு 100-க்கு 25 கமிஷன் கொடுக்கப்படும்.

---

விலாசம்-: தனலட்சுமி கம்பெனி, தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

## நாராயண சஞ்சீவித் தைலம்.

இத்தைலம் முழுவதும் பச்சிலைகளாலும், பசும்பால் முதலிய சிரேஷ்டமான வஸ்துக்களாலும் ஆயுர்வேத முறைப்படி மிகப் பரிசுத்தமாக தயார் செய்யப்பட்டது. இத்தைலத்தில் ஸ்நானம் செய்வதினால் தலைவலி, ஒற்றைத் தலைவலி, மண்டையிடி, மண்டைக்குத்தல், கண் எரிச்சல், கண்களில் நீர் வடிதல், சாலேஸ்வரம், காதுநோய், தலைப்பாரம், அதிக வெய்யிலினால் உண்டாகும் சிரரோகங்கள், சரீரதாபம், மூளைக் கொதிப்பு முதலியவைகள் ஆச்சரியப்படும் விதமாய்த் தீரும். தொடர்ச்சியாய்ச் செய்து வரும் இதன் ஸ்நானங்களினால் நரைத்தமயிர் கருத்துவிடும். மூளையைக் குளிரப்பண்ணி அறிவையும் திடச் சித்தத்தையும் உற்சாகத்தையும் உண்டுபண்ணுவதில் இது நிகரற்றது. சாராய சத்து முதலிய ஆங்கில வாசனைகள் இதில் சேர்க்கப்படவில்லை. சுத்தமான பச்சிலை கிழங்கு புல் முதலிய இந்தியவாசனைகளே சேர்க்கப்பட்டிருக்கின்றன. தினம், இதனைத் தலையில் தடவி வாரிவருவதினால் மயிர் கருப்புப்பட்டைபோல் பளபளப்பாகக் கருத்து ஆலம்விழுதுபோல் நீண்டு வளரும். இன்னும் இது, உஷ்ணத்தைத் தணித்து அபாரமான ஞாபக சக்தியை உண்டுபண்ணி முகவசீகரத்தை உண்டாக்கும். அதிக கஷ்டப்பட்டு வேலை செய்தவர்களும் வெகுதூரம் வழி நடந்தவர்களும் படுக்கும்போது இதில் சிறிது தைலத்தை உள்ளங்கை உள்ளங்கால்களில் தேய்த்துக்கொண்டால் கஷ்டங்கள் எல்லாம் நீங்கிக் காலையில் எழுந்திருக்கும்போது தேகம் வெகு ஆரோக்கியமாய் இருக்கும். 5 பலம் டின் 1-க்கு ரூபா 1, தபால் சார்ஜ் பிரத்தியேகம்.




## ஷி. கியூர் வெள்ளை என்னும்
## கள்ள நோயை 3 தினத்தில் குணப்படுத்தும் மருந்து.

ஆடவர், பல மாதரிடத்தும், வேசியரிடத்தும், பிணியாளரோடும் சம்பந்தப் படுவதினாலும், ஓயாத சிற்றின்ப வநுபோகத்தில் பிரவேசிப்பதாலும் மூலத்தில் அக்கினிகொண்டு, தாது கெட்டு, பிரமேகங்கள், நீரடைப்பு, சதையடைப்பு, வெள்ளை, வெட்டை, கிரந்தி, சூலை, அரையாப்பு, பவுத்திர முதலியவைகள் அவர்க்கு உண்டாகின்றன. அவைகளில் முக்கியமாகிய இரத்தப் பிரமியம், நீர்க்கடுப்பு, நீர்த்தாரை யெரிவு, வெள்ளை, வெட்டை இவைகளுக்கு இதுவே மிகவும் அநுபோகமான மருந்து என்பது உண்மை. இதில் பேதி முதலிய கெட்ட குணங்கள் இல்லை. பத்தியமில்லை. இதை உபயோகிக்கும் விபரப் பத்திரிகை மருந்துடன் அனுப்பப்படும். புட்டி 1-க்கு ரூபா 1.


## கண்நோய் மருந்து.

இது கண் நோய், கண்குத்தல், கூசல், நீர் வடிதல், மங்கல், அர்திமாலை, பீளைகட்டல், சதை வளர்ந்திருத்தல், கண் சிவப்பு, எரிச்சல், கண் இமை புருவம் இவைகளில் வலி, கண் புகைச்சல் இவைகளைக் குணப்படுத்தும். மாணாக்கர்களுக்கும், ஆழ்ந்த பார்வையோடு வேலை செய்பவர்களுக்கும் இது மிகச் சிறந்த ஔஷதம். இதை உபயோகிப்பவர் கண்ணாடி போட வேண்டியதில்லை. புட்டி 1-க்கு அணா 8.



விலாசம்:-தனலட்சுமி கம்பெனி, தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

## கஸ்தூரி மாத்திரை.



சரீரமானது யாதொரு அபாயத்தையும் அடையாதிருக்க விரும்புவோர் பிரதிதினமும் ஆகாரத்திற்குப்பின் தாம்பூலத்துடனாவது தனியாக வாவது இதைச் சாப்பிட்டு வந்தால் இது தந்த நோய்களைத் தடுத்தும், அஜீரணம் பித்தவாய்வு, ஜலதோஷம் இவைகளைக் கண்டித்தும், ஜீரண சக்தியை உண்டாக்கி வாயிலுள்ள அசுத்த நாற்றத்தைப் போக்கி வாய்ப்புண் முதலியவைகளைத் தடுத்தும் சுகமுறச் செய்யும். கர்ப்ப ஸ்திரீகள் இதனை உபயோகித்தால் பிரசகாலத்தில் உண்டாகும் ஜன்னி முதலிய ரோகங்களினின்றும் தப்பித்துக்கொள்ளுவார்கள்.

குழந்தைகள் முதல் கிழவர்கள் வரையில் எப்பருவத்தோர்க்கும் உண்டாகும் சளி, இருமல், சுரம், தலைப்பாரம், நெஞ்சில் கொருகொருப்பு, ஜலதோஷம் முதலியவைகளுக்கு வயதுக்குத் தக்கபடி இதில் ஒன்று முதல் 4-மாத்திரைகள் கொடுக்கச் சுகமுண்டாகும். இது சர்வகுடும்பங்களிலும் இருக்கவேண்டிய முக்கிய ஔஷதம். இதன் விலை புட்டி 1-க்கு அணா 12.


## காப் கியூர் என்னும் க்ஷய அரி.



கப இருமல், இரைப்பு, அல்லது மந்தகாசம், க்ஷயம், சளி இருமல், கக்குவாய் இருமல், பெருத்த இருமல், தொண்டை நோய், சுவாசகாசம், கடினமான ஜலதோஷம், அபாயமான கழை இருமல், தொண்டையெரிச்சல், தொண்டைக் கரகரப்பு, இருமலினால் தூக்கம் பிடியாமை, குளிர்ச்சியான வஸ்துவைச் சாப்பிடுகிறதினாலும் பனியில் நனைவதினாலும் உண்டாகும் சாதாரண இருமல் முதலான வியாதிகளை சாது தினத்தில் இது கண்டித்துக் கோழையை வெளியில் தள்ளி நன்றாய் அவ்வாண்டிருந்தவரை தூங்கச்செய்யும். புட்டி 1க்கு விலை ரூபா 1.


## சர்வமேக நிவாரணத் தைலம்.

இந்தப் பிரசித்திபெற்ற இராஜசஞ்சீவி திராவகத்தை, காலை மாலை இரண்டுவேளைகளிலும் 10 நாட்கள்வரை உட்கொண்டால் வெகு நாட்களாகத் தேகத்தில் ஊறிய மேகரோகங்கள், மேகவாய்வு, தனுர்வாதம், முழங்கால்வாதம், குதிக்கால்வாதம், சகலமான தடிப்புகள், மேகரோகத்தால் உண்டான வெடிப்பு இரணங்கள், குழிப் புண்கள், புரையோடுகிற புண்கள், திமிர் வாய்வு, கைகால் விரல்களில் மேகநீர் தங்கிய நோய்கள், கிரந்தி முதலிய கிரந்திப் புண்ரணங்கள், துடைவாழை படைகள், நகக்கணு நோய், சகல மூலங்கள் முதலிய ரோகங்கள், நெருப்பிலிட்ட பஞ்சுபோல்போகும். இது அநேக ஜனங்களின் துன்பத்தை நீக்கிச் சௌக்கியத்தை உண்டுபண்ணி அதிக அநுபவத்திற்கு வந்தது. கடின பத்தியமின்றி, பால், நெய், கறி முதலியவைகளுடன் சாப்பிடக்கூடியதும், பேதி, இளைப்பு, ஆயாசம் முதலியவைகளை உண்டாக்காமல் சுகமாக்கி வியாதிகளைக் கண்டித்துச் சுகப்படுத்தக்கூடியதுமாகிய உண்மையான மருந்து. இதன் விலை ரூபா 1-8-0.




விலாசம்:-தனலட்சுமி கம்பெனி, தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

## சதபேதி (டிசெண்டரி) பவுடர்.



இரத்தபேதி, சீதபேதி, சீதமும் இரத்தமும் கலந்தபேதி, மலத்துடன் இரத்தம் வருதல், முலக்கடுப்பு அடிவயிற்றுநோய் முதலான வியாதிகள் குழந்தைகள் முதல் பெரியோர்வரையில் யாருக்கிருந்தாலும் 4-வேளையில் இது அவற்றைத் தப்பாமல் கண்டிக்கும்.

ஒரு புட்டியின் விலை அணா 8.



## கர்ண பிந்து.

காதில் சீழ் வடிதல், காது குத்தல், காது கேளாதிருத்தல், காதில் தமைச்சல் முதலிய வியாதிகளுக்கு இந்த மருந்தில் 2-துளி காலை மாலைகளில் காதில் விட்டுவர, காதிலுள்ள நோய்களெல்லாம் நீங்கிவிடும்

புட்டி 1-க்கு அணா 4.

வி. பி. தபாற்கூலி பிரத்தியேகம்.

## சர்வபடை சம்மாரன்.

சரீரத்தின் இடுக்கான இடங்களாகிய தொடையின் இடுக்கு, அக்குள், இடுப்பு முதலிய இடங்களில் சிறிது சிறிதாகப் படர்ந்து இரவில் ஓயாத தமைச்சலைத் தந்து நித்திரையைப் பங்கப்படுத்திச் சரீரத்துக்கு அதிக கஷ்டத்தை உண்டு பண்ணும் படைகள், ஒரே தடவையில் இந்தச் சர்வபடை சம்மாரன் என்னும் தைலத்தை உபயோகித்த மாத்திரத்தில் சூரியனைக்கண்ட பனிபோல் நீங்கும். புட்டி 1-க்கு அணா 4.




## ஓட்டோ லீலா.

எப்போதும் நீங்காத மனோல்லாசத்தை உண்டாக்குவதில் இந்த வாசனைத் திரவியம் மிகவும் சிறந்தது. எல்லோருடைய மனதையும் பிரமிக்கச்செய்து பலர்க்கும் ஆனந்தத்தையும் இன்பத்தையும் தந்து




இதற்கு நிகரான சுகந்த மணமுடைய 'செண்ட்' வேறொன்றுமில்லையென்று ஒவ்வொருவரும் எண்ணும்படி செய்யவல்லது. இதில் ஆல்கஹால் சாராயம் முதலியவைகளின் சம்பந்தமே கிடையாது. இந்த நீங்காத வாசனைத் திரவத்தை உங்களுடைய கைக்குட்டையிலாவது சொக்காய்களின் புறங்களிலாவது தடவிக் கொண்டால் சிறந்த பல புஷ்ப ஜாதிகளின் வாசனை கமழும். ஒரு சுகந்தவனத்தின் மத்தியில் நீங்கள் இருந்தால், அங்கு நின்றும் உண்டாகும் சுகந்த மணத்தை எவ்வாறு அநுபவித்துச் சுகிப்பீர்களோ அதனினும் பதின்மடங்கு சுகந்தத்தை இந்த அத்தரை உபயோகிப்பதனால் அநுபவிப்பீர்களென்பது திண்ணம்.

சிறியம் புட்டி 1-க்கு அணா 10. டை பெரிய புட்டி 1-க்கு ருபா 1

## மயிர் போக்கும் சூரணம்.

இதில் கொஞ்சம் எடுத்துத் தண்ணீரில் குழைத்து உரோமமுள்ள இடத்தில் பூசி ஐந்து நிமிஷத்திற்குப் பிறகு ஒரு கடுதாசி கார்டினாலாவது, நூலைக் கொண்டாவது வழித்தால் மேற்படி மருந்து தடவிய இடத்திலுள்ள உரோம முழுவதும் இலகுவாய் நீங்கி மழமழப்பாயிருக்கும். வேக்காடு எரிச்சல் முதலிய உபத்திரவங்கள் [illegible] புட்டி 1-க்கு அணா 8.

---

விலாசம்:-தனலட்சுமி கம்பெனி, தபால்பெட்டி நெ. 167, மதராஸ்

1874,89